


# உள்ளூராட்சித் தேர்தல் சொல்லும் செய்தி

மார்ச் 27 - ஏப்ரல் 02, 2011

March 27 - April 02, 2011

பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA


ர் ஒளி

வார மலர்



# இரண்டாவது 2003

# வீதிகளை நிரவும் புனிதங்கள்



ஜெரா

**2007 நவம்பர் 27 மாலை 5.25 மணி**

நான் முழுங்காவில் துயிலும் இல்லத்தின் வெண் மணற் பரப்பில் கால்களைப் புதைத்தபடி எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தேன். வரிசை வரிசையாக நீளும் விதைக்கப்பட்ட புனிதங்கள் அமைதியாய் படுத்திருந்தன. ஒவ்வொரு புனிதங்களுக்கு முன்னாலும் அளவுகளில் சாதனைபடைக்கும் மாலைகளும், வர்ணப் பூக்களும், உணவுப் பண்டங்களும் குவிக்கப்பட்டிருந்தன. அதனையும், ஏற்றப்படாத தீபத்தட்டையும் காத்தபடி உறவினர்கள் நின்றனர். தமது பிள்ளைகளை, தமது சகோதரர்களை நினைந்து உருகாத உறவினர்களைக் காணவே முடியவில்லை. மூக்கிழுக்கும் சத்தங்கள் மட்டுமே புனித வெளியின் அமைதியை சீரழித்தன. இவை எதுவுமே அற்ற அநாதைப் புனிதங்களும் சில பூக்களையும், ஏற்றப்படாத தீபத்தட்டையும் வைத்துக் கொண்டு மனிதர்களுக்காகக் காத்திருந்தன. அப் புனிதங்களின் அம்மா, அப்பா, சகோதரர்கள் மட்டக்களப்பிலோ அல்லது அம்பாறையிலோ அல்லது அண்டவெளியிலோ பெரும்பாலும் இருப்பர். 1999 ஆம் ஆண்டில் இருந்து இத் தூய நாளில் அநாதைப் புனிதங்களுக்கு தீபம் ஏற்றுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

1999, 2000 - புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலை பொதுத் துயிலும் இல்லம், 2001- முள்ளியவளை, 2002 - தேராவில், 2003- மணலாறு, 2004- கோடாலிக்கல்லு, 2005- கோப்பாய், 2006- வன்னிவிளாங்குளாம், இவ்வாறு நான் தீபமேற்றிய பட்டியல் இன்றும் நினைவிருக்கிறது. 2007- முழங்காவில், மேஜர் நிலா, அம்பாறை என அடையாளப்படுத்தப்பட்ட புனிதமொன்றின் முன்னால் நான் கொண்டு சென்ற என் உயர மாலையை அணிவித்து விட்டு நின்றேன்.

மாலை 5.30 உலகமே எதிர்பார்த்திருக்கும் அவரின் உரை தொடங்கியது. சனங்களெல்லாம் காதுகளை ஒலிவாங்கிகளுக்குள்ளும், கண்களைப் பெரிதாகக் கட்டப்பட்டிருந்த திரைச் சீலைகளுக்குள்ளும் புகுத்திக் கவனித்திருந்தனர். அந்த உரையில் வீராவேசம் கொப்பளித்தது. வழமைபோல 6.00 மணிக்கு தன்னுரையை நிறைவு செய்து கொண்டார். 6.05 க்கு ஆலய மணிகள் பிரமாண்டமாய் ஒலிக்கும் என்ற நியதி அங்கிருந்தவர்களை திட்டமின்றி செயற்பட வைத்தது. பொதுவான புனிதத் தீபத்திற்கு யாரோ ஒரு 'பெரியவர்' உயிர் கொடுத்ததைத் தொடர்ந்து தயாராய் நின்றவர்கள் அனைவரும் தத்தம் பிள்ளைகளின், சகோதரர்களின் தீபங்களை ஏற்றினர்..

நானும் மேஜர் நிலாவின் தீபத்துக்கு ஒளியேற்றினேன். சொர்க்கம் விஞ்சிய அழகுத் தேசமாக அந்நேரத்தில் அது மிளிர்ந்தது. அழுகுரல்கள் தீபத்தின் சுவாலையை மீறி எழுந்தன. தீபம் ஏற்றிய பின் விதையானவர்களை அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுவதற்காக விடப்படும் இரு நிமிட அமைதிப் பொழுதைக் கூட அது கிழித்தது. தீபங்களும், அழுகையும், நினைவும் பிரகாசமாய் எரிவதைக் கண்டேன்.

''.......... ஒருமுறை உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்.......'' ஓங்கி ஒலித்த இந்த உணர்ச்சிக் கோஷம் இரும்பு மனங்களைக் கூட உடைத்தது. 6.35க்கு வழமைபோல நிமிர்வு பெற்ற மனதோடு முழங்காவில் இருந்து வீடு திரும்பி விட்டேன்.

இந்த நேரத்தில் கட்டுப்பாட்டுத் தமிழ் பகுதிகள் அனைத்தும் வீட்டு வாசல், படலையடி, பாடசாலை, கோயில் போன்ற இடங்களில் புனித வாசனையைக் பூசிக்கொள்ளும். சிவப்பு மஞ்சள் கொடிகள் மற்றும் மங்களகரமான அலங்காரங்கள் சூழலை அழகு படுத்தும். அத்தேசமே அந்நாளில் மாலை 6.05க்குப் பின்னர் சுட்டி விளக்குகளின் உயிர்ப்பில் நனையும். இது சமய, சாதி வேறுபாடற்ற ஒரு புனித நாள். வீரியம் பெருகும் நாள். அந்நாள் பற்றிய படிமம் இப்படித்தான் எங்கள் மனங்களில் படிந்திருந்தது.

**2008.07.12 காலை 5.21 மணி.**

புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்ட பேருந்து ஒன்று முல்லைத்தீவு பரந்தன் வழியாக வவுனியாவிற்குப் பயணிக்கிறது. அதற்குள் ஒர் இரும்பு இருக்கையை நிரப்பியபடி நான். அத்தெருவில் என் கடைசிப் பயணம் அது என்று நான் நினைக்கவேயில்லை. சுற்றிவளைக்கப்பட்டிருந்த யுத்தம் அங்கிருந்து எழுச்சி மிக்க மனிதர்களை எதிர்பார்த்திருந்தது. அதற்காக எதிர்ப்படும் அனைத்து இடங்களிலும் வீரமே பேசியது. அந்தப் பேருந்தினுள்ளும் அது குத்தாட்டம் போட்டது.

''........ வெள்ளடியன் சாவலும் விடியும் போது கூவுது வீட்டுக்குள்ள நீ இருந்து என்ன தயக்கம்.....'' வீரத் தேவாரம் உருவேற்றிக் கொண்டிருந்தது. திடீரென பாடல் நிறுத்தப்பட்டது. ஜன்னலுக்கு வெளியில் எட்டிப் பார்த்தேன். தேராவில் மாவீரர் துயிலும் இல்லம்.

எல்லாத் தலைகளும் துயிலும் இல்லத்தை எட்டிப் பார்த்தன. பார்க்கப் பார்க்க அலுத்துப் போகாத இடமல்லவா அது. விடிபொழுதில் நிராதரவாய் படுத்திருந்தது. சடலங்களின் வரவுக்காய் புதுக்குழிகள் வாய்திறந்தபடி காத்திருந்தன. அழகாய் நிமிர்ந்த வாசலோடு கொஞ்ச செருப்புக்கள் ஒளித்திருந்தன. காலணிகளோடு உட்பிரவேசிப்பதை யாருமே விரும்பவில்லை. தமக்குத் தாமே சில கட்டளைகளை இட்டு வைத்திருந்தனர். நம் தெய்வங்களின் கோயில்கள் போல அதுவும் புனிதப்பட்ட இடம். தேராவில் துயிலும் இல்லம் கடைசியாய் என்னைக் கடந்து விட்டது.

அதனைக் கடக்கும் வரைக்கும் வாகனங்கள் மெதுவாகச் செல்லவேண்டும். ஒலி எழுப்பத்தடை. பாடல்கள் நிறுத்தப்படல் வேண்டும். ஆரவாரங்கள் அமைதிக்குள் உறைந்து விடும். இவைகள் அங்கு வாழும் மூன்று வயதுக் குழந்தைக்கும் தெரிந்த சட்டமற்ற நடைமுறை. விமர்சனம் இன்றி யாவரும் ஏற்றுக்கொண்டனர்.

**2008 நவம்பர் 27 மாலை 5.30**

பல்கலைக்கழக விடுதி மாடியொன்றின் மொட்டைத்தளம். பிளாஸ்ரிக் ரயர்கள் மாலை 6.05க்கு கொழுத்தப்படுவதற்காக தயாராகிக் கொண்டிருக்கின்றன. கீழ் உள்ள சில அறைகளின் மறைவான இடங்களில் மெழுகுதிரிகளும், எண்ணும் படியான பூக்களும் பீதியின் மத்தியில் பீடமேறியிருக்கின்றன.அம் மாடியைச் சுற்றிய மதில் வேலிகளுடன் இராணுவம் வரிசைப் படுத்தப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 40 பேர் வரையிலானவர்கள், தலைகள் மேலே தெரியாபடி அவரின் உரைக்காக கைத்தொலைபேசி வானொலிச் சேவையுடன் கட்டுண்டு இருக்கின்றனர்.

அலைவரிசை இரைச்சலோடு 5.30க்கு தன் இறுதி உரையை ஆரம்பித்தார். அவரின் பேச்சு புலம் பெயர் தமிழர்களுக்காகவும், பிணங்களைத் தின்னும் இந்தியாவுக்காகவும், சர்வதேசத்திற்காகவும் ஆற்றப்பட்டதாகவே இருந்தது.

இம்முறை துயிலும் இல்லங்கள் சுருங்கிக் கொண்டன.பயம்- குரூரம் இவைகளுக்கு நடுவில் முள்ளியவளை, தேராவில் துயிலும் இல்லங்களில் மட்டும் தான் தீபங்கள் உயிர் பெற்றன. விடுதியில் ரயர் கரிய புகையுடன் இறுதியாய் எரிந்து சாம்பலாகியது. கீழே மெழுவர்த்திகள் கொழுத்தப்பட்டன. அறைக்கதவுகளைப் பூட்டிவிட்டு ஒளிந்து கொண்டோம்.

**2009 நவம்பர் 27 நேரமில்லை.**

புனித இடங்கள் மறையத் தொடங்கின. ஒவ்வொரு துயிலும் இல்லங்களையும் பலமாகப் பலப்படுத்தியிருந்தார்கள். அவரின் உரைக்காக பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஏமாற்றத்தின் எரிச்சல் இருந்த நம்பிக்கையையும் இல்லாமல் ஆக்கியது. எங்குமே தீபங்கள் ஏற்றப்படவில்லை. அதைப்பற்றிய பேச்சுக்களும் நினைவுகளும் குறைந்தன. பலர் மறந்தே போயினர். ஆனாலும் வன்னியிலுள்ள சில கிராமங்களில் உயிர் பறிக்கும் எச்சரிக்கைகளையும் மீறி மனிதக் கை மறைப்புக்களின் மத்தியில் 6.05க்கு தீபம் ஏற்றப்பட்டதாம்.

**2010 ஜனவரி 12 மாலை 3.14.**

எனது வன்னி நண்பர்கள் கழக விளையாட்டுப் போட்டியை முள்ளியவளைத் துயிலும் இல்லத்தின் மத்திய பகுதியில் நடத்தி பதக்கங்களை வென்றிருந்தனர். வெற்றியின் மகிழ்ச்சியை அதற்குள் கொண்டாடினர். கும்மாளமும் வெறியாட்டமும் அந்த இடத்தை அலங்கோலப்படுத்தியது. சப்பாத்துக் காலுடன் துள்ளிக் குதித்தனர் அவர்களின் கால்களில் இடிப்பதற்கு சிறுகல் கூட அங்கிருக்கவில்லை. புனிதங்கள் கட்டப்பட்ட சுண்ணாம்பும், சர்க்கரையும் கலந்த திண்மப் பொருட்களின் துண்டுகள் அடியோடு பெயர்க்கப்பட்டு, வீதிகளில் விழுந்திருந்த ஒட்டைகளை நிரப்பப் பயன்படுத்தப்பட்டிருந்தன.



எல்லாப் புனித மையங்களும் இப்படி ஆகிப் போனதாம். தெரிந்து வைத்திருந்தேன். அதே தெருக்கள், அதே மக்கள் , பேருந்துப் பயணம் அந்த இடங்களைக் கடக்கும் போது இப்போதெல்லாம் யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை. அமைதி காப்பதில்லை. சினிமாப்பாடல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. புனிதங்கள் மறைந்து விட்டன. விளையாட்டு மைதானங்களும், முட்கம்பி வேலிகளும், இராணுவக் குடியிருப்புக்களும் புனிதங்களை நிரப்பிவிட்டன.

ஆனையிறவு புனிதத்தை அபகரித்துக் கொண்டது. தீபங்கள், மாலைகள், ஆராதனைகள், தின்பட்டங்கள் ஆனையிறவில் உருக்கொள்ளும் பிரமாண்டப் ''புனித''த்திற்கு படைக்கப்படுகின்றன. புனிதங்களின் நிறம் மாறுகிறது. 'புனிதம்' பற்றிய நினைப்பு பொய்யானதாக மாறிவருகிறது. ✱

# இரண்டாவது 2003




அட்சயன்

இதே பகுதியில் வெளியான முதலொரு கட்டுரையில் லிபியாவை இன்னொரு ஈராக்காக மாற்றுவதற்கான முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டிருந்தேன். அதற்கான முழுப் பணிகளும் மிகத் தீவிரமாகத் தொடங்கப்பட்டுவிட்டதையே அண்மைய லிபிய நிலைமைகள் வெளிக்காட்டியுள்ளன.

யப்பானைப் பூகம்பம் உலுப்பிக்கொண்டிருந்த தருணத்தில் கடாபி தன் ஆதரவுப் படைகளை ஏவிவிட்டு புரட்சியாளர்கள் ஏற்கனவே கைப்பற்றிவிட்ட நான்கு நகரங்களில் மூன்றினை, 6000 பொதுமக்களைப் பலியெடுத்து மீளவும் கைப்பற்றிக் கொண்டார். இதற்கிடையில் கடாபி நாட்டைவிட்டு ஓடிவிட்டார் என்ற செய்தியும் பரவியிருந்தது. ஆனால் அவரோ தனது பலமான விமானப் படையின் உதவியுடன் புரட்சியாளர்களைக் கொன்றொழித்துக் கொண்டிருந்தார். கொல்லப்பட்டவர்களில் அல் ஜெசீராவின் முக்கிய ஊடகவியலாளரான அபு ஹசன் அல் ஜபாரும் ஒருவர். கடாபியின் எல்லை மீறிய இச்செயல்கள் சர்வதேச எதிர்ப்பை வலுப்படுத்தின.

இதனைத் தொடர்ந்து மேற்குலகம், ஜப்பானை விட்டுத் தன் முழுக் கவனத்தையும் லிபியாவின் பக்கம் திருப்பியது. அவசரமாகக் கூட்டப்பட்ட ஐ.நாவின் பாதுகாப்புச்சபை லிபியாவின் கட்டுக்கடங்கா நடவடிக்கைகளுக்கு எதிரான ''மனிதாபிமான யுத்தம்'' ஒன்றுக்கான அனுமதியை வழங்கியது. இதற்கான வாக்களிப்பில் சீனா, ரஷ்யா போன்றவை எதிராக வாக்களித்தன. இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ஆனபோதிலும் அமெரிக்காவினதும் அதன் பரிவாரங்களினதும் பெரும்பான்மை வலு, ஐ.நாவின் அங்கீகாரத்துக்குச் சாதகமாய் அமைந்தது. லிபிய விமானம் பறக்கமுடியாத வான்வெளிப் பிரகடனத்தை முதன்முதலாக அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் வெளியிட்டன.

சர்வதேச நிலைமைகள் தனது கழுத்தை நெரிக்கப்போவதை உணர்ந்து கொண்ட கடாபி உடனடியாக ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை மேற்கொண்டார். புரட்சியாளர் வசமிருந்த கடைசி நகரான பென்காஸியை மீட்கும் முயற்சியைக் கைவிடாமல் தாக்குதல்களை நடத்திக் கொண்டே போர்நிறுத்த அறிவிப்பையும் வெளிப்படுத்தினார். இத்தந்திரத்தை, கடாபியின் தப்பித்தலுக்கான கபட நாடகம் என்று வர்ணித்தார் அமெரிக்க அதிபர் ஒபாமா. லிபிய மக்களைக் காப்பதற்கான உடனடிப் போர் ஒன்றைத் தொடக்குமாறு மத்திய கிழக்கு கடற்பிராந்திய நேட்டோ படைகளுக்கு பென்டகனிலிருந்து உத்தரவு பறந்தது.

கடந்த 19ஆம் திகதி சர்வதேச நேரப்படி 16.45 மணிக்கு 'ஒபரேசன் ஓடிசி டவுன்' ஆரம்பமாகியது. தொடக்கிவைத்தது பிரான்சின் பறக்கும் கழுகுகள். முதல் தாக்குதலிலேயே திரிபோலிற்றில் 54 வரையிலான பொதுமக்கள் ஸ்தலத்தில் பலியாகினர். இதில் அதிகமானோர் சிறுவர்கள். பதின்நான்கு படையினர் கொல்லப்பட்டதாக ரொய்ட்டர் செய்தியாளர் குறிப்பிட்டிருந்தார். 150இக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

லிபியாவைத் தாக்குவதற்கான ஆயுத பலம் அதிகரித்தது. அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் 25 வரையிலான நீர்மூழ்கிகள், ஆயுதம் தாங்கிக் கப்பல்கள் மத்திய தரைக் கடற்பிராந்தியத்தை அலற வைத்தன. பிரான்ஸ், கனடா, ஸ்பெயின், இத்தாலி, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளினது மீ ஒலி ரக விமானங்களுடன் அமெரிக்காவின் பி-2 வகை விமானங்களான போறி, ஸ்ரெளட் போன்றவையும் தாக்குதலைத் தீவிரப்படுத்தின.

இவைகளிலிருந்து முதலிரண்டு நாட்களில் மட்டும் 114 டொமஹவாக் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன. இதில் 94 பேர் வரையிலானவர்கள் பலியாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

திரிபோலி, மிசுரட்டா, டிர்டே, பொன்கஷி, ஜீவரா, சிர்ட், பிசரதா ஆகிய நகரங்களை மையமாக வைத்து நடத்தப்படும் தாக்குதல்களில் லிபிய அரச படையினரின் கவச வாகனங்கள், ஆயுத தளபாடங்கள் எரிந்து சாம்பலாவதை சர்வதேச ஊடங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. திரிபோலியில் கடாபியின் அரண்மனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அக்கட்டடமே தரைமட்டமாகியதுடன், பலர் பலியாகியிருக்கின்றனர். கடாபியைக் காப்பதற்காக அவரின் ஆதரவாளர்கள் பாதுகாப்புக் கேடயமாக அரண்மனையைச் சுற்றி நிற்பதாகவும், அவர்கள் மீதும் விமானத் தாக்குதல், ஏவுகணைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனை மறுத்திருக்கும் ஒபாமா தாம் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவில்லையெனவும், லிபிய இராணுவத்தி Ú @µ u Ûx C « UPøP E Ö Ì u øPÄ Ø, (8ஆம் பக்கம் பார்க்க)

## ஒபரேசன் ஒடிசி டவுண்








தொலையா நினைவுகள்

# அம்மாவின் ஒளிப்படம்

அப்பா என்னைத் தோளிலே சுமந்து கொண்டு அந்த நன்னீர்க் கிணற்றடிக்கு புறப்பட்டுப் போவார். நான் அவரின் தோளிலே அந்த அதிகாலை வேளையிலே அழுதழுது உட்கார்ந்திருப்பேன். எனக்கு சின்னமுத்து வந்து ஆறியிருந்தது. அந்த நாட்களில் தினமும் நூறு வாளி தண்ணீரில் முழுக வேண்டும் என்பது வழக்கம். அப்படிச்செய்தால் அந்த நோயின் வெப்பம் குறையும் என்பது வைத்தியம்.நான் நலம் பெற வேண்டும் என்ற ஆவலோடு என்னைத் தூக்கிச் சுமந்து நீராட்டிய அப்பாவை எண்ணிப் பார்க்கிறேன். வீட்டிலிருந்து அந்த மணற்கிணற்றுக்கு நடந்து போவதற்கு குறைந்தது பதினைந்து நிடங்கள் செல்லும். இப்படி எனக்குரிய குளிப்பு நாட்கள் முடியும்வரை அன்போடு தூக்கிச் செல்வது தனது கடமை என்பதில் அவருக்கொரு மகிழ்ச்சி.

நான் பள்ளிக்கூடம் போக மாட்டேன் என அடம்பிடித்த நாட்களுண்டு. அப்போதெல்லாம் என்னை அன்போடு அரவணைத்து நான் கேட்பதெல்லாம் வாங்கித் தந்து பாடசாலைக்கு அப்பா அழைத்துச் செல்வார். அதேபோன்று அம்மாவின் அன்பிலும் என் எதிர்காலத்தை வளப்படுத்தும் வகையிலான வழிகாட்டல்கள் இருந்ததை எண்ணிப் பார்க்கிறேன். எனது படிப்புக்கு ஊக்கம் தந்து என்னைத் தமக்குத் தெரிந்த படித்தவர் வீடுகளுக்கெல்லாம் கூட்டிச் சென்று ''இவனுக்குக் கொஞ்சம் பாடம் சொல்லிக் கொடுங்கள்'' என்று கேட்ட செயல் தாம் கற்காவிடினும் தனது பிள்ளை கற்க வேண்டும் என்ற ஆர்வமாக வெளிப்பட்டதை உணர்கிறேன். இன்று அத்தகைய அன்பும் ஆதரவும் கொள்ளும் உறவுகள் இல்லை என்பதை எனது முதுகில் தேங்கி விட்ட ஊத்தை அழுக்கு எனக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

நான் எப்போதும் குளிக்கிறேன். எனக்கான எல்லா வேலைகளையுமே நானே செய்கிறேன். ஆனால் இந்த முதுகின் ஊத்தையை என் பெற்றோரைப் போல் உரசிக் கழுவித் துய்மைப்படுத்த இப்பொழுது அவர்கள் இல்லை. அம்மா இறந்து முப்பத்தோராம் நாள் வரும் முன்னரே அப்பாவும் இறந்து போனார். இயற்கையாய் நிகழ்ந்த இந்த மரணங்களைப் பார்த்து அவர்களுக்கிடையே இருந்த அன்பின் உறவின் வலிமை பற்றிப் பலரும் பேசிக் கொண்டது எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர்களின் மரணச்செய்தியை மரண அறிவித்தலாகப் பத்திரிகைகளில் போடும் வழக்கம் அன்றைய நாள்களில் பெரிதாக இருந்ததில்லை. அது பற்றி எவரும் அலட்டிக் கொண்டதும் இல்லை. இயற்கையான மரணங்கள் எங்கள் கிராமத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒன்றோ இரண்டோதான் நிகழும். மரண நிகழ்வு இடம் பெற்ற நாட்களைக் கடந்து பல தினங்கள் எங்கள் உறவினரும் அயலவர்களும் கூடி வந்து சமைத்த உணவைப் பரிமாறி கலந்துண்டு போவது எமது கிராமத்தவரின் வழக்கம். பெற்றோரின் நினைவாக அவர்களின் புகைப்படங்களைப் பெரிதாக்கிச் சுவற்றில் மாட்டி வைப்பதுண்டு ஆனால் எனது பெற்றோரின் புகைப்படங்கள் எதுவுமே என்னிடத்தில் இருக்கவில்லை.

அவர்களின் புகைப்படம் ஒன்று அவர்கள் திருமணம் செய்த காலத்தில் நகரத்திற்குப் போனபோது எடுத்தது. நான் பள்ளி செல்லும் நாட்களில் எனது ஓலை வீட்டுச் செத்தையில் மாட்டப்பட்டிருந்தது. கண்ணாடி உடைந்து போனதால் அந்தப் படத்தை மாத்திரம் அம்மா தனது புடைவைகளோடு ரங்குப் பெட்டியில் வைத்திருந்தார். அது ஒரு அழகான கறுப்பு வெள்ளைப்படம். அம்மா ஒரு ஸ்ருலில் இருக்க அப்பா அழகாக அருகில் நிற்கும் காட்சி. நான் அதைப் பள்ளிக்கூட நண்பர்களுக்குக் காட்டுவதற்காக எடுத்துச் சென்றதாக ஒரு ஞாபகம். அது பின்னர் எவ்வாறு எங்கு தொலைந்ததோ தெரியவில்லை.

என்றோ ஒரு நாள் கொழும்பில் வேலை பார்த்த அண்ணா இங்கு வந்தபோது அம்மாவுடன் தான் எடுத்துக்கொண்ட படம் ஒன்றை எனக்குக் காட்டினார் அதிலிருந்த அம்மாவின் படத்தைத் தனியாக எடுத்துப் பெரிதாக்கி பிறேம் போட்டு நகரத்தில் இருந்த எனது புதிய வீட்டில் தொங்க விட்டிருந்தேன். அந்த நாள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து நடையாக மனைவி பிள்ளைகளோடு தள்ளுண்டு இழுபட்டுச் சென்றபோது நாங்கள் பெரிதாக எதையுமே எடுத்துச் செல்லவில்லை. திரும்ப நாங்கள் வீட்டுக்கு வருமுன்னர் யார் யாரோவெல்லாம் எங்கள் வீட்டில் தங்கி இருந்து போய்விட்டார்கள். நாங்கள் வீட்டுக்கு மீண்டபோது வீடு மாத்திரமே பலத்த சிதைவுகளோடு எஞ்சியிருந்தது. அங்கே அம்மாவின் படமும் இருக்கவில்லை.

ஒவ்வொரு வருடமும் எனது அப்பா அம்மா இருவரதும் நினைவுநாள்களும் ஒருகுறித்த மாத இடைவெளிக்குள்ளாகவே வரும். அந்த நினைவு நாள்கள் இன்னும் சில தினங்களுக்குள் வரவிருந்தன அந்த நினைவு நாள்களின்போது அவர்களின் புகைப் படங்களைப் பத்திரிகையில் பிரசுரித்து ஒரு நினைவஞ்சலி விளம்பரம் போட முடியவில்லையே என்ற கவலையும் வருடாவருடம் வந்து போய்க்கொண்டே இருக்கிறது.

நெடுந்தீவு மகேஷ்

என்றோ ஒரு நாள் எனது மகள் எனது அம்மாவின் புகைப்படத்தைப் பார்த்து வரைந்து பாதுகாத்த படம் ஒன்று இப்பொழுது என்னிடம் இருக்கிறது. அந்த நினைவுநாள் அஞ்சலி விளம்பரத்தில் அந்தப் படத்தைப் போடலாமா என எண்ணினேன்.

இப்பொழுதுதான் முன் வீட்டிலிருந்து கனேசண்ணை வந்திருக்கிறார். அவரிடம் விசயத்தைச் சொன்னேன்

''பேப்பரிலை போடுறதுக்குப் படம் வேணுமென்னடில்லை. ஆனா இந்தப் படம் போட்டு விளம்பரம் போடுற ஆசை உங்களுக்கு ஏன் வந்தது?'' என்று கேட்டார் அவர்.

அக் கேள்வியை எனக்குள்ளே கேட்டுக் கொண்டே ''எல்லாருந்தானே தங்கட சொந்தக்காரருக்கும் சிநேகிதருக்கும் வாற நினைவு நாள்களில பேப்பரில அஞ்சலிக்குப் படம் போடுறாங்கள்'' என்றேன் நிதானமாக.

''அது நல்லதுதான்; ஆனால், இப்ப பேப்பர் பாக்கிறனீங்களே எந்த விதமான விருப்பமும் ஈடுபாடு இல்லாமலே பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் காசு குடுப்பிச்சுப் பேப்பரில போடுறாங்கள். ஒவ்வொரு தனி மனிதனும் செய்யிற சேவைகளைப் பாராட்டத்தான் வேணும். ஆனாக் காசு கொடுத்து தனக்குத் தானே பேப்பரில பாராட்டுப் போடலாம் என்ற வகையிலும் சில விசயம் பெருமைக்காகச் செய்யப்படுகுதெல்லோ. அதைத்தான் நான் சொல்லிறன். மரணம், பிறந்தநாள். அதுகளை விருப்போட போடுறதில ஒரு உணர்வு சார்ந்த, திருப்தியும் மனநிம்மதியும் இருக்குது தான். பொய்யாப் புகழுக்காய் பெருமைக்காய் செய்யிறதுகளைத்தான் நான் சொல்லுறன். உண்மையான அன்பும் நன்றியும் பாராட்டும் மனத்திலும் உணர்விலும் இருந்தாலே போதும். படம் இல்லையெண்ட கவலையை விடுங்கோ'' என்றார் கனேசண்ணை. என் பெற்றோரின் பண்பான பாசம்மிகுந்த தோற்றங்கள் என்மனத் திரையில் படமிட்டன.

புகைப்படம் இல்லையென்ற கவலையை மறந்தேன்.. ஆனால் என். பெற்றோரின் தோற்றம் என் உணர்வுகளோடு உறவாட உள்ளம் அவர்களை ஆலிங்கனம் செய்தது. * * *



# காதலால் துவளாத ஜெயபாலன்

காதல் எனும் வலையில் சிக்காதோர் மிகச்சிலரே. இந்தக் காதல் ஓட்டத்தில் வெற்றிக்கம்பத்தைச் சென்றடைவோரும் ஒரு சிலரே. ஆனால், தோல்வியில் முடியும் காதல் கதைகளோ அனேகம். அவ்வகைக் காதல் கதைகளே உலகம் வியந்து போற்றும் வகையில் என்றும் பேசப்படுகின்றன. இங்கே தோல்வியில் முடிந்த காதல் கதை ஒன்று துவண்டு போகாத நெஞ்சத்தோடு காதலியை வாழ்த்தும் வண்ணத்தைக் காண்கின்றோம்.

அந்த அழகு ரதியைக் காதலித்து, அவள் மீதான காதல் மயக்கத்தில் அவள் பின்னால் அலைந்து அவளோடு கதைபேசிக் கூடிக் களித்த நாட்கள் எத்தனை? அவை அனைத்துமே உருண்டோடி எத்தனை வருடங்கள் கடந்து விட்டன. அந்த நாள் மகிழ்வை நிகழ்வுப் பதிவாய் தன் மனத்திருந்திக் காதலியோடு கழித்த நாள்களை மீட்டுப் பார்த்து இன்புற்றுச் சிந்து பாடுகிறான் ஒரு கவிஞன்.

"மாரி மழைக்கரத்தால் பாய் விரித்த பச்சைப் புல்லும்,
பச்சைப்புல்லைச் சூடிக் கொண்டு பவுசு காட்டும் வண்ணப்பூவு
சிட்டாய்ப் பறந்து வந்து சிந்து பாடத் துடிக்குதடி
நீ எட்டாது போன பின்னும் உன்னை நெஞ்சு நினைக்குதடி"

எட்டாது போன தன் காதலியை மனத்திருத்தி மகிழும்தோறும், இயற்கையின் அழகுடன் அவள் நினைவை மேயவிடும் போதும், காதலின்பத்தால் துள்ளும் கவிஞரின் உள்ளத்தைக் காணுகின்றோம் அவள் மீது அவன் கொண்டிருந்த உண்மைக் காதலின் உணர்வுக் கோலத்தைக் கவிஞர் தனது கவிதை வரிகளில் இங்கே தந்துள்ளார்.

மாரி மழைக்காலத்தில் செழிப்பாய் வளர்ந்த புற்றரையில் அமர்ந்திருந்த காலம் அந்தப் புற்றரையை அழகிய பாய் விரிப்பாய்க் காணும் மனம் அவ்விடத்தில் பச்சைப் புல் நுனியில் மலர்ந்திருந்த பூ ஒய்யாரமாய்ப் பூச்சூடி நிற்கும் காதலியைப் பெருமிதமாய்க் கண்டு கடந்து போன அந்தக் காதல் நாள்களின் மகிழ்வுக் கோலத்தைச் சிந்து பாடத் தூண்டுகிறது

அவள் அவனுக்குக் கிட்டாது எட்டாது போனாலும் நெஞ்சு நினைக்கிறது

"கூடிலாய் குருவிக் கூடு குலைந்து போன வாடைக்காலம்
காதலெனும் தங்கத் தோணி கவிழ்ந்து போன வாழ்க்கைக் கோலம்
வண்டாய்ப் பறந்து வந்து மலர்ச் சோலை நடுவினிலே
உன்னை எண்ணி உபவாசம் இருக்கிறதே இன்பம் கண்ணே."

காதலியை எண்ணி எண்ணியே உபவாசம் இருப்பதில் இன்பம் காணும் கவிஞர் வாடைக்காற்றில் குலைந்த குருவிக் கூடாகவும் கவிழ்ந்துபோன தங்கத் தோணியாகவும் தனது காதலியை இழந்து போன துயரத்தை மலர்ச் சோலையில் இருந்து நினைக்கும் தோறும் இன்பம் என்கிறார்.

"நாளை ஒரு நாளையிலே நடை வரும் கோலத்தில்
ஏழை என்னைக் காணக்கூடும் இதயம் கொஞ்சம் நோகக்கூடும்
யார் மீதும் குற்றமில்லை கோபம் கொள்ள ஞாயமில்லை
ஆசையை விழுங்கிவிட்டு அறுகாக வேர்பரப்பி
மூங்கிலாய்த் தோப்பாகி வாழவேண்டும் எந்தன் கண்ணே."

காதல் தோல்வியடைந்தாலும் காதலியின் பால் கொண்ட அன்பையும் அவளின் உறவால் பெற்ற இன்பத்தையும் இனிய கவிதையாய் சொரிகின்றார்.

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் நெடுந்தீவைச் சேர்ந்தவர். அவரது கவிதைகள் பொருட்சிறப்புப் புலமை மகத்துவமும் உடையவை. சூரியனோடு பேசுதல், ஓர் அகதியின் பாடல், உயிர்த்தெழுகின்ற கவிதை, ஜெயபாலன் கவிதைகள் ஆகிய நூல்களின் ஆசிரியர். 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' எனும் குறுங்காவியத்திலிருந்து தேர்ந்த கவிதை வரிகளே இவை.

அவரது கவிதைகளின் சிறப்புக் கருதி இன்றைய பாடநூல்களில் அவை எடுத்தாளப்படுகின்றன. அண்மையில் வெளிவந்த ஆடுகளம் எனும் இந்தியத் திரைப்படத்தில் பிரதான பாத்திரம் ஏற்று அவர் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மைதிலி.தேவராஜா

# உள்ளூராட்சித் தேர்தல் சொல்லும் செய்தி




சந்திரசேகர ஆசாத்

இலங்கைக்கேயுரிய வழமையான அம்சங்களான வன்முறைகள், கொலைகள், பொய் வாக்குறுதிகள், போர் வெற்றியின் ஆர்ப்பரிப்புகள், தேசத் துரோகக் குற்றச்சாட்டுகள், சவால்கள் என்பனவற்றில் எவ்வித குறைபாடுகளுமின்றி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் திருவிழா இடம்பெற்று நிறைவுபெற்று விட்டது. அவற்றின் முடிவுகளும் வெளிவந்து வெடிகளும் கொளுத்தப்பட்டு கொண்டாட்டங்களும் இடம்பெறுகின்றன.

நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டமை காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட சில பிரதேசங்களிலும், கண்ணிவெடி அகற்றப்படாமையினால் முல்லை மாவட்டத்தில் சில பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெறவில்லை. இப்பிரதேசங்களில் அரச சார்புக் கட்சிகள் படுதோல்வியைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படக் கூடும் என்பதனால் திட்டமிட்டே பிழையாகத் தேர்தல் வேட்பாளர்கள் சிலரின் விண்ணப்பங்கள் நிரப்பி ஒப்படைக்கப்பட்டதாகவும் மக்கள் மத்தியில் சில அபிப்பிராயங்கள் நிலவியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஆளும் கட்சி அமோக வெற்றி**

எப்படியிருந்த போதிலும், தென்னிலங்கையில் ஆளும் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், வடக்குக் கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அமோகமான வெற்றியைப் பெற்றுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி மிகமிகக் குறைந்தளவு சபைகளைக் கைப்பற்றியதன் மூலம் எதிர்பாராத பெரும் தோல்வியைச் சந்தித்தது. கடந்த காலங்களில் தென்மாகாணங்களில் செல்வாக்குச் செலுத்தி வந்த ஜே.வி.பி. ஒரு சபையைக் கூடக் கைப்பற்ற முடியாமல் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

ஆளும் கட்சி பெற்றுக் கொண்ட இவ்வெற்றிக்கு எதிர்கட்சியினர் ஊழல், மோசடி, பணப்பரிமாற்றம், அதிகார துஷ்பிரயோகம் போன்ற பல காரணங்களைக் கற்பிக்கலாம். ஆனால் ஆளும் கட்சிக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்கி உள்ளனர் என்பதை எவருமே மறுக்க முடியாது.

ஆனால் இந்தேர்தலில் ஐம்பது சதவீதத்தினருக்குக் குறைந்த தொகையினரே வாக்களித்துள்ளனர். இது ஒட்டுமொத்தமாக எல்லா அரசியல் வாதிகள் தொடர்பாகவுமே ஒரு பகுதி மக்கள் நம்பிக்கையீனமும் விரக்தியும் அடைந்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது என்பதையும் மறந்து விடமுடியாது.

ஆனால் அதற்காக ஆளும் கட்சிக்கு மக்கள் வழங்கிய அமோக ஆதரவை நிராகரித்து விடவும் முடியாது.

அப்படியானால் இன்றைய ஆட்சியில் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவு, அரச ஊழியர்களுக்கு வேதனம் உயர்த்துவது உட்பட நிறைவேற்றப்படாத தேர்தல் வாக்குறுதிகள், உயர்ந்து வரும் வறுமை நிலை, கொழும்பில் காலம் காலமாக குடியிருந்த ஒரு பகுதி வறிய மக்களை அவர்களின் இருப்பிடங்களை விட்டு விரட்டி விட்டு அந்த நிலத்தை அந்நிய நிறுவனங்களுக்கு குத்தகையாகக் கொடுத்தல் என்பன போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளார்களா என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

அடிப்படையில் இப்படியான விஷயங்களை மக்கள் எப்போதுமே ஏற்றுக் கொள்வதில்லை. அப்படியானால் எப்படி வந்தது இந்த வெற்றி? ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் இவ்வளவு சபைகளைக் கைப்பற்ற முடிந்த காரணம் என்ன?

**ஆளும் தரப்பின் வெற்றிக்கான காரணம்.**

இன்று இலங்கையின் அரசியலில் ஓங்கி நிற்கும் அம்சங்கள் இரண்டு. ஒன்று போர். போரின் வெற்றி, போரின் பின்னான தேசிய சர்வதேச சூழ்நிலைகள். மற்றது, மக்கள் நாளாந்த வாழ்க்கைக் கொண்டு செல்ல முகம் கொடுக்கும் பிரச்சினைகள்.

> **ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் போரின் வெற்றியை ஆதரித்தனர். அந்த வெற்றிக்குத் தாமும் பங்களித்ததாக உரிமை கொண்டாடினர். போர்க் குற்றங்கள் தொடர்பாக வாயைத் திறக்க மறுத்தனர்.**

தற்சமயம் இலங்கை போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகப் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கிறது. வெள்ளைக் கொடி ஏந்தி சரணடைய வந்த போராளிகளைச் சுட்டுக் கொல்ல உத்தரவிட்டமை, சனல் 4 தொலைக்காட்சிச் சேவை வெளியிட்ட ஆதாரங்கள், அமெரிக்கத் தூதுவர் ராஜாங்கச் செயலருக்கு அனுப்பிய கேபிள் தகவல்கள் தொடர்பாக விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்கள் என்பன இலங்கையின் ஆட்சியாளர்களைப் போர்க்குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளன. அதிலும் அண்மையில் மத்திய தென் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான ராஜாங்கச் செயலர் விடுத்த கண்டிப்பான எச்சரிக்கையும் இலங்கை அரசைத் திணற வைத்துள்ளது. ஆனால் சர்வதேச அளவில், தான் சந்திக்கும் பாதகமான நிலைமைகளை மிகச் சாதுரியமாக தேசிய ரீதியாக தனக்குச் சாதகமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையாண்டு வருகிறார். தான் உயர்ந்த அர்ப்பணிப்பின் மூலம் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டதாகவும், அதன் காரணமாகவே சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது எனவும் பிரசாரம் செய்து வருகிறார். தான் போரை வெற்றி கொண்டு தேசத்தைக் காப்பாற்றிய ஒரு நாயகன் என்ற பிம்பத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளார். இவ்வகையில் சிங்கள மக்கள் இவரை ஒரு வெற்றி வீரனாகவும் தியாகியாகவும் நோக்குவதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

**எதிர்க்கட்சிகள் என்ன செய்திருக்க வேண்டும்?**

உண்மையான, நேர்மையான எதிர்க்கட்சிகள் என்றால் இந்த மாயையைக் கலைக்கும் வகையில் தங்கள் வியூகங்களை வகுத்திருக்க வேண்டும். அதாவது, ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இனப்பிரச்சினையைச் சமாதான வழியில் தீர்க்கும் வகையில் பேச்சுகள் இடம்பெற்ற போது அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் ஆணையின் பேரில் இராணுவம் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேறுவதற்கு ஏற்க முடியாத நிபந்தனைகளை விதித்தும், சர்வதேசம் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல்களைத் தாக்கியழித்தும் சமாதான விரோதமான காரியங்கள் இடம்பெற்றன என்பதை அம்பலப்படுத்தியிருக்க வேண்டும். இப்போரின் காரணமாக படையில் இணைந்து போரிட்டு மடிந்த சிங்கள இளைஞர்கள் தொகையையும், விதவையாகிவிட்ட சிங்கள இளம் பெண்களையும் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். இப் போரால் ஏற்பட்ட பெரும் பொருளாதார இழப்பை நினைவுபடுத்தியிருக்க வேண்டும். இன்று வரை ஆயுதக் கொள்வனவுக்குக் கடன் வாங்கிப் பணம் மீளச் செலுத்தப்பட்டு வருவதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

அது, மஹிந்தவின் கருத்துகள் உருவாக்கிய 'தான் தேசிய வீரன்' என்ற பிம்பத்தை உடைத்தெறிந்து அவர் அரசியல் நலன்களுக்காக மக்களையும் தேசத்தையும் அழிக்கும் ஒரு தேசவிரோதி என்ற உண்மையைத் தெளிவுபடுத்தியிருக்கும்.

**ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பியின் இரட்டைவேடம்**

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் போரின் வெற்றியை ஆதரித்தனர். அந்த வெற்றிக்குத் தாங்களும் பங்களித்ததாக உரிமை கொண்டாடினர். போர்க்குற்றங்கள் தொடர்பாக வாயைத் திறக்க மறுத்தனர்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை போரைத் தலைமை தாங்கி வழி நடத்தியவரையும், போருக்கு வெளியே நின்று ஆதரவு வழங்கியவர்களையும் ஒப்பிடும் போது மஹிந்தவே அவர்களுக்கு மாபெரும் தேசிய வீரனாகத் தென்பட்டதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

**அரசு சிருஷ்டிக்கும் மாயத் தோற்றம்**

அடுத்து, இன்றைய அரசாங்கம் அபிவிருத்தி என்ற பேரில் அந்நிய முதலீட்டாளர்களை வலிந்து அழைக்கிறது. சுற்றுலாப்பயணிகளைக் கவரும் விதத்தில் போக்குவரத்துகள், சுற்றுலா மையங்கள் அழகுபடுத்தப்படுகின்றன. அந்நிய முதலீட்டாளர்களின் அசுர மின்சாரப் பசிக்குத் தீனி போட ஏராளமான மின்சார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. எங்கும் கட்டிடங்கள் எழும்புகின்றன. இவ்வெளித் தோற்றங்களைக் கண்டு சிங்கள மக்கள் நாடு அபிவிருத்தி அடைவதாக நம்புகின்றனர்.



ஆனால் இவற்றின் மூலம் அந்நிய முதலீட்டாளர்கள் எமது மூல வளங்களையும், மலிவான விலையில் மனித உழைப்பையும் கொள்ளையடித்துப் பெரும் லாபம் ஈட்டுகின்றனர். இலங்கை மக்களோ அந்நிறுவனங்களின் கூலி உழைப்பாளர்களாகவும், சுற்றுலாப்பயணிகளின் எடுபிடிகளாகவும் அவர்களின் பாலியல் பசி தீர்க்கும் விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் நிலைமையுமே ஏற்பட்டுள்ளது.

அபிவிருத்தி என்ற கானல் நீரைக் காட்டியே விலைவாசி உயர்வு, வறுமை, வேலையற்றோர் பிரச்சினை, சம்பள உயர்வு என்பன வெகுவிரைவில் தீர்க்கப்படும் என்ற மாயை உருவாக்கப்படுகிறது. நாடு தொடர்ந்து கடனிலும், வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதிலும் அமிழ்ந்து போகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைக்கு இணங்க இலவசக்கல்வி, இலவச மருத்துவம், அரச செலவீனங்கள் என்பன மட்டுப்படுத்தப்படுகின்றன.

உலக மயமாக்கல் என்ற வலைக்குள் இலங்கை தன்னை மாட்டிக் கொண்டு சுய சார்புப் பொருளாதாரத்தை இழந்து ஏற்றுமதி இறக்குமதி சார்ந்த தங்கு நிலைப் பொருளாதாரத்துக்குள் தன்னைப் பிணைத்துக் கொண்டமையே இன்றைய பொருளாதாரப் பின்னடைவுக்கும், நாட்டில் வறுமை வீத அதிகரிப்புக்கும் காரணமாகும்.

**பொருளாதாரப் பின்னடைவுக்கு வழி வகுத்தது ஐ.தே.கட்சியே**

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ ஜே.வி.பியோ இந்த அடிப்படைப் பிரச்சினையை வெளிக் கொண்டு வரத் தயாரில்லை. இந்த நாட்டைத் திறந்த பொருளாதாரக் கொள்கைக்குள் தள்ளி விட்டு சுயசார்புக் கட்டமைப்பைச் சீரழித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் தான். விலைவாசி உயர்வு, சம்பள உயர்வின்மை போன்றவற்றைக் குறித்து கோஷிப்பதுடன் தம்மை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் பொருளாதாரம் தொடர்பாகவும் ஒரே கொள்கையுடையோர் மோதும் போது மக்கள் தங்கள் தலைவனாகவும் ஒரு தேசிய வீரனாகவும் மஹிந்தவைக் கருதி ஏற்று ஆதரவளித்துள்ளனர். இது தென்னிலங்கையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகள் தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்தியாகும்.

இதே போன்று வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்புக்கு ஏகோபித்த ஆதரவு வழங்கியதன் மூலம், அவர்களுக்கு மக்கள் வழங்கிய பொறுப்பை நிறைவேற்ற மேலும் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். ✱

சுடர் ஒளி

27, மார்ச். - 02, ஏப்ரல். 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738065
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## கறுப்பு - வெள்ளை பேதமில்லை

அமெரிக்க அதிபராக பாரக் ஒபாமா தெரிவு செய்யப்பட்ட போது உலகமே அதனைக் கொண்டாடியது. உலகில் தலைவிரித்தாடிய நிறவெறியின் இறுதி எச்சமும் அவர் பதவிக்கு வந்ததன் மூலம் அழிக்கப்பட்டு விட்டதாக உலக மக்கள் கருதினர். அதனால் அவரைத் தங்கள் தலைகளில் தூக்கி வைத்துக் கொண்டாடினர்.

ஒடுக்கப்பட்ட மக்களும், விடுதலைக்காகப் போராடியவர்களும், போராடுபவர்களும் ஒபாமா அடைந்த வெற்றியைத் தங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதினர். ஏனெனில், கறுப்பினத்தவர்கள் அளவிற்கு இந்த உலகில் ஒடுக்குமுறையைச் சந்தித்த மக்கள் கிடையாது. உலகில் உள்ள அத்தனை துன்பங்களும் அவர்களுக்காகவே வடித்தெடுக்கப்பட்டவையாக ஒரு காலத்தில் இருந்தன.

ஆபிரகாம் லிங்கன், மாட்டின் லூதர் கிங் என தலைவர்கள் அமெரிக்கக் கறுப்பின மக்களைத் துன்பங்களில் இருந்து மீட்டெடுத்தார்கள். இன்று நிறவெறி அமெரிக்காவில் இல்லை என்றாகி விட்டது. ஒபாமா அமெரிக்க அதிபரான போது இனவெறி இந்த உலகில் இருந்து அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது என்று உலகமே நம்பியது.

ஒடுக்கப்பட்டவர்களின் துன்பங்களையும் அவலங்களையும் அனுபவித்தவர்களின் பரம்பரையில் வந்தவர், இந்த உலகின் ஒழுங்கை நிர்ணயிக்கும் முக்கிய சக்தி மிக்க நாட்டின் தலைவராக அமர்ந்திருந்தார். உலகெங்கும் அதிகாரங்களால் ஒடுக்கப்படும் மக்களுக்கு இது ஆறுதல் தரும் செய்தியாக இருந்தது.

காந்தி போல், மாட்டின் லூதர் கிங் போல் ஒபாமாவும் மனித குலத்தின் ரட்சகர் என்று நினைக்குமளவுக்கு அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக உலகெங்கும் நோக்கப்பட்டார்.

தமிழர்களும் அவரை அப்படித்தான் நினைத்தார்கள். அரசால் ஒடுக்கப்படும் தங்கள் துன்பம் அவருக்குப் புரியும் என்று நம்பினார்கள். அதனால்தான் ஆயுத விடுதலைப் போராட்டம் அதன் முடிவின் விளிம்பில் நின்று கொண்டிருந்த போது, அமெரிக்கா வந்து எப்படியாவது காப்பாற்றும் என்று தாயகத்திலும் புலத்திலும் இருந்த பெரும்பாலான தமிழர்கள் தெரிந்தோ தெரியாமலோ நம்பினார்கள்; எதிர்பார்த்தார்கள்.

உண்மை அவர்களுக்குச் சார்பாக ஒருபோதும் இருக்கவில்லை. அமெரிக்கா யாரையும் காப்பாற்றவில்லை; கப்பல்களை அனுப்பவில்லை; ஏவுகணைகளை இலங்கையைக் குறிபார்த்து நிறுத்தவில்லை. எல்லாம் முடிந்த பின்னர் போர்க் குற்றங்கள் நிகழ்ந்தன என்ற குற்றச்சாட்டுக் குறித்து விசாரணைகள் வேண்டும் என்கிறது.

ஈழத் தமிழினம் ஒபாமாவை நம்பியதற்கு முக்கிய காரணம் அவர் ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து வந்தவர் என்பது மட்டும்தான். அமெரிக்கா என்கிற வல்லாதிக்க சக்தியின் முன் அந்த வாதம் வலுவற்றதாகி விட்டது.

இப்போது லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த ஆரம்பித்திருக்கிறது. சீனியர் புஷ்ஷுக்கு குவைத் போர், ஜூனியர் புஷ்ஷுக்கு ஆப்கானிஸ்தான், ஈராக் போர் என்பது போல் ஒபாமாவுக்கு லிபியப் போர்.

40 வருடங்களாகத் தனது இறுக்கமான கரங்களால் லிபியாவைக் கட்டியாண்ட அதிபர் கடாபி, பொது மக்க்ள் மீது போர் தொடுத்தார் என்பதைக் காரணம் காட்டி அமெரிக்கா ஆரம்பித்த தாக்குதலில் சிக்கி பொதுமக்கள் உயிரிழந்தமை, அவர்களின் கட்டடங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பான செய்திகளும் ஒளிப்படங்களும் வெளிவர ஆரம்பித்து விட்டன.

மேற்குலகுடன் முரண்டு பிடிக்கும் கடாபியை அதிகாரத்திலிருந்து அகற்றுவதும் வளச்சுரண்டலுமே அமெரிக்கா தலைமையிலான கூட்டணியின் தாக்குதலுக்குக் காரணம் என்பது வெளிப்படை.

இதையேதான் ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஜோர்ஜ் புஷ்களும் செய்தனர். இப்போது ஒபாமாவும் செய்கிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்துவதில் கறுப்பு வெள்ளை என்ற பேதம் ஏதுமில்லை என்பதைத்தான் இது காட்டி நிற்கிறது.

# இலங்கை குறித்த பாகிஸ்தானின் அக்கறை?

பலம் மிக்க இரண்டு ஆடவர்கள் ஒரு மணமகளுக்குச் சண்டையிடுவதைப் போன்றது என தென்னாசியப் பிராந்தியத்தின் உறவினைப் பொதுவாக விபரிப்பார்கள். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை என்ற இந்த முக்கோணத்தில் ஒப்பீட்டு ரீதியில் பலம்பொருந்திய இந்தியாவும் பாகிஸ்தானும், இலங்கை என்ற கவர்ச்சிகரமான தங்களின் அயல்நாட்டினைத் தம்வசப்படுத்துவதற்கு முனைவதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியாவுக்கு எதிரான தனது முனைப்புக்களின்போது பாகிஸ்தான் எப்படி ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்துகிறதோ அதேபோன்றதொரு நிலைமையை பாகிஸ்தான் இங்கும் எதிர்பார்க்கிறது. தென்னாசியாவினது இராசதந்திர உறவுகள் தொடர்பாக ஆராயும் போது பாகிஸ்தானின் தலைமையிலான கூட்டணியொன்று இந்தியானை எதிர்க்குமொரு கருத்து நீண்ட பல காலமாகவே இருந்துவருகிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் பலவீனமானதொரு தரப்பாக இருக்கும் பாகிஸ்தான் தனது அண்டை நாடுகளான பங்களாதேஸ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை இணைத்துக்கொண்டு தனது பிரதான எதிரியான இந்தியாவிவை நோக்கிய நகர்வுகளை மேற்கொள்ளும் விருப்பத்துடன் செயலாற்றுகிறது.

பாகிஸ்தானின் இந்த முயற்சி இதுவரை கைகூடாத போதும், தென்னாசியப் பிராந்தியத்தியத்திலுள்ள இதர நாடுகளுடன் பாகிஸ்தான் கொண்டிருக்கும் இருதரப்பு உறவுக் கொள்கையானது இந்தியாவை எதிர்ப்பது என்றதொரு அம்சத்தின் அடிப்படையிலேயே கட்டப்பட்டிருக்கிறது.

இலங்கையுடனான தனது உறவினை மேலும் விரிவாக்குவதற்குப் பாகிஸ்தான் முன்னெடுக்கும் புதிய நகர்வொன்று இந்தப் பிராந்தியத்தில் கவனத்தினைக் குவித்திருக்கிறது.

இவ்விரண்டு நாடுகளுக்கிடையிலும் கடந்த பல ஆண்டுகளாக சுமுகமானதொரு உறவே இருந்து வந்திருக்கிறது. இருப்பினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் கலாச்சார மற்றும் மொழி சார் பிணைப்புகள் வலுவாக இருப்பதன் விளைவாக, இலங்கையுடன் அதிகம் நெருங்க முனையும் பாகிஸ்தானின் முயற்சிகள் எதுவும் இதுவரை கைகூடவில்லை.

எவ்வாறிருப்பினும் கடந்த பல ஆண்டுகளாக தமிழ் ஆயுதக் குழுக்களுடன் போரில் ஈடுபட்டு வந்த இலங்கை அரசாங்கத்திற்குத் தனது படைத்தளபாட உதவிகளை வழங்கியதன் ஊடாக பாகிஸ்தான் இலங்கையை நெருங்க முனைந்தது.

1999 தொடக்கம் 2008 வரையிலான முசாரப்பினது ஆட்சிக்காலத்தில் தங்குதடையற்ற படைத்தளபாட உதவிகளை இலங்கைக்கு வழங்கியதன் ஊடாக இலங்கைக்கு அதிக ஆயுத தளபாடங்களை வழங்கிய நாடுகளின் வரிசையில் பாகிஸ்தான் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கை அரசு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பாகிஸ்தான் வழங்கிய படைத் தளபாடங்கள் பெரும் பாங்காற்றின என்பது உலகறிந்த விடயம்.

ஆட்சியில் இருப்பது இராணுவ அரசாங்கமாக இருக்கலாம் அன்றில் சனநாயக அரசாங்கமாக இருக்கலாம், ஆனால் இராணுவத்தினரது எண்ணங்கள் மற்றும் கரிசனைகளின் அடிப்படையிலேயே பாகிஸ்தானுக்கும் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு உறவின் தன்மை அமைகிறது.

பாகிஸ்தானின் இலங்கையுடனான உறவுநிலையும் இத்தகையதொரு தளத்திலேயே கட்டப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை இராணுவத்தின் தலையீடுகள் எதுவுமின்றித் தனித்துவமாக முடிவெடுப்பதற்கே பாகிஸ்தானின் சனநாயக அரசாங்கம் விரும்புகிறது. இந்த விசப்பரீட்சையினைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான முதலாவது களமாக பாகிஸ்தான் இலங்கையைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

### அறிவார்ந்த மூலோபாயம்

பத்து ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நிலவியதைத் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி அசீப் அலி சதாரியின் கடந்த ஆண்டின் இலங்கைக்கான பயணம், இருநாட்டு உறவில் புதியதொரு உதயம் என பாகிஸ்தானிய அமைச்சர்கள் புகழாரம் சூட்டியிருந்தார்கள்.

பாகிஸ்தானில் தொடர்ந்து ஆட்சியிலிருந்த இராணுவ அரசாங்கங்கள் தங்களது வெளியுறவுக் கொள்கையில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தனவோ அது மாற்றியமைக்கப்படுகிறது என்பதைக் காட்டும் வகையிலேயே பாகிஸ்தானின் சனநாயக அரசாங்கம் தனது வெளியுறவுக் கொள்கையினைக் கட்டி வருகிறது.

போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதென சதாரி அரசாங்கம் தகுந்ததொரு முடிவை எடுத்திருந்தது. வீழ்ச்சியடைந்து செல்லும் பாகிஸ்தானியப் பொருளாதாரத்தினை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கான ஒரு முயற்சியாக இது அமையக்கூடும்.

இலங்கையில் தான் மேற்கொண்டுவரும் போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகளைச் சீனா துரிதமாக விரிவாக்கி வருகிறது. தனக்கும் சீனாவிற்கும் இடையில் நீண்ட பல காலமாக நல்லுறவு நிலவிவருகின்ற நிலையில், இலங்கையில் சீனாவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் மீள்கட்டுமானத் திட்டங்களில் தனக்குமொரு பங்கு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் பாகிஸ்தான் இருக்கிறது.

தான் கைக்கொள்ளும் இந்த மூலோபாயமானது, இந்தியாவை இலக்குவைத்த அரசியல்சார் நடவடிக்கைகளுக்கு அப்பால், இந்தப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் பொருளாதார ஒத்துழைப்பு ஊடாகப் பரந்துபட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழி செய்கிறது.

பிராந்திய சக்தியாகத் திகழவேண்டும் என்ற இந்தியாவின் எண்ணத்திற்குச் சவால் விடும் வகையில் சீனா செயற்பட்டுவரும் நிலையில், இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளைத் தானே முன்னெடுப்பதை விடுத்து சீனாவுக்குச் சேவையாற்றுவ்துதான் பொருத்தமானது என பாகிஸ்தானின் இன்றைய அரசு கணக்கிடுகிறது.

### சீனாவின் வருகை

இலங்கையுடனான பாகிஸ்தானின் எதிர்கால உறவை தீர்மானிப்பதில் சீனாவின் முக்கியத்துவம் தொடர்பாக பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் மெமூட் குரேசி விளங்கிக்கொண்டார். "பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை விரிவுபடுத்துவதற்கான கட்டமைப்பு" தொடர்பாக நம்பிக்கை தெரிவித்த அவர் சீனாவின் இலங்கையுடனான உறவு பாகிஸ்தானுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதோடு மூன்று நாடுகளுக்கும் நன்மையளிப்பதாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த நவம்பரில் இலங்கை நான்கு பிரதான உடன்படிக்கைகளை பாகிஸ்தானுடன் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பான இரு நாடுகளினதும் கரிசனையை வெளியிட்ட அதேவேளையில், போருக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளில் பாகிஸ்தானின் முக்கிய பங்கை வெளிப்படுத்துவதற்கான தளமாக அமைந்தது.

இலங்கையின் இரத்தினக் கைத்தொழிலில் பல சீன நிறுவனங்கள் முதலிட்டுள்ளன. உலகின் ஐந்தாவது பெரிய சீமெந்து ஏற்றுமதி செய்யும் நாடு என்ற வகையில் பாகிஸ்தான் சீமெந்து உற்பத்தி தொடர்பில் இலங்கையுடன் கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ள முனைந்தமை ஆச்சரியம் தரும் விடயமன்று. தொடர்ந்து இரத்தினம் மற்றும் நகைத் தொழிலிலும் கூட்டுறவை ஏற்படுத்தவுள்ளது.

பாகிஸ்தான் அதிபர் சதாரி குறிப்பிடப்பட்டதுபோல, "இலங்கையில் கிடைக்கக்கூடிய அனைத்து முதலீட்டு வாய்ப்புக்களையும் பயன்படுத்தவேண்டும்" என்றே பாகிஸ்தான் விரும்புகிறது.

ஆனால் இந்த வாய்ப்புக்கள் யாவும் தற்போது இந்தியாவைத் தந்திரமாகக் கையாண்டு வெற்றிபெறுவதைவிட சீனாவுடன் பங்காளியாகச் சேர்ந்துகொள்வதிலேயே அதிகம் தங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தான் தலைமையிலான அணி என்ற கருத்து சுற்றுவட்டத் தந்திரோபாயம் என்ற கட்டாய இராணுவ கொள்கைக்கு அப்பாலும் பரிணமிப்பதற்கான சமிக்கைகளைக் காட்டுகின்றன. முக்கியமாக, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பகைமையைவிட, இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே தென்னாசியாவின் பூகோள அரசியல் சக்தியாகப் பரிணமிப்பதற்கான போட்டி தற்போது ஆரம்பமாகிவிட்டது என்பதை பாகிஸ்தான் புரிந்துகொண்டிருப்பதைப் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது.

அதேவேளையில், இந்தியாவின் செல்வாக்கை இலங்கையில் இல்லாது செய்யலாம் என்ற நம்பிக்கையில் அந்த உறவைத் தக்கவைப்பதற்காக சீனாவில் தங்கியிருப்பதன்மூலம், இந்தியாவுக்கு 'இணையாக' வரும் தனது விருப்பத்திற்கு வல்லாதிக்க சக்திகளில் தங்கிநிற்கும் தனது நீண்டகாலக் கொள்கையை பாகிஸ்தான் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது. ❖

# மிதிபடும் கதாநாயகர்கள்

மீண்டும் ஒரு ஒருங்கிணைவு ஏற்படக்கூடாது என்பதில் அவதானிப்பாளர்கள் கவனமாயிருக்கின்றனர் என்ற கருத்து முன்னாள் போராளிகளது பழைய நண்பர்களையும் அவர்களிடமிருந்து தூர விலகிப் போக வைக்கிறது.

தோற்றுப் போனவர்களை யாருமே கண்டு கொள்வதில்லை. முன்னாள் போராளிகள் இதற்கு நிகழ்கால உதாரணமாகி நம்முன் நிற்கின்றனர்.

ஆயுதமும், அதிகாரமும், வரியுடையும் அவர்களோடு ஒட்டியிருந்த போது அவர்களைத் தெய்வங்களாகவும், உத்தம புருஷர்களாகவும் வைத்துப் பார்த்த நம்மவர்களே இன்று அவர்களைக் கால்களுக்குக் கீழ் போட்டு மிதிக்கின்றனர்.

சுதந்திரம், தேசியம், விடுதலை, தியாகம் எனக் கட்டற்ற யதார்த்தம் கடந்தவைகளுக்காக உயிரையும் கொடுக்க தயாரான நிலையில் வாழ்ந்தவர்கள் அவர்கள். திடீரென அனைத்துவிதமான நம்பிக்கைகளின் பிடியிலிருந்தும் பிடுங்கியெறியப்பட்டவர்கள். மரணங்களும், உடற்பாக இழப்புக்களும், சிறை வாழ்க்கையும், அதன் பின்னரான தமிழ்ச் சமூக அவமானமும் யுத்தம் இவர்களுக்கு அளித்த நினைவுப்பரிசுகள். இந்த நினைவுப் பொதிகளைச் சுமந்தபடி, புன்னகை தொலைத்த முகங்களுடன் நம்முன் உலாவுகின்றனர்.

2009க்கு பின்னர் இராணுவத்திடம் சரணடைந்ததைத் தொடர்ந்து மூத்த போராளிகளும் இளைய போராளிகளும், புதிதாகத் தம்மை இணைத்துக் கொண்ட போராளிகளும் புனர்வாழ்வுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்து பல மூத்த போராளிகளையும், வேறு வகையினரின் வசதி படைத்தவர்களையும் பணம் விடுதலை செய்தது. விடுதலைக்குப் பின்பு லண்டனிலோ, கனடாவிலோ, இந்தியாவிலோ அவர்களது வாழ்க்கை தொடர்கிறது.

வறுமைக்குட்பட்ட, சமூக அடுக்கமைவில் பின் தங்கிய நிலைப் போராளிகளும், பெற்றோர், உறவினரால் தவறவிடப்பட்டவர்களும் தான் இப்போது புனர்வாழ்வளிப்பில் இருக்கின்றனர். இவர்களுடன் பாரிய குற்றமிழைத்த விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளும் சிறப்புப் புனர்வாழ்வில் காலம் கடத்துகின்றனர்.

வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தவர்களையும் தடுப்பில் நிரந்தரமாக தங்கிவிட்டவர்களையும் தவிர குறிப்பிட்டளவிலான தொகையினர் விடுதலையாகி தத்தம் சொந்த இடங்களுக்கு திரும்பித் தம் புதிய வாழ்க்கையைத் தொடங்கியிருக்கின்றனர். யுத்தம் கைவிட்ட அநாதைக் குழந்தைகள் புதியதாய் தொடங்கிய வாழ்க்கையில் எப்படி இருக்கின்றனர்? அவர்கள் பகிர்ந்து கொண்ட எண்ணக் கருக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

''சமூகத்தில் திரியும் போது கூச்சமாய் இருக்கு''

''பஸ்ஸில் கூட எங்களோடு யாரும் ஒண்டா ''
வாறதில்லை.

''மற்றவ எங்களை அங்கீகரிக்கினமில்லை''

''முந்திப் பழகின ஆக்கள் கண்டதும் காணாதமாதிரி போயிடுவினம்''

''சமூகம் எங்களோட அண்டி வாழாம இருக்கு''

''ஊருக்குள்ள வரும்போது பயமா இருக்கு''

''மற்றவை எங்களைக் கொஞ்சமும் மதிக்கினமில்லை''

''கட்சி மாறியிருப்பான் எண்டு எங்களோடு தடுப்பில இருந்தவனே கதைக்கிறதில்லை''

''காட்டிக்குடுத்திடுவான் எண்டு பயம்''

''சனம் போட்டுக் குடுத்திடும்''

''கொஞ்சம் வெளிக்கிட்டுத் திரிஞ்சா, சந்தியில பெடியளோடை நிண்டா, சத்தமா கதைச்சா வித்தியாசமாய்ப் பாக்கினம்''

''ஊரை விட்டு எங்கையாவது போக வேணும் போல இருக்கு''

''பொம்புளைப் பிள்ளையள் வீட்டுக்குள்ளேயே இருக்குதுகள் . வெளியால வந்தா பிரச்சினை''

''நல்லாய்க் கதைக்கினம். தடுப்பில் இருந்து வந்ததெண்டு கேள்விப்பட்டதும் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கினம், பயப்படுகினம்''

''பெண்கள் தலைநிமிரவே முடியாது. யார் இவையளைக் கலியாணம் கட்டப்போறான் எண்டு அவையின்ற பெற்றார் பயப்பிடுகினம்''

''ஏன் இங்க நிக்கிறியள், நாளைக்குப் பிரச்சினை வந்திட்டா சுடுவாங்கள். எங்கையாவது போங்கோ''

''முந்தி வீட்டிலேயே நிக்கிறதில்லை. இப்ப எந்த நேரமும் வீட்டுக்குள்ள தான்''

''என்ன பிழைய விட்டனாங்கள் எண்டு அடிக்கடி யோசனை வருது''

இத்தனை அர்த்த பூர்வமான கருத்துக்களும் புனர்வாழ்விலிருந்து சமூகத்திற்குள் வந்து ஊடாடத் தொடங்கியவர்களின் வாயிலிருந்து வந்தவை. இவைகளுக்கு என்ன காரணம்? யார் பொறுப்புக் கூறவேண்டும்? ஒருவர் பலமாயிருக்கும்போது அவரைக் கொண்டாடுவதும், பலமிழந்த பின்னர் தூற்றுவதும் அனைத்துச் சமூகங்களிலும் உள்ளவை. ஆனால் அது 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகி விடக்கூடாது.' நமது சமூகம் முன்னாள் போராளிகளை மிதிக்கும் மாடுகளாகத் தான் மாறிவருகின்றது.

முன்னர் கையில் துப்பாக்கிகளோடு திரிந்த காலத்தில் அவர்கள் நடந்து கொண்ட முறைகளும் இந்தநிலைக்கு ஒரு காரணம். துப்பாக்கிகளால் எதையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணத்தில் போர்த்தியிருந்த கதாநாயகத் துணி கிழிந்ததும் இந்நிலைக்கு ஒரு காரணம். அக்காலத்தில் இவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் இக்காலத்தில் ஏறி மிதிக்கின்றனர். இது சுழற்சி முறையில் நிகழத்தான் போகிறது.

மாவீரம், துரோகத்தனம் இரண்டுக்குமிடையில் உருவாக்கப்பட்டு விட்ட ''தமிழீழ சமூக உளவியல்'' இறுதிப் போரில் மரணமடையாமல் சரணடைந்தவர்களை துரோகிகளாகவே பார்க்கிறது. துரோகி என்ற பட்டம் குத்தப்பட்டவர்கள் வாழ அருகதையற்றவர்களாகி விடுகிறார்கள் என்ற எண்ணம் இன்றும் வளர்ந்து வரும் ஒன்றாகவே தெரிகிறது. இது ஒரு சங்ககால மனநிலையே தவிர நிகழ்கால மனநிலையல்ல.

இத்தகைய பார்வைக்கு உதாரணமானவர்களுமுண்டு. விடுதலைப்புலிகளோடு இருந்த காலத்திலும், இப்போதும் இலங்கைப் படையினருக்காக வேலை செய்யும் சில போராளிகள் இருக்கவே செய்கின்றனர். இந்த நிலை ''கண்டவன், நிண்டவன்'' எல்லாரையும் 'காட்டிக் கொடுப்பவன்' என்று யோசிக்க வைக்கிறது. ஒருசிலரது தவறுகள் அப்படிப் போராளிகளுடன் கூட சமூக உறவைப் பேணத் தடையாயிருக்கிறது.

மீண்டும் ஒரு ஒருங்கிணைவு ஏற்படக் கூடாது என்பதில் அவதானிப்பவர்கள் கவனமாயிருக்கின்றனர் என்ற கருத்து முன்னாள் போராளிகளது பழைய நண்பர்களையும் அவர்களிடமிருந்து தூர விலகிப் போக வைக்கிறது. இவர்களுடன் பேசினால் பிரச்சினைவரும். உறவை வைத்திருக்க கூடாது போன்ற நிலமைகளை மேற்கண்ட வகையில் உலாவும் கருத்து ஏற்படுத்தி வைத்திருக்கிறது.

தம்பி

பொதுவாகவே அதிக வறுமையானவர்களே ஆயுதம் தூக்கி முன்வருவதில் ஆர்வமாயிருப்பர் என்று சொல்லப்படுவதுண்டு. கல்வியிலும், பொருளாதாரத்திலும் சமூக கட்டமைப்பிலும் பின் தங்கியவர்களை துப்பாக்கிகளும், துணிச்சல்களும் சாகசக்காரனாக்கிவிடும். அவையனைத்தையும் இழந்ததுடன் ஏற்படும் வாழ்க்கை வெற்றிடம் நிரப்பிப் கொள்ள முடியாததாகிறது. சாகசத்தன்மை கழன்ற மனிதர்களாக உலகினுள் பிரவேசிக்கும் போது ஒரு காலத்தில் மாலையிட்டு வரவேற்ற பார்வையாளர்கள் இப்போது காறியுமிழ்வர். அவமானங்களை அள்ளிப் பூசுவர். இந்தக் கணத்தில் முன்னாள் போராளிகள் தனிமைப்படுத்தப் படுகின்றனர். வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றனர்.

முன்னாள் பெண் போராளிகளின் துயரோ இன்னும் வேறானது. அவர்களில் விதவையானவர்களும், திருமணம் செய்யாதவர்களும் அடங்குகின்றனர். வெளியில் வேலை கேட்டு அலைந்து, கிடைக்கும் வேலையை பெற்றுக் கொள்ள அடையாளப்படுத்தும் போதே எழுகிறது சிக்கல். வேலைவாய்ப்புக்கான நேர்காணல்கள் முன்னாள் போராளி என்பதை அறிந்தவுடனேயே இடைநிறுத்தப்படுகிறது. விடுதலையாகி இருக்கும் முன்னாள் போராளிகள் தமது குடும்பத்தாரோடும், கணவனது குடும்பத்தாருடனும் இணைந்துவாழ இயலாதபடி, விலக்கி வைக்கும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. திருமணமாகாத பெண் போராளிகளை திருமணம் செய்து கொள்ள யார் முன்வருவார்? என்ற கேள்வி அவர்களது பெற்றோரின் தூக்கத்தை நிரந்தரமாகவே பறித்தெடுத்து விட்டுள்ளது. தத்தம் வீடுகளைவிட்டு வெளியில் செல்ல வெட்கமும், பயமும் விடுவதில்லை. விசாரணைக்கும் பதிவுக்கும் என வரும் இராணுவத்தினர் இவர்களை அழவைக்காமல் திரும்ப மாட்டார்கள்.



புனர்வாழ்வளிப்பின் போது வழங்கப்பட்ட வாழ்வாதார தொழில் பயிற்சியும், உதவிக்கான உத்தரவாதங்களும் செயலிழந்து போகின்றன. இங்கொன்றும், அங்கொன்றுமாகத் தென்படும் ஆதரவுக் கரங்களும் எல்லாப் பக்கங்களிலும் இருந்து நீளும் கைகளையும் பற்றிக் கொள்வதில்லை. அதிலும் நிபந்தனைகளும் முன்தெரிவுகளும் இடம்பெற்று விடுகின்றன.

இங்கு பதிவு செய்யப்பட்டவைகள் மேல் வாரியாக தென்பட்டவைகள் மட்டுமே. இவ்விடயம் பற்றி ஆழமான கவனம் செலுத்தப்படல் வேண்டும். சமூகம் வளர்ந்து திணித்த ஒட்டு மொத்த இனவிடுதலை என்ற மந்திரப் பேழையைச் சுமந்தவர்கள் இவர்கள். அது சூனியத்திற்குள் பலியானதற்காக சுமந்து சென்றவர்களை பலியிடுவது எந்தவகையில் நியாயம்?. அவர்களுக்கும் தாம் நேசித்த, நேசிக்கும் சமூகத்துடன் சகல உரிமைகளுடனும் வாழும் உரிமை இருக்கிறது. இதனை உரிய விதத்தில் புரிந்து கொண்டு நடத்தலே ''நாங்கள் என்ன தவறு செய்தோம்?'' என்ற வினாவுக்கான விடையாக அமையும். ❋

# இரண்டாவது 2003



(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

கடாபியைக் கொல்வதோ அல்லது சிறைப்பிடிப்பதோ தமது நடவடிக்கையின் திட்டமல்ல எனவும் பென்டகன் ஊடாக அறிவித்திருக்கிறார். ஆனாலும், இப்போரில் கடாபிக்கு எதுவும் நடக்கலாம் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இது இவ்வாறிருக்க, கடாபியின் மகனான காமீஸ் விமானத் தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் பலியாகியுள்ளதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கடாபியின் அரண்மனைகளில் ஒன்றான பாப் அல் - அஸிஸியா கட்டடம் மீது கடாபியின் விமானப் படையின் விமானி ஒருவரே இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் அதில் காயப்பட்டிருந்த காமீஸ் மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில் இறந்துவிட்டாகவும் கூறப்படுகிறது. இத்தருணத்திலேயே அமெரிக்காவின் ஊ15 ரக விமானமொன்று லிபியப்படைகளால் சுட்டு விழுத்தப்பட்டுள்ளது. இதனை மறுத்திருக்கும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் விபத்துக் காரணமாகவே இது நிகழ்ந்ததாகவும் விமானிகள் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த அசம்பாவிதங்களுக்கு மத்தியில் லிபியத் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றிய கடாபி, புனிதப் போர் ஒன்றுக்காக தன் நாட்டு ஆயுதக் கிடங்குகளைத் திறந்துவிடப்போவதாகவும், ஒவ்வொரு லிபியனும் தமது எண்ணை வளத்தைச் சுரண்ட வரும் எதிரிகளுக்குத் தக்க பாடம் புகட்டத் தயாராகும்படியும், அதற்காக ஆயுதம் தாங்குமாறும் உணர்ச்சி பொங்கக் கேட்டுக்கொண்டுள்ளார். இதன் விளைவை வெகுவிரைவில் அமெரிக்கா உணரும் எனவும் அவரது பேச்சில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, கூட்டணிப்படைகளை நவீன சிலுவைப்படைகள் எனவும் வர்ணித்துள்ளார். இப் புதிய பாசிசவாதிகளுக்கு எதிராக முஸ்லிம் படைகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என அவர் வலியுறுத்தி உள்ளதோடு அமெரிக்கப்படைகளோடு போராடி அவர்களைத் தோற்கடிக்கத் தவறினால் வீரமரணம் அடைவேனே தவிர தப்பியோடமாட்டேன் எனவும் சூளுரைத்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் இந்த அத்துமீறலை வன்மையாகக் கண்டித்துள்ள ரஷ்யா "இது கண்மூடித்தனமான படை நடவடிக்கை" எனக் குறிப்பிட்டுள்ளது. சீனாவில் இருந்து வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் "லிபியாவில் தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். அதன் மீது அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் விமானங்கள் தாக்குதல் நடத்தியது வருத்தமளிப்பதாக உள்ளது. லிபியாவின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையை மதிக்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனோடு இணைந்து இந்திய மத்திய அரசும், இத்தாக்குதல் தேவையற்றது எனக் கண்டனம் தெரிவித்துள்ளது. அரபு லீக் யுத்தநிறுத்தம் ஒன்றுக்கான அழைப்பை விடுத்துள்ளதுடன், இப்போர் நடவடிக்கை ஆபிரிக்க நாடுகளை மிக மோசமாகப் பாதிக்கச் செய்யும் எனவும் எச்சரித்திருக்கிறது.

லிபியாவின் நேச நாடுகளுடன் இணைந்து, வெனிசூல அதிபர் சாவேஸ் மேற்கு நாடுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார். இவ்வாறான கண்டனங்கள், சர்வதேச ரீதியில் அதிகரித்துவரும் நிலையில், ஒபாமாவுக்கு உள்நாட்டிலும் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் நாடாளுமன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமல் லிபியா மீதான நடவடிக்கையில் அமெரிக்கா கலந்து கொள்ளும் என்று ஒபாமா எடுத்த முடிவானது அவரது அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டது எனவும் விமர்சித்துள்ளனர். இதனை அடுத்து தீவிரப்படுத்தப்பட்டிருந்த விமானத்தாக்குதல்கள் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் இதற்குக் கூட்டணிப் படைகளுக்குள் ஏற்பட்டு வரும் தலைமைத்துவ போட்டியே காரணம் எனவும் கூறப்படுகிறது. இதனைத் தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தைகளின் கூட்டணி நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் இப்போது லிபியக் கடற்படையை நிர்மூலமாக்குவதற்கான புதிய தாக்குதல்கள் தொடங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன் முடிவு கடாபியின் தலையை எடுப்பதுடனேயோ, அல்லது தூக்கில் போடுதலுடனேயோ எழுதப்படப் போவதற்கான சாத்தியங்கள் வட ஆபிரிக்கப் பகுதியில் ஏற்பட்டு வருகிறது.

இச் சமகால சர்வதேச அரசியல் நிலைமைகள், பழையபடி இரு துருவங்களை ஏற்படுத்தப்போகின்றனவா? என்ற ஐயப்பாட்டை எழுப்பியுள்ளது. ரஷ்யாவுக்குப் பதில் சீனா தலைமை தாங்கப்போகும் இரண்டாவது துருவ உலக ஒழுங்கிற்கு வடகொரியாவைப் பின்தள்ளி, லிபியாதான் காரணமாய் அமைந்தாலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

எகிப்து, டுனீசியா, சூடான் என எண்ணெய் வளம் அதிகமுள்ள வட ஆபிரிக்கப் பிரதேசம் அமெரிக்காவின் ஆதிக்கத்துக்குப் போகப்போகின்றமையானது, அது உலகுக்குத் தலைவராக இரண்டாம் தடவையாகவும் முடிசூடிக் கொள்வதற்குச் சமமானது. இந்த நிலைமை ஏற்படப்போவதை சீனா தலைமையில் உருவாகியிருக்கும் அணி ஏற்றுக்கொள்ளப்போகின்றதா என்பதை லிபியாவில் தொடரப்போகும் நிலைமைகளே தீர்மானிக்கப் போகின்றன. லிபியா இன்னொரு 2003ஆம் ஆண்டுக்கான ஈராக் போல் ஆக்கப்படுமானால், அதற்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமானால், சீனாவைத் தலைமையாகக் கொண்டு உருவாகிவரும் புதிய துருவத்தின் பலம் செயலிழந்து மறுபடியும் அமெரிக்காவின் சர்வதேச ஆதிக்கம் நீண்ட ஆயுள் பெறுவதாகவே அமையும். ❋




ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து (UK) வருகைதரும்
பேராசிரியர்கள் பங்குகொள்ளும் விசேட இலவசக்கருத்தரங்கு

சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக இளமானிக்
கற்கைநெறிகள் தொடர்பான இலவசக்கருத்தரங்கு யாழ்மண்ணில்...
காலம் : 2011. மார்ச் 31ம் திகதி பி.ப. 4.00 மணி, ஏப்ரல் 1ம் திகதி மு.ப. 9.00 மணி.

பொறியியல் மற்றும் முகாமைத்துவப்பட்டப்படிப்பு

- **Bachelor of Engineering**
  From University of Wolverhampton UK
  - Bachelor of Engineering (Hons) Electronics and Communications Engineering
  - Bachelor of Engineering (Hons) Mechatronics
  - Bachelor of Engineering (Hons) Mechanical Engineering
  - Bachelor of Engineering (Hons) Automotive Systems Engineering
  - Bachelor of Engineering (Hons) Engineering Design Management
- **BSc. International Transportation Management and Logistics**
  From Dalian Maritime University (DMU)

ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய பட்டப்படிப்பு. (UGC அங்கீகாரம்).

நெகிழ்வு தன்மைவாய்ந்த கற்கைநெறி முழுமையாக, இங்கேயே மேற்கொள்ளலாம், அல்லது 2+2 முறைமையின் கீழ் 2 வருடங்கள் சினெக் யாழ் வளாகத்திலும் மிகுதி 2 வருடங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளலாம்.

- குறைந்த, இலகு தவணை கட்டணங்கள்.
- தரம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- உலகத்தரம் வாய்ந்த வசதிகள்.
- உள்ளக பட்டப்படிப்பின் அங்கீகாரம்.



*Explore Choices, Options and Opportunities for you ... !*

KKS Road, Maruthanarmadam, Jaffna.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

CINEC
Jaffna Campus
BRANCH OF CINEC MARITIME CAMPUS

WORLD CLASS EXCELLENCE IN EDUCATION AND TRAINING www.cinec.edu

ADi innovations



# ஆகக் குறைந்த தீர்வுக்குக் கூட வாய்ப்புக் குறைவு

> அதிகாரப் பகிர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்தி செய்யக்கூடியதாக இருந்தால் மட்டுமே அது நியாயமான தீர்வாக அமையமுடியும்.



நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அடுத்ததாக இரண்டாவது சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தான் போட்டியிட்ட 16 சபைகளில் 12 சபைகளின் ஆட்சியைக் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது. கிழக்கு மற்றும் வன்னிப்பிரதேச மக்கள் கூட்டமைப்புக்கு அமோகமாக வாக்களித்து நடந்து கொண்டிருக்கும் அரசு - கூட்டமைப்புப் பேச்சுக்கு வலுச் சேர்த்துள்ளனர்.

**தமிழ் மக்கள் வழங்கியுள்ள ஆணை**

தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் ஆட்சி முறை ஒன்றுக்கு அந்த மக்கள் அங்கீகாரம், ஆணை வழங்கியுள்ளனர்.

தமிழ்பேசும் மக்கள் வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசத்தில் அவர்தம் ,வாழ்விடத்தில் தம்மைத்தாமே ஆளும் அடிப்படை உரிமையைப் பிரயோகித்து தன்னாட்சியை நிறுவவும், நிலைநாட்டவும், பாதுகாக்கவும் உரிமையுடையவர்கள் என்ற தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது உள்ளூராட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட்டிருந்தது.

அத்தகைய தீர்வு ஒன்றையே தாம் விரும்புவதை அரசுக்கு எடுத்துக் கூறும் வகையில் தமிழ் மக்கள் தமது தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

இந்த இலக்கை நோக்கிய தீர்வு முயற்சி அரசு பக்கத்தில் இருந்து வருமா என்பது குறித்துக் கேள்வி எழுப்பப்படுகிறது.

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுக்களில் உள்ளக சுயநிர்ணய உரிமையை வழங்கத் தயாராக இருந்த அரசு, இப்போது மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்தே கருத்து வெளியிட்டு வருகிறது.

முன்னைய பேச்சுக்களில் அரசுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸே தற்போதைய அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களிலும் பங்கேற்கின்றார்.

அன்று சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு இணங்கிய பேராசிரியர் பீரிஸ் இன்று அதிகாரப் பகிர்வு குறித்துத்தான், அதுவும் சகல விடயங்களிலும் இல்லாத அதிகாரப் பகிர்வுக்கே முன்னுரிமை கொடுக்கிறார்.

தமிழ் மக்கள் கேட்கும் தீர்வு மலையளவாக இருக்கும் போது, மடு அளவிலான தீர்வைத்தான் அரசு முன் வைக்கிறது.

அதிகாரப் பகிர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தால் மட்டுமே அது நியாயமான தீர்வாக அமைய முடியும்.

அரசுக்கும்- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம் பெற்றுள்ள பேச்சுக்களில் மூன்றாவது கட்டப் பேச்சுக்கள் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றபோதுதான், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைப் பிரச்சினை குறித்துப் பேசப்பட்டுள்ளது.

**மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வதே அரசின் யோசனை**

அதுவும் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்தே பேசப்பட்டுள்ளது. அதிலும் சில விடயங்களில் முன்னேற்றம் காணப்பட்டாலும், முக்கிய விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்று தகவல்கள் கசிந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதிகாரப் பகிர்வு தொடர்பாக முன்வைத்துள்ள ஒன்பது விடயங்களுக்கும் பதில் கூறக் கூடியதான நிலையில் அரசதரப்புக்குழு இல்லை என்றே கூறப்படுகின்றது.

கூட்டமைப்பின் யோசனைகள் குறித்து ஆழமாக ஆராய வேண்டியுள்ளதால் நீண்ட கால அவகாசம் தேவை என அரசுத்தரப்பு கூறியுள்ளது.

**யாழவன்**

பேச்சுக்களை இழுத்தடித்துக் கொண்டு செல்லாமல், விரைந்து தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு அமைவான தீர்வை அரசு முன்வைக்குமா என்ற சந்தேகம் கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது என்ற தகவலும் கசிந்துள்ளது.

விட்டுக் கொடுப்புக்கு இடமில்லாமல், தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ப தீர்வு ஒன்றை எட்ட முயற்சிக்கிறோம். எமது இந்த முயற்சி எந்த அளவுக்குச் சாத்தியமோ தெரியவில்லை என்று கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் கூறினார்.

**பேச்சுக்கள் நியாயமானவைகளாக அமைதல் அவசியம்**

போர்க் குற்றச் சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சுக்களை நடத்தாமல், நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான நின்று நிலைக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காண அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

தமிழ்த் தரப்பு முன் வைக்கும் ஆகக் குறைந்த தீர்வையாவது அரசு வழங்க முன்வராவிட்டால், நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது கானல் நீராகத் தான் இருக்கப் போகிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் பெற்ற அமோக வெற்றியில் திளைத்து நிற்கும் அரசு, சிங்கள மக்கள் எம்முடன் நிற்கிறார்கள். ஆகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணத் தேவையில்லை. அபிவிருத்தியில் நாட்டம் செலுத்துவோம் என எண்ணிச் செயற்பட முனையுமானால், தீர்வு முயற்சி சாத்தியப்படாது என்பதுடன் அபிவிருத்தி முயற்சிகளும் பலன் தரப் போவதில்லை.

நாட்டில் புரையோடிக் கிடக்கும், கடந்த 60 வருடங்களாகத் தொடரும் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டுவதன் மூலமே அபிவிருத்தியும் சாத்தியமாகும்.

நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படும் வேளையை எதிர்பார்த்து மேற்குலகம் காத்துக் கொண்டிருக்கிறது. தீர்வு எட்டப்பட்டால் நாட்டின் அபிவிருத்திக்குத் தாராளமாக உதவிகளை வழங்க மேற்குலகம் தயாராகியிருக்கின்றது.

நியாயமான தீர்வொன்றை எட்டுவதன் மூலம் அபிவிருத்திக்கான உதவிகள் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக எழுந்துள்ள அவப் பெயரை நீக்கிக் கொள்ளவும் அரசுக்கு வாய்ப்பு ஏற்படும்.

இந்த யதார்த்த நிலையை அரசு புரிந்து செற்பட வேண்டும் என்பதே சகலரின் எதிர்பார்ப்பாகும்.*

# கூட்டமைப்புக்கு ஆப்பு வைக்க முயலும் அரசு

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் முன்வைக்கும் வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் நாடு முழுவதும் 'மக்கள் சபை' நிறுவப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

அதற்கான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் சகோதரரும் பொருளாதார அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தலைமையில் அந்தச் சபைகள் இயங்கப் போகின்றன.

கிழக்கு, வன்னி ஆகிய பிரதேசங்களில் நீண்ட கால இடைவெளிக்குப்பின் உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெற்று முடிந்துள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் முழுமையாகவும் முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளிலும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவில்லை.

ஆளும் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அந்தப் பகுதிகளில் தேர்தல்கள் இடம்பெறவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பின் பின் அந்தப் பகுதிகளிலும் தேர்தல் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதத்தில் நடக்கும் என அரசு அறிவித்துள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் தமிழ்ப் பகுதிகளில் வெற்றி வாகை சூடியமை போன்று இடம்பெறவுள்ள ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்பது நிச்சயம்.

நீண்டகாலம் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படாததால் அங்கு மக்கள் ஆட்சி நடக்கவில்லை. ஆணையாளர் ஆட்சியே நடந்து வந்தது.

நீதிமன்ற அபராதம் மூலம் கிட்டும் நிதி, வரிகள் மூலம் கிடைக்கும் நிதி ஆகியவற்றைக் கொண்டு தத்தமது பிரதேச அபிவிருத்தியை இச்சபைகள் ஓரளவு நடத்தி வந்தன.

மக்கள் ஆட்சி ஏற்படுத்தப்பட்டு அந்தப் பிரதேசத்தின் மக்களால் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் என்ற நிலையில் இன்று 'மக்கள் சபை' என்ற புதிய அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அந்த மக்கள் சபை முற்று முழுதாக அரசு சார்பானதாக, அரசு நியமிக்கும் உறுப்பினர்களைக் கொண்டதாகவே அமையப் போகின்றது.

வடக்கு- கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் தற்சமயம் புறக்கணிக்கப்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த மக்கள் சபை மூலம் கிராம மட்ட அபிவிருத்தியில் இருந்தும் புறக்கணிக்கப்படப் போகின்றது.

மக்களால் தெரிவு செய்யப்படும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கையாலாகாத நிலையில் செயற்பட நேரப் போகிறது.

மக்களுடன் மக்களாகக் கலந்து பணியாற்ற வேண்டியவர்கள் கட்டிப் போடப்படவிருக்கிறார்கள்.

மாவட்ட அபிவிருத்தியைத் தன் கையில் எடுத்து வரும் அரசு கிராம மட்ட அபிவிருத்தியையும தன் கையில் எடுக்கப் போகிறது.

இதற்கான சமிக்ஞையே அரசின் 'மக்கள் சபை'த் திட்டம் எனத் தமிழ் மக்கள் நம்புகின்றனர். மக்களுடன் நிற்கும் கூட்டமைப்பினரை அந்த மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் நடவடிக்கையின் முதற்படியே இந்த 'மக்கள் சபை' உருவாக்கும் திட்டம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அபிவிருத்திப் பணியில் இருந்து ஓரம் கட்டும் அரசு, மக்களால் தெரிவு செய்யப்படும் கூட்டமைப்பின் கிராம மட்ட உறுப்பினர்களையும் ஓரம் கட்டி முழுப்பணிகளையும் தன் கையில் எடுக்க முயற்சிக்கின்றது.

மொத்தத்தில் கூட்டமைப்புக்கு அபிவிருத்திப் பணியில் ஆப்பு வைக்க அரசு முயல்வதாகவே கருத வேண்டியுள்ளது.

இந்த வகையில் சூட்சுமமாகத் திட்டமிட்டுச் செயற்படும் அரசு, எவ்வாறு நாட்டின் இனப்பிரச்சனைக்கான தீர்வு ஒன்றை முன்வைக்கப் போகிறது என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுவது நியாயமானதே.*

# கச்சதீவுத் திருநாள்

இலங்கை - தமிழக மீனவர்களின் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள ஒரு சமிக்ஞை கிடைத்திருக்கிறது. இரு தரப்பினரையும் அன்போடும் உறவோடும் சந்திக்க வைத்துள்ளது கச்சதீவு நிலம்.



கடந்த வாரம் (19.03.2011 சனிக்கிழமை) கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலய திருவிழா இரு நாட்டு மக்களாலும் சிறப்பாக் கொண்டாடப் பட்டுள்ளது. யாழ். அரச அதிபர், இலங்கைக் கடற்படை, தமிழக இலங்கை மீனவ சங்கங்கள் போன்றவற்றின் பெருமெடுப்பிலான முன்னேற்பாடுகளுடன் ஆரம்பமாகிய இத்திருவிழாவில் 8,000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும், குறிப்பாக வன்னிப் பிரதேசத்திலிருந்தும் பெருமளவிலான பக்தர்கள் கச்சதீவு உற்சவத்துக்குச் சென்றனர்.

இதில் கலந்துகொள்ள தமிழ் நாட்டு மீனவர்களுக்கு இலங்கை அரசாங்கம் நிபந்தனைகளுடனான அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இராமேஸ்வரத்திலிருந்து 6,000 வரையிலானவர்கள் கச்சதீவுக்கு வந்திருந்தனர்.

குறிப்பிட்ட தினத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற திருவிழா திருப்பலியை நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு அமல்ராஜ் அடிகளார், பாம்பன் பங்குத் தந்தை அமலராஜ் அடிகளார் தலைமையில் கலந்துகொண்ட பங்குத் தந்தையர்கள் ஒப்புக்கொடுத்தனர்.

அன்றைய இரவு அங்கு தங்கிய இருபகுதி மக்களுக்குமான குடிநீர், சுகாதார, உணவு வசதிகளை இலங்கைக் கடற்படை மற்றும் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மேற்கொண்டிருந்தனர்.

காவல்துறையினரின் தீவிர கண்காணிப்பின் பயனாக மக்களிடமிருந்து பல தடைசெய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன. மதுபானங்கள், பிளாஸ்டிக் கோப்பைகள், நீர்ப்பைகள் போன்றன படகுகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவைகளை கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்வோர் எடுத்துச்செல்லக் கூடாது என இரு நாட்டு அரசுகளும் கேட்டுக்கொண்ட போதிலும், மக்கள் மறைத்து எடுத்துச்சென்றுள்ளமை காவல்துறையினரைச் சீற்றம் கொள்ள வைத்தது. இதனால் பாதுகாப்புக் கெடுபிடிகளும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தே காணப்பட்டதாகவும் சந்தேகத்துக்கிடமானவர்கள் அன்றைய தினம் கச்சதீவு செல்ல அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**அ.ரஜி**

பொதுவாக ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தில் நடைபெறும் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இலங்கை - இந்திய மீனவர்கள் பெருமளவில் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது. கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்ற யுத்தம் சில வேளைகளில் திருவிழாவை இடைநிறுத்தியுள்ளது. அக்காலங்களில் பக்தர்களின் வருகை அருகிப் போனது முண்டு. ஆனால் இப்போது யுத்தம் முடிவுக்கு வந்ததையிட்டு, இம்முறை கச்சதீவுப் பெருநாள் களை கட்டியிருந்தது.

கச்சதீவு இலங்கைக்கு மிக அருகில் இருந்தபோதிலும் இந்தியாவுக்கு உரியதாகவே இருந்தது. 1964 ஆம் ஆண்டில் இந்திய பிரதமர் இந்திராகாந்தியும் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் செய்து கொண்ட நட்புறவு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அரசு கச்சதீவின் உரிமையை இலங்கைக்கு வழங்கியது.

ஆயினும் இந்திய மீனவர்களுக்கு சில மணித்தியாலங்கள் கச்சதீவில் தங்கியிருந்து ஓய்வெடுப்பதற்கு அன்றைய இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியது. ஆனால் பின் வந்த காலங்களில் இது மறுக்கப்பட்டு வந்தது. இந்தியத் தேர்தல் காலங்களில் மட்டும் சூடுபிடிக்கும் ஓர் விடயமாக கச்சதீவு விவகாரம் மாறிவிட்டது. இப்போதும் அதுபற்றிய விவாதங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதாலும் கச்சதீவுக்குச் செல்வதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு அவர்கள் அத்தீவிற்கு அருகில் தென்பட்டாலும் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் மீனவர் பிரச்சினைகளுக்கு மத்தியில் இரு நாட்டு மீனவர்களும் இந்த வருடாந்த உற்சவத்தில் சந்தித்துக் கொண்டமையானது, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடிக் கொள்ள வாய்ப்பாக அமையக்கூடும்.



ஒளிரட்டும் உன் சுடர்
அழகிய முகப்புப் பக்கங்களுடன்
வாரந்தோறும் என் வாசல் தேடும்
ஒளிக்கீற்றே!
மண் வாசனையை
வீசுகின்றாய் - பலகோடி யுகங்கள்
ஒளிரட்டும் உன் சுடர்

இ.பிரிந்தாபன்
வவுனியா.

## காதுகொடுப்பீரா?

அரசியல் நிலைவரங்களையும் எதிர்வு கூறல்களையும் சகல பத்திரிகைகளிலும் வாசித்து வாசித்து புளித்துப்போய் விட்டது. ஜனரஞ்சமான விதத்தில் ஒரு சஞ்சிகை போன்று சுடர் ஒளியை வடிவமைத்தால் அது எம்மைப்போன்ற இளம் வாசகர்கள் மத்தியில் மேலும் வரவேற்புப் பெறும். முயற்சிப்பீரா?

கே.மலர்வண்ணன்
ஏறாவூர்.

ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமையை பயனுள்ள வகையில் கழிப்பதற்கு சுடர் ஒளி ஆற்றிவரும் பங்கு மகத்தானது, திருப்தி தருகிறது. மென்மேலும் சிறப்பம்சங்களை எதிர்பார்க்கிறோம்.

அ.ரேவதி
தெஹிவளை.

## சிறக்கட்டும் உன் பணி

ஒளி சிந்தும் சுடரே!
விறுவிறுப்புத் தொடராக
துர்ப்பறியும் தொடர்
'வெள்ளை ரோஜா முள்'
மனதைத் தொட்டுத் தொடர்கிறது
சுடர் ஒளியின் கவர்ச்சியான
முகப்புப் பக்கம்
என்னைக் கவர்ந்துள்ளது.
பாராட்டுகிறேன்.

எஸ்.ஜெயராஜ்
கொழும்பு - 06.

சுடர் ஒளிக்கு ஒரு வேண்டுகோள்
கவிதைப் பூங்காவில் எனது கவிதை
களையும் இணைத்துக் கொள்ளுங்களேன்.
தரமான கவிதைகளையே நானும்
எழுதுகிறேன்.

கலா.ஆறுமுகம்
கொட்டகலை.

## ஒளிரட்டும் சிறந்து

அன்புடன் சுடர் ஒளிக்கு,

என்போன்ற கிரிக்கெட் ரசிகர்களுக்காக வண்ணத்தில் வரும் விளையாட்டு வீரர்களின் படங்கள் மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றன. எழில் பெற்றுவரும் சுடர் ஒளியின் பக்கங்கள் ஆகா அருமை.

ம.சரவணன்
வேலணை.

சுடர் ஒளியில் இடம்பெறும் அம்சங்களில் ஒரு மாற்றம் தெரிகிறது. அரசியல் தொடர்பான கட்டுரைகளைக் குறைத்துக்கொண்டு இளைய சமுதாயத்தினர், பெண்கள் போன்றோரினது இரசனையைப் ஊக்குவிக்கும் வகையிலான அம்சங்களைச் சேர்த்துக்கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

பொ.சுந்தரலிங்கம்
கரணவாய், கரவெட்டி.

# வாசகர் நெஞ்சங்கள் பேசுகின்றன...

# வெள்ளை ரோஜா முள்



மு.சிவநேசன்
sivanesan@usa.com

**சுழியன்ஸ்ஸிடம் அகப்படாது தப்பித்துக் கொள்ளத்தனது தம்பி டானியலிடம் அடைக்கலம் கோருகிறான் அண்ணனான டேவிட். அவனைத் தனது பண்ணைக்குக் கூட்டி வரும் வழியில் விபத்தில் மாட்டிக்கொண்ட டிரக்குக்குள் குற்றுயிராகக் கிடந்த கரோலைத் தூக்கிக் கொண்டு பண்ணைக்குத் திரும்புகிறான் டானியல்.**

இந்தப் பிரேதத்துக்குப் பரிகாரம் செய்வதை விடுத்து தன்னைக் காப்பாற்ற வழிவகை சொல்லும்படி தம்பியிடம் மண்றாடினான் டேவிட். ''இங்கு யாரும் வரமாட்டார்கள். யார் கண்ணிலும் படாமல் நிம்மதியாக வாழலாம். பண்ணையைச் சுற்றிப்பார்'' என்றான் டானியல்.

அந்தப் பெண்ணுக்குத் தேவையான அவசர முதல்உதவிகளைச் செய்தான் அவன். அவளது ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைந்தான். இரத்தம் வடிந்து காய்ந்து காயங்களோடு ஒட்டி இருந்தவற்றை அவதானமாக உரித்து எடுத்தான். காயங்களைத் துடைத்துத் துப்பரவாக்கி மருந்துபோட்டான். உடல் முழுவதையும் துடைத்துத் துப்புரவாக்கி நாக்கில் இரண்டு சொட்டுத் தண்ணீர் விட்டான்.

அவளது அழகு டேவிட்டை என்னவோ செய்தது. போர்வையின் கீழ் மயங்கிக் கிடக்கும் அவளை அடிக்கடி ஆளில்லாத நேரம் போய்ப் பார்த்து ரசிப்பான் அவன். சுகமாகட்டும் அழகை அனுபவிக்கலாம். இந்தக் காட்டில் இப்படிக் குட்டி கிடைக்குமா?

மூன்றாவது நாள் அவள் முனகத் தொடங்கினாள். நாடித் துடிப்பில் முன்னேற்றம் தென்பட்டது. டானியல் வாய் வழியே ஊட்டிய பானங்கள் அவளின் தொண்டை வழியே இறங்கின. அவளைப் பராமரிப்பதில் டேவிட் துரும்பளவு உதவியும் செய்யவில்லை. இடைக்கிடை ரசிப்பதோடு சரி.

டேவிட்டுக்குப் பண்ணைச்சூழல் மிகவும் பிடித்தே இருந்தது. சற்று நிம்மதியும் பிறந்தது. இங்கே சுழியன்ஸ் வரமாட்டார்கள். அவர்களுக்கு இடம் தெரியாது. தொலைபேசித் தொடர்புகள் ஏதும் கிடையாத இடம் இது.

ஐந்தாவது நாள் விழிகளைத் திறந்தாள் கரோல். அவளால் அதிகம் பேச முடியவில்லை. ஆறுதல் கூறிச் சமாதானம் சொல்லி வைத்தான் டானியல்.

ஏழாவது நாள் அவளால் பேச முடிந்தது. தன் பெயர் கரோல் என்றாள். வேறு தகவல் ஏதும் அவளுக்கு ஞாபகத்தில் வரவில்லை.

''கவலைப்படாதே. நிம்மதியாய் இரு. தலையில் அடிபட்டு இருக்கிறது. நினைவு திரும்பியதும் உன்னை உரிய இடத்தில் சேர்த்து விடுகிறேன்''

''எனக்கு உன்னை ரொம்பவும் பிடித்து விட்டது. உன்னோடே இருக்கிறேன். என்னால் விலகிப் போகமுடியாது. இப்படி ஓர் அன்பை வாழ்க்கை முழுவதும் தேடித் தவித்தேன். இன்று கிடைத்து விட்டது'' என்றாள்.

''ஆகட்டும். நிம்மதியாகத் தூங்கு''

''அவனை இந்தப் பக்கம் விடாதே. அடிக்கடி வந்து போர்வையைக் கிளப்புகிறான் - அசிங்கப் பேர்வழி'' என்றாள்.

டானியல் டேவிட்டை அழைத்து எச்சரித்தான். அடைக்கலம் கேட்டு வந்த இடத்தில் சேட்டை விடாமல் இருக்க முடியவில்லையா? எனக் கண்டித்தான்.

கரோல் கொஞ்சம் தேறியதும் ஒரு நாள் டானியல் தனது மோட்டார் சைக்கிளில் சாலையோர டீக்கடை நோக்கிப் புறப்பட்டான். 25 மைல்கள் தனிவழி வந்து பிரதான சாலையில் ஏறி 20 மைல்கள் மேலே சென்றால் கடை தென்படும். அங்கே வந்தால் நாட்டு நடப்புக்களை அறியலாம்.

எல்லோரும் பரபரப்பாகப் பேசிய விவரம் பேக்கரின் வாரிசான கரோல் என்பவளைப்பற்றியதுதான். அவளின் சொத்து சுகம், அழகு பற்றித்தான். அவள் சரணாலயத்தில் இருந்தும் எங்கோ தப்பிவிட்டதும் தெரியவந்தது.

அவள் தற்கொலை செய்துகொண்டாளா? கடத்தப்பட்டாளா? தப்பிவிட்டாளா? அவளுக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்து. அவளைத் தேடப்புறப்பட்ட இரண்டு மோட்டார்சைக்கிள்களை ஆள்களுடன் காணவில்லை. அவர்கள் சுழியன்ஸிடம் அகப்பட்டுக் கொண்டார்களா? இவளையும் சுழியன்ஸ் கடத்திவிட்டார்களா? இப்படி ஏகப்பட்ட பரபரப்பு.

> **எல்லாம் அறிந்துகொண்டு மூச்சும் விடாமல் பண்ணைக்குத் திரும்பினான் டானியல். ஒருவேளை இவள் தான் அந்தக் கரோலாக இருக்கலாம். அப்படி என்றால் இவள் உயிருக்கு ஆபத்து. இப்போதைக்கு இங்கேயே இருக்கட்டும்.**

எல்லாம் அறிந்துகொண்டு மூச்சும் விடாமல் பண்ணைக்குத் திரும்பினான் டானியல். ஒருவேளை இவள்தான் அந்தக் கரோலாக இருக்கலாம். அப்படி என்றால் இவள் உயிருக்கு ஆபத்து. இப்போதைக்கு இங்கே இருக்கட்டும்.

அவன் பண்ணைக்கு மீண்ட போது டேவிட் கரோலுடன் சமாதானம் பேசிக் கொண்டு இருந்தான். கரோல் அழுதபடி இருந்தாள். இவன் அவளைக் கெடுக்க முனைந்ததை அறிந்து துடித்தான் டானியல்.

''அடப்பாவி. பச்சைப் புண்ணான உடல். இன்னும் நினைவு மீளாத குழந்தை. அவளையா உன் இச்சைக்கு இழுக்கிறாய்?

இருவரும் வாக்குவாதப்பட்டனர்.

''அப்படியானால் இங்கிருந்து போய் விடு'' என்றான் டானியல்.

சுழியன்ஸ் பற்றிய ஏக்கத்தில் தம்பிக்குக் கட்டுப்பட்டான் டேவிட்.

கரோல் கொஞ்சம் ஆபத்தான பேர்வழி என்பதைப் புரிந்துகொண்டான் டானியல். பத்திரிகைகள் அவளின் வரலாற்றைப் புட்டுப் புட்டு வைத்ததை அவன் போன இடத்தில் அறிந்திருந்தான். டேவிட்டிடம் அவன் ஏதும் பேசவில்லை.

நாளாக ஆக கரோல் உலாவத் தொடங்கிவிட்டாள். காயங்கள் முற்றாக ஆறிவிட்டன. அவளால் ஒரு கையைத் தூக்க முடியவில்லை. நினைவுகள் மறந்து போனது போனதுதான். அவளைப் பற்றித் தான் அறிந்த விடயங்களை டானியல் அவளிடம் கூறவேயில்லை.

டேவிட்டுக்கு இரவில் உறக்கம் வராது. சுழயன்ஸ் பற்றிய ஏக்கம் இதற்குக் காரணம். பகலில் கோழித் தூக்கம் போடுவான்.

அன்று டானியல் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். நிலவு பால் போலக் காய்ந்தது. டேவிட் எழுந்து கரோலின் அறைப்பக்கம் வந்தான். சந்தடி இல்லாமல் வந்து அவள் அருகே குனிந்தான்.

அவளின் விழிகள் நிலவில் காட்டுப்பூனையின் கண்கள் போலப் பிரகாசித்தன. அவளின் அமைதியைச் சம்மதம் எனக் கருதினான் டேவிட்.

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் – 6**

அவளது ஆடை மீது கை வைத்தான். அவள்மெல்ல நெளிந்தாள். மறுப்பேதும் தெரிவிக்கவில்லை.

மெல்லப் படுக்கையில் ஏறி அவள் அருகே அமர்ந்தபடி இறுக அணைத்துக் கொண்டான்.

மயக்கம் தலைக்கு ஏற - கரோலை முழுவதும் அனுபவிக்கத் தயாரானான் டேவிட்.

தினம் தினம் பெண்கள் தேவைப்படும் அவன் இப்போ பதினைந்து நாட்கள் காய்ந்துபோய் இருந்தான். இப்போது அல்வா கிடைத்ததுபோல் அசல் குட்டி கரோல் கைக்குள் கிடக்கிறாளே.

அவள் கொடுத்த முத்தம் - இதழோடு இதழ் வைத்து இணைந்த சுகம். ....ஆஹா என்ன சுகம்? விம்மி வெடிக்கும் உணர்வுகள்.

சலங்கை ஒலி குலுங்க அவள் சிரித்தாள். அவளது கரங்கள் அவனது கழுத்தைச் சுற்றிவந்து முகத்தை வருடிக்கொண்டிருந்தன.

அவனது உதடுகளை அப்படியே சுவைத்துக் கடித்துக் குதறிவிட்டாள். கூரிய நகங்களால் அவனது இரண்டு விழிகளையும் தோண்டி எடுத்துவிட்டாள். படுக்கையில் கிடந்த அவளது முகம் அவனது இரத்தத்தில் தோய அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான் டேவிட். டேவிட்டின் அலறல் கேட்டு ஓடிவந்தான் டானியல். கரோலின் படுக்கையில் இரத்த வெள்ளம். கரோலைக் காணவில்லை.

* * *

மைக் - றொப் இருவரும் வைரங்களை மடக்கிக் கொண்டு வீட்டைக் காலி பண்ணிவிட்டார்கள். சல்லடை போட்டும் அங்கு ஏதும் கிடைக்கவில்லை. இனித் தொடர்ந்து அங்கு இருப்பது வைரங்களுக்கு ஆபத்து என நினைத்தார்கள்.

அந்நாட்டின் படுபிஸியான நகரம் ஒன்றில் மீண்டும் குடியேறிவிட்டார்கள். அப்படியான இடங்களில் அடுத்தவன் என்ன செய்கிறான் என்பதைக் கவனிக்க யாருக்கும் நேரம் இருக்காதே.

தொடர்ந்து சந்திக்கும் புதிய கேஸ்களில் ஆர்வம் உள்ளதை மட்டும் எடுத்துக் கொள்வார்கள். கேஸ் விடயமாக உலாவும் போது கரோலையும் தேடிக் கொள்வார்கள்.

எந்த நகரத்தில் எத்தனை லட்சம் மக்கள் நடுவே அவளைத் தேடிக் கண்டு பிடிப்பது? என்றாலும் 'சுழியன்ஸ்' என்று உலகத்தாரால் பேசப்படும் இவர்கள் இருவருக்கும் யாரையும் கண்டுபிடிப்பது ஒன்றும் பெரிய வேலை அல்ல.

சமூகத்தில் மைக்கும் றொப்பும் சாதா ரண மனிதர்கள். இவர்கள் தான் அந்தச் 'சுழியன்ஸ்' என்ற சந்தேகம் யாருக்குமே எழவாய்ப்பே இல்லாமல் நடப்பது அவர்களின் சாமர்த்தியம். அத்துடன் 'சுழியன்ஸ்' செயற்படுவதைக் கண்ட காட்சிகளை அவர்கள் விட்டு வைத்தது கிடையாது.

அவர்களின் வாழ்வில் கரோல் ஒரு சவால் ஆனாள். அவளைப்பற்றிச் சரியான தகவல்களைப் பெற இயலவில்லை. இருக்கும் இடம் பற்றி ஒரு துரும்புத் தகவல் கூட எட்டாமல் வருடங்கள் இரண்டு கழிந்துவிட்டன.

விரக்தியின் விளிம்பில் நின்றவர்கள் வேண்டா வெறுப்பாக ஒரு புதிய கேஸை ஏற்க நேரிட்டது.

*(தொடர்ந்தும் முள் குத்தும்)*



# ஜப்பான் துரத்தும் மரணம்

எங்களுடைய வாழ்க்கையில் ஜப்பான் என்பது ஒரு பெருங்கனவாகவே இருந்தது; இருக்கிறது. என்ன எலெக்ரோனிக் சாமான் வாங்கினாலும் 'மேட் இன் ஜப்பான்' இருக்கிறதா என்று தான் பார்த்து வாங்குவோம். அப்பொழுது தான் மனதுக்குத் திருப்தி.

இப்பொழுதும் அப்படித்தான் இருக்கிறது. உழைப்பாளிகள்; அயராதவர்கள், தமது நாட்டின் முன்னேற்றத்துக்காக இரவு பகல் பாராது பாடுபடுகிறவர்கள் என்ற பெரும் பெயரோடு வாழ்ந்தவர்கள் ஜப்பானியர்கள்.

உலகின் தொழில்நுட்பத்தைத் தம் வசப்படுத்தி வைத்திருக்கும் மூளைசாலிகள். எல்லாம் இயந்திரமயம். எல்லாமே ரோபோக்கள். உணவு விடுதியில் பரிசாரகர்களாக ரோபோக்களைச் செய்து அண்மையில் தான் காட்சிக்கு வைத்தார்கள்.

ரோபோக்களின் நாடு இன்று அழிந்து போய்க்கிடக்கிறது. 2011 மார்ச் மாதம் 11ஆம் திகதி மாலை அடித்து நொருக்கிய கடல் தண்ணீர் எல்லாவற்றையும் துடைத்தழித்து விட்டுப்போய்விட்டது.

பத்து மீட்டர் உயரம், அதாவது 33 அடி உயர அலை என்பது ராட்சத அலைதான். ஆறடி மனிதனுக்கு மேலால் பாய்ந்த பேரலை பூமியில் உள்ள எல்லாவற்றையும் அழித்துப் போட்டுத்தான் ஓய்ந்தது.

**பேரழிவை ஏற்படுத்திய இயற்கை**

இயற்கையின் அழிவுக்கு முன்னால் இயந்திரத் தனங்கள் எல்லாம் கால் தூசிக்குச் சமானம் என்று உலகுக்கு உணர்த்திய நாள் ஜப்பானில் மார்ச் 11ஆம் திகதி. மனித உயிர்களைத் தண்ணீர் அள்ளிக் கொண்ட போனதை இன்னொரு முறை வாயடைத்து பார்த்துக் கொண்டு நின்றோம்.

அன்று இலங்கையில் ஏற்பட்ட சுனாமி இன்னும் கண்ணுக்குள் நிற்கிறது. இன்று ஜப்பானில் ஊர் எங்கும் கடல், பாலங்கள், வீடுகள், கப்பல்கள், கார்க் கம்பனிகள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் என்று எல்லாவற்றையும் ஊர் மனைக்குள் கொண்டு வந்துவிட்டது தண்ணீர்.

அழுது கண்ணீர் விடுவதைத் தவிர ஜப்பான் நாட்டுக்காரர்களால் வேறெதுவும் செய்யமுடியவில்லை.

சுற்றிவரச் சூழ்ந்திருக்கும் தண்ணீர்க் கடலுக்குள் பெரும் தீச்சுவாலையாக எரிந்து கொண்டிருக்கும் தீ நாக்குகள் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருந்தன ஜப்பானின் கரையோர நகரத்தை.

அணு மின்நிலையம் வெடித்துவிட்டது என்பது பிறகு தான் தெரிந்தது. மரணம் நெருங்கி வந்து விட்டதன் அபாயத்தை எஞ்சியிருந்தவர்கள் உணர்ந்தார்கள். துரத்துகின்ற மரணத்தில் இருந்து தப்ப முடியாமல் திசை போன போக்கில் ஓடிக் கொண்டிருந்தனர் மக்கள்.

நாங்கள் எல்லாவற்றையும் தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டு விக்கித்து நிற்கிறோம். நேரடியாக சுனாமியை உலங்கு வானூர்தி படம் பிடித்து கொண்டிருந்தது. ஒரு கமெராக் காட்சி வருகிறது, வந்து கொண்டேயிருக்கிறது.

வாகனத்தில் போனவர்கள், ரயிலில் போனவர்கள் எல்லோரையும் சுனாமி துரத்தித் துரத்தித் தூக்கியது. பிரேதமாகத் தான் அள்ளிப் போட்டது. பூகம்பம், மீண்டும் அதிர்வு என்று ஜப்பானை ஒரு குலுக்கு குலுக்கி விட்டது பூமி.

தண்ணீர்ச் சுழியில் எல்லாமே அமிழ்ந்து போயின. துடைத்தழித்து விட்டுப் போனதன் பிறகு பார்த்தால் பெருங் கப்பகளை எல்லாம் அடுக்கு மாடி வீடுகளுக்கு மேல் கொண்டு வந்திருக்கிறது சுனாமி.

> **ஃபுகுஷிமா அணு உலைதான் இப்பொழுது அபாயகரமான வெடிப்பால் அணுக்கதிர்களைப் பரவச் செய்து கொண்டிருக்கிறது. அணுக்கதிர்கள் உடலில் தாக்கி மனிதர்கள் இறக்கப் போவது கொஞ்சம் கொஞ்சமாக உறுதியாகி வருவதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள்**

எத்தனை மனிதர்களைக் காணவில்லை. தங்கள் உறவுகளைத் தேடித்தேடிக் களைத்துப் போய்விட்டனர் பலர். ஒடித்தப்ப முடியாமல் அணுக் கதிரும் அவர்களை துரத்துகிறது.

அவர்களுடைய அழகிய தெருக்களில், கவர்ச்சிகரமான வீடுகளில் எடுப்பதற்கு ஒன்றுமே இல்லை. சொல்லப் போனால் அவர்களுடையது ஒன்றுமே இல்லை.

Kesennuma என்ற துறைமுக நகரத்துக்குப் போவதே பெரும் அச்சமாக இருக்கிறது என்கின்றனர் ஊர்வாசிகள். ஏனெனில் பெருங்கப்பல்கள் எல்லாம் நகரத்தின் கட்டடங்கள் மற்றும் பெருந் தெருக்களில் நிற்கின்றன. அவற்றை எப்படி அப்புறப் படுத்துவது? எப்பொழுது நாம் போய் வாழ்வது? என்கிறார்கள் அவர்கள்.

**இளைய அப்துல்லாஹ்**

இந்தப் பெரும் அழிவில் அகப்பட்டு மூன்று லட்சத்து எண்பதினாயிரம் பேர் ஜப்பானில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

**மிரட்டும் அணுக் கசிவு அபாயம்**

பெரும் அபாயமான இடமாகக் கருதப்படும் அணு ஆலை உள்ள ஃபுகுசிமா பகுதியில் அணுக்கசிவுக்குப் பிறகு அகதி முகாமில் இருந்த 21 பேர் இறந்துவிட்டார்கள்.

அணுக்கதிர் வீச்சினால் மரணம் வரலாம் என்ற அச்சத்தின் காரணமாக உள்ளூர் மக்கள் பெரும் பயத்தில் உறைந்து போய் இருக்கின்றனர்.

''வாழ்வே வெறுத்துவிட்டது. வேறு ஒரு நாட்டுக்கு ஓடித்தப்பி உயிர் வாழ ஆசையாய் இருக்கிறது'' என்று கண்ணீர் மல்க ஜப்பானியர் ஒருவர் தொலைக் காட்சிப் பேட்டியில் சொன்னார்.

உலகம் முழுக்க, தத்தமது நாட்டவரை ஜப்பானுக்குப் போக வேண்டாம் என்று தான் சொல்லிக் கொண்டிருக்கும் நிலை உருவாகி இருக்கிறது.

தனது மின் தேவைகளுக்காக ஜப்பான் 17 அணுமின் உலைகளை நாட்டைச் சுற்றி வர வைத்திருக்கிறது. தலைநகர் டோக்கியோவுக்கு 120 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற Tokai Daini அணு உலையில் குளிரூட்டி வேலை செய்யாமல் போய் இப்பொழுது இரண்டாவது குளிரூட்டியின் உதவியோடு அணுவைக் குளிர்ப்படுத்தும் நடவடிக்கை நடக்கிறது.

ஃபுகுஷிமா அணு உலைதான் இப்பொழுது அபாயகரமான வெடிப்பால் அணுக்கதிர்களை பரவச் செய்து கொண்டிருக்கிறது. அணுக்கதிர்கள் உடலில் தாக்கி மனிதர்கள் இறக்கப் போவது கொஞ்சம் கொஞ்சமாக உறுதியாகி வருவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். வழமையை விட 40 மடங்கு அதிகமான கதிர் வீச்சுத் தாக்கத்தைக் காற்றில் அவதானிப்பதாக அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மற்றுமொரு நாகசாகி போல, ஃபுகுஷிமா பகுதி வந்து விடுமோ என்ற அச்சம் வந்திருக்கிறது மக்கள் மத்தியில். மரணத்தை வெல்வதற்காக ஒவ்வொருவரும் ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

சென்டாய் விமான நிலையத்தைக் கண்கொண்டு பார்க்க முடியாதவாறு விமானங்கள், வாகனங்கள் எல்லாவற்றையும் ஒதுக்கிக் கொண்டு போய் சுனாமி விமான நிலையத்தின் சுவரோடு வைத்திருக்கிறது. இப்போதைக்கு விமான நிலையத்தை இயக்க முடியாமல் இருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள்.

**இயற்கையைச் சீண்டுவதால் இந்த நிலை**

இயற்கை தொடர்ந்தும் மனிதர்களை அழித்துத் துடைத்துக் கொண்டிருக்கப் போகிறதா? என்ற கேள்வி இப்பொழுதெல்லாம் அடிக்கடி எழுகிறது. உலகத்தில் மனிதர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளை இயற்கை இப்பொழுது மிக வேகமாகவே மேற்கொண்டு வருகிறது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்று சொல்லிக் கொள்ளும் ஜப்பானும் கூடத் தான் பூமியைச் சீண்டி விட்டுக் கொண்டிருந்தது. உலகம் முழுக்க சமநிலையை இழந்துவிட்டது. என்றுமில்லாதவாறு பிரிட்டனில் மார்கழி மாதம் என்றால் பெரும் பனிப் பொழிவு வருகிறது. இலங்கையில் கூட காலநிலை சீரழிந்து வருகிறது.

வெப்ப நாடுகள் சூடாகின்றன. குளிர் நாடுகள் வெப்பமடைகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு உலக மாநாடுகள் போட்டு பெரும் குரலெடுத்துப் பேசுகிறார்கள். வளர்ச்சி அடைந்த நாடுகள் தங்களது குப்பைகளை எல்லாம் கொண்டு போய்க்கடலில் கொட்டுகின்றன.

கடலுக்கடியில், பாலைவனத்தில் தங்களது அணு குண்டுப் பரிசோதனையைச் செய்கிறார்கள். இதுவெல்லாம் இப்பொழுது திருப்பித் தாக்கத் தொடங்கியிருக்கிறது.

மனிதருக்கான ஆராய்ச்சிகள் எல்லாம் மீண்டும் மனிதருக்கே வினையாக மாறி விட்டது. மனிதர்கள் மனிதர்களைக் கொன்று குவிக்கிறார்கள். போதாதற்கு இயற்கையும் மனிதர்களை கொன்று போடுகிறது. இயற்கையை அதன்பாட்டுக்கு விட்டு விடுங்கள் என்று உலகம் முழுவதும் பசுமையைப் பேணுபவர்கள், பசுமைக் கட்சியினர் கூப்பாடு போட்டாலும், இயற்கைக்குத் தொடர்ந்தும் தொந்தரவு கொடுத்த வண்ணமே இருக்கின்றனர் மனிதர்கள். நச்சு வாயுக்களை அதிகம் அதிகமாகப் பூமியை நோக்கிப் பரப்பி கொண்டிருக்கும் வல்லரசு நாடுகள் உலகம் அழிவதை துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றன. கடந்த 100 வருடங்களாக காலத்துக்கு காலம் பூமியதிர்வும் பெரும் இயற்றை அழிவுகளும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

1906ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பிரான்ஸிஸ்கோ நகரிலும், 1908ஆம் ஆண்டில் இத்தாலியின் மெஸீனா நகரிலும், 1923ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியோ நகரிலும்,1936ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் குவாட்டோ நகரிலும், 1939ஆம் ஆண்டில் சிலி மற்றும் துருக்கி நாடுகளிலும், 1960ஆம் ஆண்டில் மொறொக்கோ நாட்டிலும், 1970ஆம் ஆண்டில் பெரு நாட்டிலும் 1976ஆம் ஆண்டில் சீனாவிலும், கௌதமாலாவிலும், 1988ஆம் ஆண்டில் ஆர்மேனியாவிலும், 1989ஆம் ஆண்டு கலிபோர்ணியாவிலும், 1995ஆம் ஆண்டில் மீண்டும் ஜப்பானிலும் 1999ஆம் ஆண்டில் துருக்கியிலும் என நீண்டு சென்ற இந்த பூகம்பத் தாக்கங்களால் உயிரிழந்தவர்களின் தொகை கணக்கில் அடங்காதவை. பாதிக்கப்பட்டோர், சொத்து சுகம் இழந்தோர் என பல்லாயிரக் கணக்கானோரின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் ஓரிரு நிமிடங்களில் தலைகீழ் மாற்றங் கண்டது. அத்தகைய இயற்கைப் பேரழிவுகளிலிருந்து மீண்டெழ அந்நாடுகளுக்குப் பெரும் கால அவகாசம் தேவைப்பட்டது. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்திப் பெருங்கடலில் ஏற்பட்ட பூகம்பத்தினால் மூன்று லட்சம் பேர் இறந்தனர். உலக ஓட்டத்தையே மாற்றியமைத்த அதிர்வு இது.

2008ஆம் ஆண்டு மே 12ஆம் திகதி சீனாவின் பூகம்பத்தில் 68 ஆயிரம் பேர் இறந்தார்கள். 8 றிச்டர் அளவாக அதிர்வு பதிவாகி இருந்தது.

8.8 றிச்டர் பூகம்பம் 2010ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி சிலியை அடித்து நொருக்கியது. மூன்று லட்சம் பேர் நிர்க்கயானார்கள்.

இப்போது 2011இல் ஜப்பானில் போது இயற்கை மனிதர்களைக் காவு கொள்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில் மிகப் பெரிய அளவில் ஏற்பட்ட பூமியின் அதிர்வுகள் இவை. எத்தனை சாவுகள்?

பாதுகாப்பான ஒரு இடத்தில் நாங்கள் இருக்கிறோம் என்று நிம்மதியாக இந்தப் பூமியில் ஒரு இடத்தைக் கூட காண்பிக்க முடியவில்லை. இயற்கைக்கு நாங்கள் தொந்தரவு கொடுக்க இயற்கை இந்த பூமிப் பந்தில் இருந்து மனிதனை அப்புறப்படுத்திக் கொண்டே இருக்கிறது. இது தான் யதார்த்த உண்மை. ❋



# கவிதைப்புனல்





## புகழ்

அருமைத் தமிழ் பயிற்றும்
ஆசிரிய குலத்தோரே,
பெருமைப்படுகின்றோம்,
பேராற்றல் உள்ளவர் நீர்!
ஆக்கவும் , மாணவரை
அழிக்கவும், தமிழாலே
காக்கவும் வல்லவர் நீர்,
கண்டுள்ளோம் கேட்டுள்ளோம்!
தமிழ் வீழ்ச்சிக் காலம் இது,
தமிழ் காத்த மன்னர் இவர்!
அமுதாம் தமிழ் நமக்கு,
அதை விட்டால் நாம் இல்லை!
வரலாறு பொய்யோடும்
வழங்கப்படும் காலம்!
தரம் ஆண்டார் சிலை கூடத்
தரைமட்டம் தமிழரதால்!
திண்மையுடன் பாடத்
திட்டம் செயல்படுங்கால்
உண்மைகளை மாணவர்க்கு
உரைப்பதுவும் உம்கடனே!
பொய்கள் வளருங்கால்
பொறுமை பெருமை பெறா!
மெய் கண்டுரைப்பதுவும்
மேலான நற்றொண்டாம்!
தடைகள் பலப்பலவாம்
தமிழுக்கீது வரையில்!
தடைமீறிச் செல்லுவதும்
சட்டத்தின் ஊக்குவிப்பே
ஆதலினால் தமிழுக்கே
ஆனபணி செய்து
போதலுமிங் குமக்கோர் புகழ்!

தாமரைத்தீவான்,
ஈச்சந் தீவு- கிண்ணியா.

## கண்ணீர்

அராஜகத் தொழிற்சாலையில்
அதிகம் உற்பத்தியாக்கப்படுகிறது
கண்ணீர்

## வறுமை

நாகரிகத்திற்காக
ஆடைகளைக் கிழித்துவிட்டு
போடுகிறார்கள் - அவனோ
நான்காம் ஆண்டில் போட்ட
காற்சட்டையை நான்கு ஆண்டுகளாக
போடுகிறான் வறுமையால்

## பலி

பேய்களின் நேர்த்திக் கடனுக்காய்
நாய்கள் பலிசெய்கின்றன
மனித மாடுகளை

கீ.பீ.நிதுன்
முல்லைத்தீவு.

## புதுயுகம்

ஐந்தாம் பிறைஉன் நகம்
நிலவை விட அழகு முகம்
நீதான் எனக்கு அகம்
ஒரு முறை தா வரம்
இருவரும் படைப்போம்
புதுயுகம்.

—கதிர், நெடுந்தீவு—4—



## நீ


ஒருமுறை நீ
விழியலை பிறப்பிப்பாயா?
என்றும் நித்தம்
ஏங்கிறது
உன் பார்வைக்காய்
நீ வந்து
சென்றாய் பின்பு
என் இதயப் பரப்புக்களில்
நிறைந்த
துவாரங்கள்

வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணி.

## கல்வெட்டு

எழுதி எழுதி அழிப்பதற்கு
என் இதயம்
கரும்பலகையல்ல...
கல்வெட்டு!
அகழ்ந்தெடுக்கும்
காலம் வந்தாலும்
என் இதயம்
உன் நினைவுகளை
சுமந்திருக்கும் கண்மணியே!

நாகராசா பாலகுமரன்,
வட்டுக்கோட்டை.



## கவனம்



அரசியல் சாதி
தேர்தல் காலமதில்
ஓட்டுக் கேட்டு
மக்கள் காலைப் பிடிப்பார்கள்
கதிரையைப் பிடித்ததும்
கதிரையில் ஏறி – மக்கள்
எம் கழுத்தை நெரிப்பார்கள்
கவனம்

–சி.இனியபாரதி,
கற்சிலைமடு.

## நட்புக்காக...

சொல்லிக் கொள்ளாமலே,
நகர்கிறது
நம்முடன்
நம் காதலும்
நாமோ
சொல்லிக் கொள்கிறோம்
நண்பர்கள் என்று.

கம்சத்வதனி,
பாலசுப்பிரமணியம்.



# முதல் சுற்று முடிவுகள்



## அதிகூடிய ஓட்டங்கள்

சங்கக்கார (இலங்கை)
6 போட்டிகள், 363 ஓட்டங்கள்

ரொறட் (இங்கிலாந்து)
6 போட்டிகள், 336 ஓட்டங்கள்

ஸ்ரோறஸ் (இங்கிலாந்து)
6 போட்டிகள், 329 ஓட்டங்கள்

சேவாக் (இந்தியா)
5 போட்டிகள், 327 ஓட்டங்கள்

சச்சின் (இந்தியா)
6 போட்டிகள், 326 ஓட்டங்கள்

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

அப்ரிடி (பாகிஸ்தான்)
6 போட்டிகள், 17 விக்கெட்டுக்கள்

சகீர்கான் (இந்தியா)
6 போட்டிகள், 15 விக்கெட்டுக்கள்

பீற்றர்ஸன் (தென்னாபிரிக்கா)
6 போட்டிகள், 14 விக்கெட்டுக்கள்

சவுத்தீ (நியூஸிலாந்து)
6 போட்டிகள், 14 விக்கெட்டுக்கள்

றோச் (மேற்கிந்தியத்தீவுகள்)
5 போட்டிகள், 13 விக்கெட்டுக்கள்

## அதிகூடிய சிக்ஸர்கள்

ரெயிலர் (நியூஸிலாந்து)
6 போட்டிகள், 13 சிக்ஸர்கள்

பொலாட் (மே.தீவுகள்)
6 போட்டிகள், 11 சிக்ஸர்கள்

கே.ஓ பிரெயின் (அயர்லாந்து)
6 போட்டிகள், 9 சிக்ஸர்கள்

சச்சின் (இந்தியா)
6 போட்டிகள், 8 சிக்ஸர்கள்

வில்லியர்ஸ் (தெ.ஆபிரிக்கா)
4 போட்டிகள், 7 சிக்ஸர்கள்

## 'ரொப் 5' விக்கெட்காப்பாளர்கள்

ஹடின் (ஆஸ்திரேலியா)
6 போட்டிகள், 12 ஆட்டமிழப்புக்கள்

சங்கக்கார (இலங்கை)
6 போட்டிகள், 10 ஆட்டமிழப்புக்கள்

பிரியர் (இங்கிலாந்து)
6 போட்டிகள், 10 ஆட்டமிழப்புக்கள்

தோமஸ் (மேற்கிந்தியத்தீவுகள்)
6 போட்டிகள், 10 ஆட்டமிழ்பயுக்கள்

வன்விக் (தென்னாபிரிக்கா)
5 போட்டிகள், 8 ஆட்டமிழப்புக்கள்

---

பாகிஸ்தான் அணியின் அதிவேக பந்துவீச்சாளரான சொஹைப் அக்தர், தற்போதைய உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறவுள்ளதாக நேற்று வியாழக்கிழமை அறிவித்தார்.

நியூஸிலாந்து அணியுடனான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 110 ஓட்டங்களால் தோல்வியுற்ற பின்னர் அக்தர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். அந்த ஆட்டத்தில் 9 ஓவர்கள் பந்துவீசிய அக்தர் 70 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரம் கைப்பற்றியிருந்தார்.

'நான் ஓய்வுபெறுவதற்குத் தீர்மானித்துள்ளேன். உளவியல் ரீதியாக நான் தொடர்ச்சியாக விளையாடவேண்டும் என விரும்புகிறேன். எனினும் இளையவர்களுக்கு வழிவிட நான் தீர்மானித்துள்ளேன்' என 35 வயதான சொஹைப் அக்தர் தெரிவித்துள்ளார். எனக்குக் கவலைகள் இல்லை. எனக்கு ஏராளமான நண்பர்கள் கிடைத்தனர். எனினும் பலர் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டனர். வஸிம் அக்ரம், வக்கார் யூனிஸ் ஆகியோருடன் விளையாடக் கிடைத்தமை ஒரு கௌரவமாகும். பாகிஸ்தான் அணிக்காக விளையாடுவேன் என நான் எண்ணியிருக்கவில்லை. அது மிகச் சிறந்த தருணமாகும்'' என அவர் கூறியுள்ளார்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணியின் கடைசி ஆட்டம்தான் எனது கடைசி ஆட்டமாக இருக்கும். அது ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறும் உலகக் கிண்ண இறுதி ஆட்டமாக இருக்கும் என நான் நம்புகிறேன் எனவும் அக்தர் தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டு சர்வதேசப் போட்டிகளில் அறிமுகமான அக்தர், 46 டெஸ்ட் போட்டிகளில் 178 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இறுதியாக 2007ஆம் ஆண்டு இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் அவர் விளையாடினார். அத்துடன் இதுவரை

# விடைபெறுகின்றது 'ராவல்பிண்டி எக்ஸ்



# ஐ.சி.சியின்

| அணிகள் | |
|---|---|
| ஆஸ்திரேலியா | - 131 |
| இந்தியா | - 118 |
| தென்னாபிரிக்கா | - 118 |
| இலங்கை | - 117 |
| இங்கிலாந்து | - 106 |
| பாகிஸ்தான் | - 101 |
| நியூஸிலாந்து | - 93 |
| மே.இந்தியத் தீவுகள் | - 69 |
| பங்களாதேஷ் | - 68 |
| அயர்லாந்து | - 41 |



# மன்

தென்னாபிரிக்காவிடம் தே
காக தங்கள் நாட்டு ரசிகர்களி
அல் ஹசன். இது குறித்து அ
'எங்கள் மீது ரசிகர்கள் மி
தது. அதை நாங்கள் வீணடித்
யாடவில்லை. அதற்காக ரசிக
தற்கு குறிப்பிடு
முழுவதுமே எங்
இதேவேளை மே
பங்களாதேஷ் அ
செய்தது. இதில்
றதைத் தொடர்ந்
யினரின் பஸ்மீது
கர்கள் எவ்வளவு
என்பது எல்லோ

3 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி 247 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

பயிற்சிக்காக ஆர்.பிரேமதாஸ அரங்குக்கு பாகிஸ்தான் அணினர் வந்தபோது உடைமாற்றும் அறையில் அணித்தலைவர் அப்ரிடியும் ஏனையவீரர்களும் அக்தரைக் கட்டித் தழுவினர்.

'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என வர்ணிக்கப்படும் சொஹைப் அக்தர் 2003ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளின்போது மணித்தியாலத்துக்கு 100 மைல் (160 கிலோமீற்றர்) வேகத்தில் பந்துவீசி புதிய உலக சாதனை படைத்தமை குறிப்பிடத் தக்கது.

இந்தத் தொடரில் அக்தர் கென்ய அணியுடனான போட்டியில் 5 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களைக் கொடுத்தார். எனினும் விக்கெட் எதையும் கைப்பற்றவில்லை.

இலங்கை அணியுடனான ஆட்டத்தில் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கனேடிய அணியுடனான போட்டியில் பங்குபற்ற வில்லை. நியூஸிலாந்து அணிக்கெதிராக 70 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டை வீழ்த்தினார். அதன்பின் ஸிம்பாப்வே அணியுடனான போட்டியின்போது அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது.

...வறான வழியில் செல்லாத நாட்டுப்பற்றுடன் விளையாடிய வீரராக நான் நினைவு கூரப்படவேண்டும்' என அக்தர் தெரிவித்துள்ளார்.

களத்தில் சிறப்பாகச் செயற்பட்டாலும் காயங்களும் சர்ச்சைகளும் அக்தரின் கிரிக்கெட் வாழ்வைப் பெரிதும் பாதித்திருந்தன.

இறுதியாக, நியூஸிலாந்துடனான ஆட்டத்தின்போது பிடியைத் தவறவிட்ட விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மலுடன் தகராறில் ஈடுபட்டமைக்காக அக்தருக்கு 2000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ...ஸ்பிறஸ்'






# விளையாடுகிறார் அசோக டி சில்வா

உலகக் கிண்ண கிரிக்கெட்டில் நடுவராகக் பணியாற்றி வரும் இலங்கை நடுவர் அசோக டி சில்வாவின் நடுவர் பொறுப்பிற்கான திறமைகள் மீது அணித் தலைவர்களுக்குக் கடும் சந்தேகங்கள் எழுந்துள்ளது. அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்ட் தற்போது டி சில்வாவின் தீர்ப்பின் மீது விமர்சனம் செய்து எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான அயர்லாந்து ஆட் டத்தின்போது அயர்லாந்து வீரர் கேரி வில்சனுக்கு நடுவர் அசோக டி சில்வா அவுட் கொடுத்தது பற்றி விமர்சனம் செய்ததற்காக அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்டிற்கு ஐ.சி.சி. எச்சரிக்கை விடுத்துள்ளது. அன்றைய தினம் கேரி வில்சன் 61 ரன்கள் எடுத்து விளையாடி வந்தபோது அசோக டி சில்வா அவருக்கு எல்.பி.டபிள்யூ. கொடுத்தார். பந்து விக்கெட்டுக்கு வெளியே அவரது பேட்டைத் தாக்கியது. விதிகளின்படி இது ஆட்டமிழப்பில்லை. ஆனால் அசோக டி சில்வா, பந்தை விளையாடாமல் மட்டையால் தடுத்தார் என்று நினைத்து அவுட் என்று தீர்மானித்தார். மேல் முறையீடு செய்யப்பட்டபோது பந்து விக்கெட்டுக்கு வெளியே பிட்ச் ஆனது தெரிந்தது. இதில் பந்தை விளையாட முயன்றாரா அல்லது இல்லையா என்பதெல்லாம் கேள்வியே அல்ல என்பது போர்ட்டர் பீல்டின் வாதம்.

மேலும் மேல்முறையீடு செய்தபோது பந்து காப்பை முதலில் தாக்கியதா? துடுப்பை முதலில் தாக்கியதா? என்றே டி சில்வா கேட்டார். அப்படியிருக்கையில் பந்தை அவர் விளையாட முயன்றாரா இல்லையா என்ற கேள்வி எங்கிருந்து வரும்? என்று அயர்லாந்து அணித்தலைவர் கேட்பதில் நியாயம் இல்லாமலில்லை.

நடுவர் அசோக டி சில்வாவின் நடுவர் திறமைகளின் மீது நிறைய சந்தேகங்கள் ஏற்கனவே உண்டு. சௌரவ் கங்குலிக்கு குறைந்தது 4 முறையாவது டெஸ்ட் ஆட்டங்களில் மட்டையின் விளிம்பில் பட்ட பந்திற்கு எல்.பி.டபிள்யூ. கொடுத்தவர்தான் இந்த அசோக டி சில்வா.

# ஒருநாள் போட்டிக்கான தரவரிசை

| பந்துவீச்சு | | துடுப்பாட்டம் | |
|---|---|---|---|
| வெற்றோரி(நியூஸி.) | - 712 | அம்லா (தெ.ஆ.) | - 886 |
| மோர்க்கல்(தெ.ஆ.) | - 679 | ஏ.பி.டி.வில்லியர்ஸ்(தெ.ஆ.) | - 812 |
| ஸ்ரெய்ன்(தெ.ஆ.) | - 668 | மைக்கல் ஹசி (ஆஸி) | - 755 |
| சுவான் (இங்கிலாந்து) | - 665 | விராட் ஹோக்லி (இந்தியா) | - 752 |
| பிறிஸ் (சிம்பாப்வே) | - 660 | டில்ஷான் (இலங்கை) | - 740 |
| அப்துர் ரஷாக்(பங்களாதேஷ்) | - 656 | டோனி (இந்தியா) | - 725 |
| ஜோன்சன்(ஆஸி) | - 650 | சங்கக்கார (இலங்கை) | - 722 |
| குலசேகரா (இலங்கை) | - 650 | ஷேவாக் (இந்தியா) | - 718 |
| சகிப் அல்ஹசன் (பங்களாதேஷ்) | - 642 | டெண்டுல்கார் (இந்தியா) | - 707 |
| புரோட் (இங்கிலாந்து) | - 638 | ரொட் (இங்கிலாந்து) | - 696 |

(வெளியீடு 15.03.2011)

# ...னிப்பாயா...




...டம் தோற்று உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து வெளியேறியதற்...சிகர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார் பங்களா தேஷ் அணித் தலைவர் சகிப் ...த்து அவர் மேலும் கூறியதாவது:

...கள் மிகுந்த நம்பிக்கை வைத்தி ருந்தனர். அதிக அளவில் எதிர்பார்ப்பும் இருந்...ணடித்து விட்டோம். உலகக் கிண்ணப் போட்டிகளில் நாங்கள் சரியாக விளை...ாக ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நாங் கள் தோல்வியடைந்...றிப்பிடும்படியான காரணம் எதுவும் இல்லை. உலகக் கிண்ணப் போட்டி...மே எங்கள் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக அமைந்து விட்டது' - என்றார்...ளை மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிராக ...தேஷ் அணி மிர்பூர் மைதானத்தில் மோசமான தோல்விகளைப் பதிவு ... இதில் மேற்கிந்தியத்தீவுகளுடான ஆட்டத்தில் பங்களாதேஷ் தோற்...தொடர்ந்து பங்களாதேஷ் ரசிகர்களினால் மேற்கிந்தியத்தீவுகள் அணி ...பஸ்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் மூலம் பங்களாதேஷ் ரசி...வ்வளவு தூரம் அந்த அணியின் வெற்றியை எதிர்பார்த்தார்கள் ...ல்லோருக்கும் தெரிந்திருக்கும்.



சிறுகதை

# வீரா

வி.ஜெயபால்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பனை வடுக்களாய், ஒட்டிய நிழல்களாகிவிடும் நிஜங்கள் இருக்கவே செய்யும். அவை தரும் பாடங்களும், யதார்த்தத்தைப் புரியவைக்கும். இதற்கு நான் மட்டும் விதிவிலக்கானவனா என்ன?....

இன்று மனதுக்குள் ஒரு உறுத்தலை தந்து நீங்காத இடம்பிடித்துவிட்டது அந்த வீரா.

அன்று அந்திப் பொழுது சூரியன் அடிவானத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தான். என் நண்பனைச் சந்திப்பதற்காக துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தேன். மாலை நேரக் குளிர்ச்சி இதமாக இருந்தது. அப்போதுதான் அது நடந்தது.

என்னை அதுதான் கண்டிருக்க வேண்டும். மனிதர் காணாத என் நல்ல குணத்தை, ஒருவேளை பிரம்மன் அதன் காதில் சொன்னாரோ என்னமோ?

என் பின்னே வாலை ஆட்டி ஆட்டி வந்து கொண்டே இருந்தது. அது யாருக்குச் சொந்தமானதோ தெரியவில்லை.... அநாதையாக விடப்பட்டதோ.... பாதை தவறி வந்ததோ? தெரியவில்லை.....

யாரும் வீண் சண்டைக்கு வந்து விடுவார்களோ? என்ற பயம் ஒரு புறம். ஆனாலும் யாரும் அற்ற வீதியில் தான் அதைக் கண்டேன். இரண்டு மாதக் குட்டியாக இருக்க வேண்டும்.

ஆணா...?

பெண்ணா....? அதைக் கூடப் பார்க்கவில்லை. பாசத்துடன் அரவணைத்தேன்.

என் கைகளை நக்கியது, வாலை ஆட்டிக் கொண்டு ஏதோ சொல்வது போல் பாசாங்கு செய்தது....

மிருகத்திற்குப் பேசும் சக்தி இருந்தால் எத்துணை நன்றாக இருந்திருக்கும். இம்... இதுவும் சரிதான். பேசும் மனிதனின் உரிமை பறிக்கப்படும் போது...?

''வீட்டில் நாய் இல்லாததால் கண்ட நாய்களும் வந்து களவெடுக்குது'' என்று அம்மா கொஞ்ச நாட்களுக்கு முன்பு சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. எப்படியும் இதை வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆசையுடன் கைகளில் ஏந்தி, எனது, வலது, விலாப்பக்கம் அணைத்தபடி துவிச்சக்கர வண்டியை வேகமாகச் செலுத்தினேன்.

போவோர் வருவோர் எல்லோரும் என்னைப் பார்ப்பது எனக்குத் தெரிகிறது. ஏதோ விசித்திரத்தைப் பார்ப்பது போல் என்னை உற்றுப் பார்க்கிறார்கள்.

மனிதர்கள் இப்படித்தான். எதையும் விசித்திரமாகப் பார்த்துப் பழகிவிட்டார்கள்.... எனக்கு என் வேலைதான் முக்கியம்.

கையில் இருந்த குட்டி நழுவப் பார்க்கிறதாகப் பிரமிப்போ என்னவோ? அடிக்கடி நழுவப்பார்க்கிறது. மீண்டும் சரி செய்து கொள்கிறேன்.

சாம்பல் நிறம், முன்னங் கால்களிலும் கறுப்பு வெள்ளைப் புள்ளிகள். பஞ்சு மெத்தை போன்று அதன் மேனியின் மொழுமொழுப்பு ஏன் உள்ளத்திற்கு இதமாகத்தான் இருந்தது.

யாரும் உரிமையோடு வந்து கேட்டால் கொடுப்போம், என்ற நினைப்புடன் வீட்டுப் படலையைத் திறந்து உள்ளே வருகின்றேன். வரும் போது முன் கடைக்கார அப்புவிடம் யாரும் வந்து விசாரித்தால் சொல்லும்படி கூறிவிட்டுத்தான் வந்தேன்.

வாசலின் எதிர்ப்பக்கம் அரிசி புடைத்துக் கொண்டிருந்த அம்மா கண்டு விட்டார்.

என்ன தம்பி....?

உது ஆற்ற நாய்க் குட்டி?

அம்மாவின் கேள்விக்குப் பதில் கூறித்தானே ஆக வேண்டும். ''இது றோட்டில அனாதையாய் நின்டது... பிடிச்சுக் கொண்டு வந்தன். யாரும் வந்து கேட்டால் கொடுப்பம். இப்ப இருக்கட்டும்'' என்று சொல்லி வார்த்தை ஜாலம் செய்து விட்டு வீட்டின் வாசற்படியில் இறக்கி விட்டேன்,

வாலை ஆட்டி, காலை நக்கியபடி எனது கால்களை தனது முன்னங் கால்களால் பற்றிப் பிடிக்கிறது. ஏதோ நன்றி சொல்வது போல் உணர்வு எனக்குள்.

> **போர் என்றால் ஓடி ஒளியும் மனநிலையில் இருந்த என்னை இடப்பெயர்வு கூடுவிட்ட குருவியாக ஊரைவிட்டு ஓட வைத்தது.**

ஓடுவதும், துள்ளுவதும் வீட்டில் உள்ள பொருட்களைப் பார்த்து உறுமுவதுமாக, பல பரீட்சார்த்த செயல்களைச் செய்தபடி இருந்த குட்டியை வீரா என்று அழைக்கத் தீர்மானித்தேன், அவ்வாறு அழைக்கவும் தொடங்கினேன்.

நாட்கள் கால்கட்டி ஓடத்தொடங்கின. யாரும் தேடி வந்ததாகத் தெரியவில்லை. எங்கள் வீட்டிற்கு காவல் காரன் கிடைத்த திருப்தி.

வீரா, என்றும் வீரனாக, வீட்டிற்குச் சிறந்த காவலனாக விளங்கியது. இரவில் ஏதும் சத்தம் கேட்டால், உஷாராகி வெறித்தனமாகக் குரைக்கும். அயலார், மாற்றார், உறவினர் எல்லோரையும் பேதம் பிரித்துக் கொள்ளும். எதற்கும் அஞ்சாத பேர்வழி.

இப்படித்தான் ஒருநாள் வீதியால் கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு வந்தவர்களிடம் மாட்டிக் கொண்டது. ஆனால் தனது சாதுரியத்தால் கம்பியை அறுத்து வாயில் வழியும் இரத்தத்தோடு வளவில் அங்கும் இங்கும் ஓடிக்குரைத்தது. அன்று எமன் வாயில் இருந்து தப்பிப் பிழைத்த இறுமாப்பு... கோப வெறிகூடவே எங்களைக் கண்டதும் இரட்டிப்பாக குரைத்தது. வாசல் வரை சென்று குரைத்தது. அதன் பின் யாருமே தன்னைப் பிடிக்க முடியாதபடி மாற்றிக் கொண்டது.

குடும்பத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்றால், முன் கூட்டியே தன் செயல் மூலம் காட்டி விடும் சாதுரியசாலி.

ஒரு நாள் காலை வீரா வித்தியாசமாக ஊளையிட்டு வீட்டிற்குள்ளும் வெளியிலும் குரைத்துக் குரைத்து ஓடியது. என் சாரத்தை பிடித்து வெளியே இழுத்தது. அம்மாவுக்கும் எனக்கும் ஒன்றும் புரியவில்லை. நீண்ட நேரமாகக் குட்டியை இழந்த தாய் போலப் பதறியது. ஏதும் புரியாத எம்மை வெறித்துப் பார்த்தபடி வாசலில் படுத்து விட்டது. அதன் இரண்டு கண்களிலும் கண்ணீர்.... ஏதோ கூறமுடியாத தவிப்பு.

அன்று மதியம் செல்லையா மாஸ்டர் சைக்கிளில் வந்து மணியடித்தார். அவர் எங்களின் தூரத்துச் சொந்தம் தான். ஏதாவது அவசர செய்திகளை வாசலில் நின்று சொல்வார். விசேடம் என்றால் உள்ளே வந்து பேசுவார்.

தம்பி மாஸ்டர் வந்திருக்கிறார்.... போய்ப்பார்..... அம்மாவின் குரல் கேட்டுப் புத்தகத்தை மூடிவிட்டுச் சென்றேன்.

கணேஷா, உங்கட தங்கச்சிய ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறன்.... அவர் கூறிய வார்த்தைகளைக் காதுகள் வாங்கிக் கொள்ள காலையில் இயல்பற்ற வீராவின் செயற்பாடுகள் மனதில் பொறிதட்டின.

ஏன்? என்ன? சுதாவிற்கு....

'சீரியஸ்சாய்' ஒன்றுமில்லை..... சற்றுமுன்னாடி ரீயூசனுக்குப் போட்டு வந்த வழியிலை வேன் ஓட்டோ தட்டிப்போட்டுது...

கையிலையும் தலையிலையும் சின்னச் சின்னக் காயங்கள்

அம்மா அம்மா.... சுதா ஆஸ்பத்திரியிலையாம், 'என்ன நடந்து போச்சு' என்று பரபரப்புடன் ஓடிவந்த அம்மாவைச் சமாதானப் படுத்தினோம். வீரா வாலை ஆட்டி ஊளையிட்டுக் காட்டியது. பரிதாபமாக அதன் முதுகைத் தட்டி விட்டு புறப்பட்டேன்.

இரண்டு நாட்களின் பின் சுதாவைக் கூட்டிவந்த போது வீராவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. துள்ளிக் குதித்து அவளது அருகே சென்று கால்களை நக்கியபடி அருகில் சுகம் விசாரிப்பது போல் படுத்துவிட்டது.

சுதாவிற்கும் வீரா என்றால் போதும். தனது 'ஹீரோ' வாக அதனைப் பார்ப்பாள். பாடசாலையால் வரும் வரை வாசலில் நின்று பார்த்துக் கொண்டு இருக்கும். விமானம் குண்டு வீசும் வேளைகளில் யாராக இருந்தாலும் நிலத்தில் படுத்து விட வேண்டும். நின்றால் பிடித்து இழுத்து விழுத்திவிடும். தானும் படுத்துவிடும். இப்படிப்பட்ட போர்த் தற்பாதுகாப்பு அறிந்த நாய் அது வருவோர் போவோர் பெருமிதமாகப் பேசிக் கொள்ளும் செயல் வீரன்.

தாய் மண் எனக்குத் தந்த உரமான உழைப்பும், உணர்வும் என்னோடு கூட இருந்தாலும், நான் சுத்த துணிச்சல் காரன் என்று சொல்லிவிட முடியாது. போர் என்றால் ஓடி ஒளியும் மனநிலையில் இருந்த என்னை இடப் பெயர்வு ஊரைவிட்டு கூடுவிட்ட குருவியாக ஓடவைத்தது.

அந்த இடப்பெயர்வின் போது ஊர் விட்டு உயிர்காக்க ஓடத் தயாரான அவசரத்தில் வீராவைக் கவனிக்கவில்லை. அது வளவின் ஏதாவது ஒரு மூலையில் இருந்திருக்க வேண்டும். அல்லது எங்கள் பின் வந்திருக்க வேண்டும் அல்லது பயத்தில் எங்கேயாவது ஓடி ஒழித்திருக்க வேண்டும். என்ற நினைவில் வீராவை நீண்ட நாட்கள் மறந்தே விட்டேன்.. அதற்கொரு அகதி வாழ்க்கையும் காரணம்.

ஒசாமா பின்லேடனைத் தேடிப்போன அமெரிக்கப்படைபோல எங்கட சொந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தர்பார் நடத்திய தந்திர நரிகள், ஏதோ உலகத்தின் அனுதாபத்தைப் பெறவும், தங்கட சுயரூபத்தை மறைக்கவும் பல மாதங்களின் ஊர் பக்கம் திரும்பிப் போவதற்கு எமக்கு அனுமதி வழங்கின.

சோகம், கோபம், ஏக்கம், வெறுப்பு என எல்லாவற் றையும் சுமந்தவர்களாக மீண்டும் சொந்த ஊர் திரும்பிக் கொண்டிருந்த வேளை. மிதிவெடிப்பயம் ஒரு புறம்... பற்றைகள் வளர்ந்து காடுகள் ஆகிவிட்ட எங்கள் நிலப்பரப்புகளில்..... கால்களைப் பதிக்கின்ற உறவுகளோடு சேர்ந்து நடக்கின்றேன்.

மண் மேடுகள், முட்கம்பி வேலிகள் ஆங்காங்கே கருங்குகைகள் போல் பாதகாப்பு முன்னணி அரண்கள் பல. இவற்றையெல்லாம் ஊடறுத்துப் பற்றைகளாக வளர்ந்து காடுகளாகி விட்ட பாதைகளை முறித்தும் தள்ளியும் ஒதுக்கியும் கொண்டு வீட்டை நோக்கி முன்னேறுகின்றேன். வீட்டுக்கதவுகள் பூட்டிய படியே இருக்கிறது. அதில் ஒரு திருப்தி. மேலும் பாதுகாப்பாக கால்களை மெல்ல மெல்ல ஊன்றி வீட்டினுள் செல்ல மிகவும் பிரயத்தனம் செய்கின்றேன்.

ஒருவாறு வீட்டுப்படிகளை அண்மித்து விட்டேன். அங்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது. எச்சங்களிடையே எலும்புக் கூடொன்று சிதைந்து கிடப்பது தெரிகின்றது. அது வீராவுடையதாகத்தான் இருக்க வேண்டும். அதில் இருந்த ரோமங்கள் அடையாளம் காட்டின.

வீராவும் எம்மைப்போல பயத்தில் எங்கேயாவது ஓடி ஒளிந்திருக்க வேண்டும் என்று எண்ணிய எனக்கு, கும்பகர்ணன் போல் நன்றிக் கடனுக்காக என் வீட்டு வாசலிலேயே மடிந்துவிட்ட வீராவை என்ன சொல்லிப் புகழ்வது. கண்களில் வடிந்த கண்ணீரை துடைத்தபடி தாழ்ந்து பணிகின்றேன்.

தாய் மண்ணின் பற்று என்னவென்று புகட்டிவிட்டு இறந்து போன வீரா போன்று இனிமேல் இன்னொரு நன்றியுள்ள ஜீவன் கிடைக்குமா? அன்று வீரா எனக்கு உணர்த்தி வைத்த வீரம் என் உணர்வுகளில் கலந்து உரமூட்டி வைத்துள்ளது. ★



# தலைமைகளின் தவறுகளால் தவறிப்போன வெற்றிவாய்ப்புகள்



'நிமிர்த்த முடியாத நாயின் வாலை ஒட்ட வெட்டிவிடு, அப்போதுதான் அதற்கு ரோசம் வரும்' என்பார்கள். இந்தக் கதிதான் இப்பொழுது மலையகத் தலைமைகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

இம்முறை நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் மலையகத் தலைமைகளுக்கு நல்ல ஒரு பாடத்தைப் புகட்டி உள்ளன.

ஒன்று படுவோம், ஒன்று படுவோம் என்று கூறிக் கொண்டு மலையகத்தில் பல்வேறு கூட்டணிகளை அமைத்து மலையக மக்களின் வாக்குகளைச் சிதறடித்து சின்னாபின்ன மாக்கிவிட்டனர் இந்த மலையகத் தலைமைகள்.

உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், அதாவது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன், இப்பந்தியில் ஒன்றைத் தெளிவாக சுட்டிக் காட்டியிருந்தோம்.

**மலையகக் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியம்**

"மலையகக் கட்சிகள் தமக்கிடையேயான கருத்து முரண்பாடுகளை ஒரு பக்கம் வைத்து விட்டு வர்க்க ரீதியாக ஒன்றுபட்டு செயல்படமுன்வர வேண்டும். உங்களுடைய ஒற்றுமைதான், உங்களுக்கு உறுதியான ஒரு இடத்தைத் தேடித் தரும். அதன் மூலம் தேர்தலில் மட்டுமல்லாது தோட்டத் தொழிலாளர்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும். இல்லையேல் இனிப்பான அப்பத்தை குரங்கின் கையில் கொடுத்து ஏமாற்றமடைந்த பூனைகளைப் போல் ஏங்கி நிற்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும்' என்று எச்சரிக்கை செய்திருந்தோம்.

ஆனால் இந்த மலையகத் தலைமைகள் நீயா? நானா? என்ற 'ஈகோ'வினால் கிட்டவிருந்த பல வெற்றி வாய்ப்புகளை இழந்து விட்டன.

நுவரெலியா மாவட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. நுவரெலியா பிரதேச சபையில் வெற்றி பெற்று விட்டோம் என்று பெருமையடித்தும் கொள்ளலாம். ஆனால் ஆறுமுகம் தொண்டைமானின் ஆட்கள் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனு நிராகரிக்கப்படாமலிருந்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நுவரெலியா பிரதேச சபையின் முடிவுகளை நோக்கினால், சாந்தினிதேவி, இராதகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணிக் கூட்டு 11 ஆசனங்களையும், மனோ கணேசன்- சதாசிவம் தலைமையிலான கூட்டணி நான்கு ஆசனங்களையும், சுயேட்சைக்குழு ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ள அதேவேளை இடையில் ஐக்கிய தேசியக் கட்சி ஏழு ஆசனங்களைத் தட்டிக் கொண்டது.

> **மலையகத் தலைமைகளுக்குள் காணப்பட்ட ஈகோ போட்டியினால் மலையக மக்களைக் குழப்பியடித்து, யாருக்குப் போடுவது என்ற தடுமாற்றத்தால் நன்கு பரிச்சயமான யானைச் சின்னத்துக்கு அவர்கள் அடையாளம் இட்டு விட்டனர்.**

**பிரிந்து நின்றதால் தேடிக் கொண்ட நஷ்டமே.**

மலையக மக்கள் முன்னணி, மலையகத் தமிழ்க் கூட்டணி, சுயேட்சை ஆகிய மூன்று பிரிவினரும் ஒரே அணியில் போட்டியிட்டிருந்தால், அவர்கள் பெற்ற வாக்குகளின் மொத்த விகிதாசாரப்படி பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு ஆசனங்களைக் கூட பெற்றிருக்க முடியாது. இவர்கள் விட்ட பிழையினால் இங்கு கிடைக்க வேண்டிய மாபெரும் வெற்றி வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தத்தில் வெற்றி பெற்றாலும் இதுவும் ஒரு தோல்வி தான்.

அடுத்ததாக வெற்றி வாய்ப்பு இழக்கப்பட்ட இடங்கள் கொத்மலை, அம்பேகமுவ ஆகிய இரு பிரதேச சபைகளாகும்.

இவ்விரு பிரதேச சபை எல்லைக்குள் மாகாண சபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றில் திகாம்பரத்தின் செல்வாக்கும், ஆதரவும் சிறப்பாகக் காணப்பட்டது. இதனால் இந்த இரண்டு பிரதேச சபைகளையும் திகாம்பரத்தின் அணி கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இங்கும் அவர்கள் விட்ட பிழைதான் ஒற்றுமையிலும் வேற்றுமையாக அமைந்தது. இப்பிரதேச மக்கள் சந்திரசேகரனுக்கும், திகாம்பரத்திற்கும் மதிப்பளிப்பவர்கள். சந்திரசேகரனின் மண்வெட்டிச் சின்னம் நன்கு பழக்கப்பட்ட, மக்கள் மனதில் பதிந்துவிட்ட ஒரு சின்னம். ஆனால் இங்கே அகில இலங்கை முஸ்லீம் காங்கிரசின் மயில் சின்னத்தில் திகாம்பரம் குதித்துக் குட்டையைக் குழப்பிவிட்டார்.

இரவல் சின்னம், முஸ்லிம் கட்சி என எதிரணியினர் மேற்கொண்ட கடைசி நேர பிரசாரம் கைக்குக் கிட்டிய வெற்றியைத் தட்டிப் பறித்து விட்டது. இங்கு பழக்கப்பட்ட மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தால், மனோ- சதா குழுவினர் ஒன்றுபட்டிருந்தால் வெற்றி இவர்களுக்கே கிட்டியிருக்கும்.

இரா.புத்திரசிகாமணி

**எதற்காக இரவல் சின்னம்**

மலையக மக்கள் முன்னணி மண்வெட்டியையும், மயிலையும் தூக்கிப் பிடித்தது போல மனோகணேசன்- சதா குழுவினர் மீனையும் ஏணியையும் தூக்கிக் கொண்டு திரிந்தனர். கூட்டணி என்று கூறிக்கொண்டு ஏன் வேறு வேறு சின்னங்கள். இதனால் ஏற்பட்ட விபரீதங்களை இப்பொழுதுதானும் இவர்கள் உணரமாட்டார்களா?

மலையகத் தலைமைகளுக்குள் காணப்பட்ட தனித்துவ 'ஈகோ' போட்டியினால் மலையக மக்களை குழப்பியடித்து யாருக்கு வாக்குப் போடுவது என்ற தடுமாற்றத்தால் நன்கு பழக்கப்பட்ட யானைச் சின்னத்துக்கே மலையக மக்கள் அடையாளம் இட்டு விட்டனர். இது தான் உண்மை.

இங்கு மற்றும் ஒரு உண்மையை மூடி மறைத்து விடமுடியாது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர் ஆறுமுகன் தொண்டைமான் தனது நிலைப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

தனித்துப் போட்டியிடாமல் அரசுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டாலும் தனது தனித்துவத்தை அவர் நிலை நாட்டி விட்டுள்ளார்.

ஆறுமுகனின் அஞ்சாமை, ஆளுமை தீவிரம் என்பன மலையகத்தில் நன்கேற்கப்பட்ட அம்சங்கள். இவருடைய தீவிரமான பிரசாரத்தால் மலையக மக்கள் வெற்றிலைச் சின்னத்திலும் பெருந்தலைவர், சௌமிய மூர்த்தி தொண்டைமானையும், ஆறுமுகன் தொண்டைமானையும் தான் கண்டனர்.

ஹட்டன் டிக்கோயா நகரசபை மற்றும் அம்பேகமுவ, கொத்மலை, அங்குரங்கெத்த, கலப்பனை ஆகிய பிரதேசங்களிலும் இ.தொ.கா. வேட்பாளர்கள் வெற்றி பெற முடிந்தது.

எனவே மாற்றுத் தலைமையை உருவாக்குவோம் என்ற கூறும் அமைப்புகள், முதலில் தம்க்குள் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும். பின்னர் ஒரணியை ஒரே சின்னத்தை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் நிமிர்த்த முடியாத வாலை ஒட்ட வெட்டிவிடுவார்கள் மலையக மக்கள். தொடர்ந்தும் கோச்சு றோட்டில் பயணம் செய்பவர்கள் தானே மலையக மக்கள் என்று எவரும் மலையக மக்களைத் தவறாக எடைபோட்டு விடக்கூடாது. மலையக மக்கள் இன்று ஹெலிகொப்டரையும் கண்டுவிட்டனர் என்று தெரிந்து கொண்டால் எல்லோருக்கும் நல்லது. ❋



## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

**கணிதப் புதிர் - 09**

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | 13 | 06 | 29 | 22 |
| 21 | 19 | 12 | 10 | 28 |
| 09 | 25 | 20 | 11 | 27 |
| 08 | 26 | 24 | 17 | 15 |
| 14 | 07 | 30 | 23 | 16 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 90 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 08 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 09 | 28 | 22 | 21 |
| 08 | 27 | 26 | 20 | 14 |
| 31 | 25 | 19 | 13 | 07 |
| 24 | 18 | 12 | 11 | 30 |
| 17 | 16 | 10 | 29 | 23 |

# நல்ல நண்பர்கள்



ஆனந்தன் ஓர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன். நல்ல குணம் உடையவன். கடினமாக உழைத்துப் படிப்பவன். வகுப்பில் எப்போதும் முதலிடம் அவனுக்குத்தான். ஆசிரியர்களிடத்தும் நல்ல பெயர் எடுத்திருந்தான். எப்போதும் நண்பர்கள் அவனைச் சூழ்ந்திருப்பார்கள் ராஜா என்பவன் அவனது வகுப்புத் தோழன். ஆனால் அவன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். படிப்பில் மிக மிகக் கவனக் குறைவு உடையவன்; பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்து வந்தான். பணத்தைக் கண்டு மயங்கி அவன் பின்னே மகிழ்ச்சியாகச் சுற்றுவதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. ஆனந்தன் கல்வியில் சிறந்து பிறரிடம் நன்மதிப்பும் பெற்றிருந்ததால் அவன் மீது பொறாமை கொண்டு ராஜாவின் கூட்டம் அவனை எள்ளிநகையாடும். ஆனால் ஆனந்தன் எதைக் கண்டும் மனந்தளராது தனது படிப்பில் கவனம் செலுத்தினான்.

ஒருநாள் வகுப்பு மாணவர் அனைவரும் உல்லாசப் பயணம் சென்றபோது ஒரு குளத்தில் நீராடிக் கொண்டிருந்தனர். ராஜா திடீரென்று ஒரு பள்ளத்தில், சேற்றில் விழ்ந்து தத்தளித்தான். யாரும் அவனைக் காப்பாற்ற முன்வரவில்லை. பணம் பணம் என்று அவன் பின்னே சுற்றியலைந்த நண்பர்கள், அவன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்ததைப் பார்த்தும் கூட பயத்தினால் ஒன்றும் செய்யாது வாளாவிருந்தனர். ஆனால் அதைப் பார்த்த ஆனந்தன், உடனே நீரினுள் குதித்தான். ராஜாவை மீட்டுக் கரை சேர்ந்தான்.

மீண்டும் உயிர் பெற்ற ராஜா, ஆனந்தனின் இரக்கக் குணத்தைக் கண்டு வெட்கித் தலை குனிந்தான். "என்னிடம் அதிக பணம் இருந்தும் நான் நல்ல பெயர் எடுக்கவில்லையே. என் நண்பர்கள் என்று சொன்னவர்கள் என்னைக் காப்பாற்ற வரவில்லையே" என்று என் தவறுகளை நினைத்து வருந்தி, ஆனந்தனிடம் நன்றிப் பெருக்கோடு மன்னிப்புக் கேட்டான்.

ஆனந்தனிடம் பணச்செல்வம் இல்லாவிட்டாலும், கல்வியால் கிடைத்த குணச்செல்வம் இருந்தது. மனிதத் தன்மையின் சிறப்புக்குத் தேவையான பண்பு நலன் இருந்தது. அதுவே ராஜாவின் உயிரைக் காப்பாற்றியது.

- தே.சுஜார்த்தன்




## நாட்காட்டி



ஓர் ஆண்டின் டிசம்பர் மாதத்தின் 23ஆம் நாள் பூமி சூரியனுக்கு அண்மையில் வருகிறது

ஓர் ஆண்டில் 365 நாள்கள் உள்ளதென எகிப்தியர் கி.மு 4241ஆம் ஆண்டில் கணித்தனர். தொலமியின் காலத்தில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு நாளைக் கூட்டி லீப் (Leap) வருடத்தைக் கணித்தனர்

ஓர் ஆண்டில் 365 நாள் 6 மணி 12நிமிடம் 30.915 செக்கன்கள் உள்ளதென இந்திய ஆரியப்பட்டர் (கி.பி. 476) கணக்கிட்டார்

200 கோடி ஆண்டுகளின் முன்னர் ஒரு சூரியன் எங்களின் சூரியனுக்கு அருகில் வந்ததென்றும் அப்பொழுது எங்கள் சூரியனின் ஒரு பகுதி வெளியே இழுக்கப்பட்டதென்றும் அவ்வாறு இழுக்கப்பட்ட பகுதியே உடைந்து சூரியனைச் சுற்றி ஓடும் கிரகங்களாயினவென்றும். அவற்றில் ஒன்றே சூரியன் எனவும் வான சாஸ்த்திரிகள் கூறுகின்றனர்.

- பா.ஆரணன்.

## எரி கற்கள்



நாம் சில சமயங்களில் வானத்தில் வெளிச்சம் எரிந்து கொண்டு வந்து மறைந்து போவதைக் காணுகின்றோம். இது எரி வெள்ளி எனப்படும் உடைந்துபோன வால் வெள்ளியின் துண்டுகள் பூமியை நோக்கி அதிவேகத்தில் வருவதால் அவை பூமியைச் சுற்றியுள்ள வாயுவோடு உரோஞ்சிச் சூடேறி எரிகின்றன அவை 30 முதல் 50 மைல் வேகத்தில் வருகின்றன நிலத்தை அடையுமுன் அவை பெரும்பாலும் எரிந்து போகின்றன சில எரிந்து போகாமல் பூமியில் விழுவதுண்டு. எரி வெள்ளி குண்டூசித்தலை முதல் பல தொன் பாரங்களையும் பல்வேறு பருமன்களையும் உடையவையாகும். வட அமெரிக்காவின் அரிசோனா (Arizona) என்னுமிடத்தில் எரி வெள்ளி விழுந்தமையால் உண்டான ஒரு துவாரமிருக்கிறது. அது 600 அடி ஆழமும் மூன்று மைல் சுற்றளவுமுள்ளது கிறீன்லாந்திலிருந்து இலண்டன் தொல்பொருள் காட்சியகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட வானக்கல் 36 தொன் பாரமுடையது. எரி வெள்ளி விழும்போது ஒலி அலைகளை உண்டாக்குகிறது. அவற்றால் இடிமுழக்கம் போன்ற சத்தம் உண்டாகும். வானக்கல்லில் நிக்கல், குரோமியம், மக்னீசியம், இரும்பு முதலிய உலோகங்கள் காணப்படுகின்றன ஒவ்வொரு நாளும் பூமியின் மீது ஏறக்குறைய ஆயிரங்கோடி விண்கொள்ளிகள் விழுகின்றன. இதனால் பூமியின் பாரம் ஆண்டுதோறும் இருபதாயிரம் தொன் அதிகரிக்கிறது.

## துலங்கும் புள்ளிகள்

### ஆறுமுகநாவலர்



ஆங்கிலமும் செந்தமிழும் அறிவார்ந்த நல்வழியும்
தீங்கறவே கற்றாய்ந்து திகழ்ந்தமகான் - ஓங்குபுகழ்
நாவலரென் றார் புகழ நல்லூரின் பேர்விளங்க
கோவிலெலாம் சீர்விளைத்த கோ

போற்றுசைவத் துறைவிளங்கப் புலமைமிகு வேந்தெனவே
வீற்றிருந்த ஆறுமுக நாவலனார் - ஆற்றிவென்ற
தமிழ்வாழ் பணிச்சிறப்பும் தகைமைமிகு நூற்குவையும்
அமிழ்தமவை அழியாமெய் ஆம்

உரைநடையில் கோமகனார் உவந்தளித்த புராணங்கள்
நிறைவுந்தே நீடூழி நின்றுவக்கும் - கரைசெழிக்க
சீர்கொள்ளும் காட்டாற்றின் சீற்றமென நயம்விரிய
பார்பால பாடம்தேன் படி

- ✱ 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் திகதி பிறந்தார்.
- ✱ தந்தை தாயாரின் பெயர் ப.கந்தப்பிள்ளை- சிவகாமியார்.
- ✱ இந்து மதத்தவர்களுக்கு ஏற்பட்ட கலாசார பாதிப்புக்களையும் சீர்கேடுகளையும் நீக்க முயற்சித்தார்.
- ✱ 1848 இல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் இந்துப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். அதன் மூலம் இந்துப் பாடசாலைகள் பல தோன்றுவதற்கு வழியமைத்தார்.
- ✱ 1897 இல் இந்து பரிபாலன சபையால் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதுவே இன்று இயங்குகின்ற யாழ். இந்துக் கல்லூரியாகும்.
- ✱ உரைநடை தந்த நாவலர் எனப் போற்றப்படுகிறார்.
- ✱ 1879 ஆம் ஆண்டு காலமானார்.

- உமாபாரதி.

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே இது உங்கள் பக்கம். இதில் உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்கள் மூன்றை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப்படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..............................................

பிறந்த திகதி:- ..............................................

வகுப்பு:- ..............................................

பாடசாலை:- ..............................................

சொந்த முகவரி:- ..............................................

கையொப்பம்:- ..............................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அதிபர்/ ஆசிரியர்

..............................

கையொப்பம்

# உயரமாக இருப்பது எனது தவறா?

**நடிகை நமீதா பேட்டி**





கேள்வி: எங்கே ஆளையே காணவில்லை? நமீதா, தமிழ் சினிமா உங்களை மறந்துவிட்டதா?

பதில்: ஹேய்... அப்படியெல்லாம் சொல்லாத. நான்தான் நிறைய சான்ஸை தவறவிடுறேன் மச்சான். சினிமாவும் பங்குச் சந்தையும் ஒன்றுதான். ஒரே படத்தில் திடீரென்று உயர்ந்து வருவோம். ஆனால், அடுத்தடுத்த படம் தோல்வியடைகிறது. எனக்கும் அது நடக்குது. ஆனால், நான் அது பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தமிழில் மட்டும் மாதத்துக்கு பத்து வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதில் 99வீதம் கவர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இப்போது வரை ஒரு படத்துக்குத் தான் ஒப்பந்தம் செய்திருக்கிறேன். இவ்வளவு அனுபவத்துக்குப் பின்னரும் தொடக்கத்தில் செய்த தப்பை நான் மீண்டும் செய்வதாக இல்லை.

கே: எல்லாம் சரி. ஆனால், நமீதா என்றால் கவர்ச்சி என்றுதான் ரசிகர்கள் எண்ணுகிறார்கள். ஏன் உங்களுக்கு இந்த இயக்குநர்கள் நல்ல வேடத்தைக் கொடுப்பதில்லை?

ப: நடிக்க நல்ல வாய்ப்பு இருக்கின்ற நல்ல வேடத்தைக் கொடுத்தால், நமீதா மற்றவர்களை மிஞ்சிவிடுவாள் என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. சினிமாவுக்கு அறிமுகமான காலத்தில் பல தப்பான படங்களைத் தெரிவுசெய்தது நான் செய்த தவறு. மூன்று வருடங்களாக நான் தெரிவுசெய்த எந்த வேடங்களும் சரியாக இல்லை. சரி... முடிந்துபோன விடயத்தைப் பற்றிப் பேசிப் பயனில்லை. இனிமேல் நமீ சிறந்த நடிகை என்று பெயர் வாங்குவா மச்சான்!

கே: உங்களுக்குத் தோல்வியைக் கொடுத்த படங்கள் என்று எதைச் சொல்வீர்கள்?

ப: ம்ம்ம்... என்னை வம்பிலை மாட்டிவிடப் பார்க்கிறீர்களா? நான் அதையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்ல மாட்டேன். அவை எந்தெந்தப் படங்கள் என்று உங்களுக்கே தெரியும். இந்தப் படத்தில் நமீதாவா நடித்திருக்கிறார் என்று உங்களுக்கே அதிர்ச்சியாக இருந்த படங்களில் என்னை நடிக்க வைத்துவிட்டார்கள் சில இயக்குநர்கள்.

கே: மிகவும் உயரமாக இருப்பது உங்களுக்கான சினிமா வாய்ப்புக்களைத் தடுப்பதாக எண்ணுகிறீர்களா?

ப: முகம் சரியில்லை, மூக்கு சரியில்லை என்றால், பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக் கொள்ளலாம். உடம்பைக் குறைக்க உணவுக் கட்டுப்பாட்டில் இருக்கலாம். ஆனால், உயரமாக வளர்வதை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? பொலிவூட்டில் தீபிகா படுகோன், சுஷ்மிதா சென், கத்தரீனா கைப் என்று எல்லோருமே உயரம்தான். அவர்களெல்லாம் உயரம் குறைந்த ஷாரூக்கான், அமீர்க்கான் போன்றோருடன் நடிக்கிறார்களே?

உயரமாக இருப்பது எனது தவறா? ★

# மனத்தொளிரும் பெண்ணின் அழகு

பெண்கள் அழகானவர்கள் என்பது பொதுவான கருத்து. அவ்வாறான பெண்கள் தம்மை மேலும் அழகுபடுத்த அலங்கரித்துக்கொண்டு தேவைதைகளாகக் காட்சி கொடுப்பதுண்டு.

சிலர் தம்மை அழகற்றவர்களாக எண்ணிக்கொண்டு ஒதுங்கிப்போய் மேலும் தங்கள் அழகை இழந்துவிடும் வகையில் அடங்கியிருப்பதும் உண்டு. ஆனால் அழகு என்பது மனதில் இருந்து - எண்ணத்தில் இருந்தே விரிகின்றது. தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு உயிர்ப்பின்றி ஒதுங்கிப்போகும் பெண்கள், தமது அழகைத் தாழ்வாக எண்ணிக்கொள்ளவதனாலும், அழகு இல்லை என்றாகிவிடுவதும் உண்டு.

அழகில்லாதவர்களாக, நிறமில்லாதவர்களாக, கூந்தல் நீளமற்றவர்களாக, பணம் படைத்தோர் போன்று ஆடை அணிகலன்கள் அணியமுடியாதவர்களாக, கையிலே அழகிய கைப்பையும் கைத்தொலைபேசியும் இல்லாமல் போவதெல்லாம் ஒரு பெண்ணின் எழிலைக் குறைத்து மதிப்பிட்டுக் காட்டும் வெளித்தோற்றங்கள் என எண்ணுகின்றோம். உண்மையில் அவைகள் அத்தனைக்கும் மேலாக மனமே அழகின் ஒளித்தோற்றம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். எமது உள்ளம் தூய்மையானது எனின் வாழ்க்கை இனிமையானதாக இருக்கும். எமது வடிவமும் எழில் பெறும். இந்த உலகில் அழகற்றோர் எவருமே இல்லை. எம்மை அழகுபடுத்துவதற்கு பல்வேறு அழகுசாதனப் பொருட்களும் அவசியம் இல்லை. நமக்குள் நாமே எம்மை உள்ளத்தால் அழகுபடுத்த வேண்டும்.

கண்களில் உயிர்ப்புள்ள பார்வை, நல்லெண்ணம், உள்ளத்தூய்மையான புன்னகை, மனத்தைப் பண்படுத்திய தன்னம்பிக்கை, உடல் அமைப்புக்கு ஏற்றாற்போன்ற ஆடை, புடைவைகள் பழையனவாயினும் அவற்றின் தூய்மை, பேசுகின்ற வார்த்தையில் இனிமை, கவர்ச்சி, தெளிவான உச்சரிப்பு, இவை போதுமானது.

நாம் அழகற்றவர்கள் என்ற எண்ணத்தை அறவே தொலைத்து விடுங்கள். அழகான பெண்கள் காட்சிப் பொருட்கள் அல்லர். எழில் கொஞ்சும் தேவதைகளாகத் தம்மைக் கற்பனை செய்துகொண்டு அலங்கரிக்கும் தேவையும் எவருக்குமே இல்லை. பெண்கள் அவர்களுக்குரிய பெண்மை, தாய்மை ஆகிய பண்புகளைக் கொண்டிருப்பதும், அவற்றின் வெளிப்பாடாக விளையும் பாசம், அன்பு, காதல் என்னும் உறவின் உறுதிகள் விளைந்திருப்பதும் ஒரு பெண்ணை எழில் பெறச் செய்கின்றன.


'நான் அழகனாவள்' என்ற தன்னம்பிக்கையே அழகின் உச்சத்தில் ஒருத்தியின் உடலையும், உள்ளத்தையும் உயர்த்துகிறது. அகத்தின் அழகே அவசியம். எனினும் புற அழகும் பேணப்பட வேண்டும். ஒவ்வொரு பெண்ணும் தனக்கென உள்ள சிறந்த கலையுணர்வை வெளிப்படுத்தி ஏனையோரைக் கவர்தல் வேண்டும். எந்தவகை அழகு எவரைக் கவரும் என்பதைக் கற்றுக் கொண்டால் அந்த வகை அழகின் வழி உங்களை அழகு படுத்துங்கள்.

சாதாரண ஆடை பலரைக் கவர்கிறது, அளவுக்கு மிஞ்சிய அலங்காரம் பலரது அழகைக் கெடுக்கிறது. அழகே இல்லாத பெண்கள் இல்லவே இல்லை. எந்தவித அலங்காரங்களும் இல்லாமல் சுத்தமான ஆடையணிந்து தலைசீவி, பொட்டிட்டு வரும் பெண்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்களில் ஒளிரும் அழகை நீங்கள் கண்டு அதிசயித்திருப்பீர்கள். அத்தகைய அழகை வேறு எவரிலும் காணமுடியாது. அழகு உங்களுக்குள்ளேயே இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். வெளியில் கிடைக்கின்ற பொருட்கள் எல்லாம் வீணானவை.

நிமிர்ந்திருங்கள், உதட்டாலும் கண்களாலும் சிரியுங்கள், நீங்கள் செல்லும் இடங்கள் எல்லாம் உங்களைப் பார்த்து உங்கள் அழகை ரசித்துப்பேசும் பலரை நீங்கள் காண்பீர்கள். உங்கள் உடலும் உள்ளமும் உடுத்தும் ஆடையும் தூய்மையாய் இருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள், இனிமையாய்ப் பேசுங்கள். ஏனையவர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் வழக்கத்தை விட்டொழியுங்கள். என்றும் நீங்கள் அழகானவர்கள் தான். ❋



# சீரான உணவுப் பழக்கத்தால் சிறுநீரகக் கல் பாதிப்பைத் தவிர்க்கலாம்




கேள்வி:- சிறுநீரகக்கல் என்று குறிப்பிடப்படுகிறதே. அது என்ன? ஏன் ஏற்படுகிறது? நோயின் அறிகுறிகள் எவை?

பதில்:- சிறுநீரகக் கல் எனப் பொதுவாகக் குறிப்பிடப்படுவது கடினமான, பளிங்குருவான கல் போன்ற பொருளாகும். இது சிறுநீரகத்துக்குள்ளேயோ, சிறுநீர்க் குழாய்களுக்குள்ளேயோ அன்றேல் சிறுநீர்ப் பையினுள்ளேயோ காணப்படலாம்.

எவருக்கும் சிறுநீரகக் கல் வரலாம். ஆனால் சில நோயுள்ளவர்கள், சில மருந்துகளைப் பாவிப்போர் இந்நோய் வரக்கூடிய ஆபத்துள்ளவர்கள் ஆவர். பொதுவாக 20 - 49 வயது வரையுள்ளவர்களே இந்நோயின் தாக்கத்திற்கு முதன்முதலில் உட்படுவர். தொழில் ரீதியாக வளர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் சிறுநீரகக் கல் தாக்கம் உள்ளவர்களாக இருப்பர். ஆனால் வளர்முக நாடுகளில் சிறுநீர்ப்பைக் கல்லே பொதுவாகக் காணப்படும். இந்த வேறுபாடு முக்கியமாக உணவுப் பழக்க வழக்கத்தினாலேயே ஏற்படுகிறது. சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் கல்லானது ஆண்களிலேயே அதிகம் காணப்படுகிறது. 40 வயதளவில் ஆரம்பிக்கும் இவ் அபாயமானது 70 வயது வரை நீடிக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கல் ஏற்பட்டவர்களுக்கு மீண்டும் மீண்டும் சிறுநீரகக் கல் தோன்றிச் சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

சிறுநீரகக் கல் பாதிப்பைக் குடும்ப சரிதையாகக் கொண்டவர்களுக்கு இப் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு அதிகமுண்டு. குறிப்பாக ஆசிய நாட்டவர்கள் மத்தியில் சிறுநீரகக் கல் அபாயம் மிக அதிகம். சிறுநீரகக் கல்லை உண்டாக்கக் கூடிய பதார்த்தங்களின் அளவு சிறுநீரில் அதிகரிக்கும்போது இது உருவாகிறது. பொதுவாக கற்களில் கல்சியம் காணப்படும். இது ஒட்சலேற்று அல்லது பொசுபேற்றுக்களுடன் சேர்ந்த கலவையாகக் காணப்படும். சிறுநீரகக் கல்லைத் தோற்றுவிக்கக் கூடிய இன்னொரு பதார்த்தம் யூரிக் அசிட் ஆகும். குறைந்தளவு நீரை உட்கொள்ளுவது, கடும் உடற்பயிற்சியினால் அதிகளவு நீரிழப்பு ஏற்படுவது, (நீரிழப்பு ஏற்படுவதை ஈடுசெய்யப் போதிய நீராகாரம் அருந்துவது முக்கியம்) என்பன சிறுநீரின் அளவு குறைவதற்கு முக்கிய காரணமாகும். சிறுநீர்ப் பாதையில் அடைப்பு ஏற்படுவதும் சிறுநீரகக் கல் தோன்றுவதற்கு வாய்ப்பாக அமையும். மிக வெப்பமான கால நிலையில் அல்லது உஷ்ண வலயத்தில் வசிப்பவர்களுக்கு நீரிழப்பு அதிகம் ஏற்படுவதனால் அவர்களுக்கு இந்நோய் உண்டாவதற்கான வாய்ப்பு அதிகமாகிறது. சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றினாலும் சிறுநீரகக் கல் தோன்றலாம்.

✱ குருதியிலும் சிறுநீரிலும் யூரிக் அமிலத்தின் அளவு அதிகமாக இருந்தாலும் யூரிக் அமிலக் கல் தோன்றும்.

✱ சிறுநீரில் கல்சியத்தின் அளவு கூடுதல் (Hyper calciuria) கல்சியம் ஒக்சலேற் அல்லது கல்சியம் பொஸ்பேற் கற்களை உருவாக்கும்.

✱ நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் என்பனவும் சிறுநீரகக் கற்களைத் தோற்றுவிக்கக் கூடிய ஏனைய நோய்களாகும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

சில மருந்துக்கள், குறிப்பாக சிறுநீர் ஊக்கிகள், (Diru rgtics) கல்சியத்தைக் கூறாகக் கொண்ட அமில எதிர் மருந்துகள் போன்றவையும் HIV நோயாளரால் பாவிக்கப்படும் CRIXIVAN மருந்தும் சிறுநீரகக் கற்களைத் தோற்றுவிக்கக் கூடிய மருந்து வகைகளாகும்.

எமது உணவுப் பழக்க வழக்கங்களும் சிறுநீரகக் கல்லை உருவாக்கவல்லன. கல் தோன்றக் கூடியவர்களுக்கும் விரைவாக அவை தோற்றம் பெற வழி சமைக்கின்றன.

போதிய நீராகாரம் அருந்தாதவிடத்து சிறுநீரின் அளவு குறைந்து விடுகிறது. இது இந்நோய் தோன்றுவதற்கான மிக ஆபத்தான காரணியாகும். மேலும் அதிகளவில் உட்கொள்ளப்படும் விலங்குப் புரதம், உப்புச் சேர்ந்த உணவை அதிகளவில் உட்கொள்ளல், அதிகளவு இனிப்பு வகைகளை உட்கொள்ளல், அளவுக்கதிகமான விற்றமின் D உட்கொள்ளல் என்பனவும் சிறுநீரகக் கல் உருவாவதை ஊக்குவிக்கின்றன.

சுவாரஸ்யமான தகவலொன்று. சிறுநீரகக் கல் பயத்தினால் கல்சியம் உள்ள உணவை முற்றாகக் கைவிடுவோமானால், கல்சியம் - ஒக்சலேற் சமனிலை பாதிப்படைந்து ஒக்சலேற்றின் வெளியேற்றம் அதிகமாகும். சிறுநீரில் அதிகளவான ஒக்சலேற் வெளியேறுவது ஒக்சலேற் கற்கள் தோன்றக் காரணமாகிவிடும்.

பெரும்பாலான நோயாளிகளில் இந்நோய் அமைதியாக, குணங்குறிகள் ஏதுமின்றி (அடைப்பு ஏற்படும் வரை) காணப்படும். திடீரெனக் கீழ் வயிற்றின் பின்புறத்தில் ஏற்படும் தாங்கமுடியாத், பொதுவாக அசைவது போல் தோன்றுவது (Radiating) இந் நோயின் ஆரம்ப அறிகுறியாகும். அனேகமான வேளைகளில் வயிற்றுப் பிரட்டலும் வாந்தியும் ஏற்படும். உடலின் நிலையை மாற்றிக் கொள்வதால் நோ குறையாது. சிறுநீரோடு செங்கலங்கள் அல்லது குருதியும் வெளியேறக் கூடும். சிலவேளைகளில் நடுக்கத்துடன் காய்ச்சல் காணப்படும். சிறுநீர் கழிப்பதில் சிரமம், சிறுநீர்ப் பாதையில் எரிவு, வலி என்பனவும் இருக்கும். இதற்கு தகுந்த வைத்தியரிடம் ஆலோசனை பெறுதல் அவசியம். ✱

# ஆண்களுக்கான கருத்தடை மாத்திரை

பெண்கள் கருத்தரிக்காமல் இருப்பதற்கு கருத்தடை மாத்திரைகள் உள்ளன. இதை அதிக அளவில் பயன்படுத்தும் பெண்கள் கருப்பை கோளாறில் சிக்கி அவதிப்படுகின்றனர்.

புற்று நோய் காரணமாகக் கருப்பை அகற்றப்படும் பெண்களின் எண்ணிக்கையும் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது.

இதைக் கருத்தில் கொண்டு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆண்களுக்கான கருத்தடை மாத்திரை அறிமுகமானது. இதில் பெருமளவான பின்விளைவுகள் ஏற்பட்டதால் அம்மாத்திரைகளை ஆண்கள் பயன்படுத்தவில்லை.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் உள்ள பார் இலான் பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானிகள் பக்க விளைவு இல்லாத ஆண்களுக்கான கருத்தடை மாத்திரையைக் கண்டுபிடித்தனர். இதுபற்றி விஞ்ஞானி ஹேம் பிரித் பார்டு கூறும்போது, உலகில் உள்ள மக்கள் தொகையை ஒரு கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். இதற்காகத்தான் பெண்களுக்கான கருத்தடை மாத்திரை அறிமுகப்படுத்தப்பட்டது. இதைப் பயன்படுத்திய பல பெண்களின் கருப்பை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இதனால் நாங்கள் ஆண்களுக்கான கருத்தடை மாத்திரையைக் கண்டுபிடித்துள்ளோம். இந்த மாத்திரை சாப்பிடும் ஆண்களுக்கு பின்விளைவு எதுவும் ஏற்படாது. இதை ஆண்கள் துணிந்து உட்கொள்ளலாம்.

ஆண்களின் உயிரணுவில் உள்ள கருத்தரிக்கும் சக்தி மிகுந்த புரோட்டீனை இந்தக் கருத்தடை மாத்திரைகள் முழுமையாகக் கரைத்து விடும். இதனால் கருத்தரிக்கும் வீரியத்தன்மை அவர்களது உயிரணுவில் சிறிதளவும் இருக்காது.

இதை உட்கொள்ளும் ஆண்களுக்கு எந்தவித பக்க விளைவும் ஏற்படாது. இதுபற்றி நடத்திய பரிசோதனையில் பக்க விளைவு எதுவும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன்புதான் சாப்பிட வேண்டும் என்ற அவசியம் எல்லாம் கிடையாது. 3 மாதத்திற்கு ஒரு தடவை இந்தக் கருத்தடை மாத்திரையை ஆண்கள் சாப்பிட்டால் போதும்.

அவர்களது உயிரணுவில் உள்ள கருத்தரிக்கும் புரோட்டீன் முழுமையாகக் கரைந்து விடும். இம்மாத்திரைகளை விரைவில் உலகம் முழுவதும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கணவர் கருத்தடை மாத்திரையை உட்கொண்டால் மனைவி எந்தவித கருத்தடைச் சாதனமோ, மாத்திரையோ பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ★








# தமக்குள் மோதிக்கொள்ளும் தமிழகக் கூட்டணிக் கட்சிகள்

எஸ். சுரேந்திரஜித்

தமிழக சட்டசபைத் தேர்தல் இறுதி நிலைவரப்படி கடுமையான பேரம் பேசல்களின் பின் இரு பிரதான அணிகளும் உருப்பெற்றுள்ளன. எத்தனை தொகுதிகள் யாருக்கு என்பது முதற்கட்ட இழுபறியாகி, அது தீர்க்கப்பட்ட பின்னர் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எவை, யாருக்கு என்ற சிக்கல் இரண்டாம் கட்டமாக ஏற்பட்டு ஒருவழியாக அதுவும் முடிவுக்கு வந்துள்ளது. ஆனாலும் ஆங்காங்கு தொகுதிப் பங்கீட்டில் மனஸ்தாபங்கள் இல்லாமலில்லை. தி.மு.க அணியில் திருத்தணித் தொகுதியை காங்கிரசுக்குத் தாரைவார்த்து விட்டதாக தி.மு.கவினர் குமுறுகின்றனர். காங்கிரஸ் கேட்ட காட்டுமன்னார் கோயில் அவர்களது பரம எதிரிகளான விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஒதுக்கப்பட்டமை காங்கிரசுக்கு அதிருப்தியான விடயமாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் தி.மு.க வசமிருந்த ராதாபுரம் தொகுதி காங்கிரசுக்கு ஒதுக்கப்பட்டமை தி.மு.கவின் உள்ளூர் தலைவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஒரே கூட்டணிக்குள் இவ்விதம் குத்துவெட்டுக்கள் தொடர்ந்து நடக்கப் போகிறது என்பதற்கு இவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. தி.மு.க அணியைப் பொறுத்தவரை சில அதிரடி முடிவுகளை தி.மு.க எடுத்துள்ளது.

### சென்னையை விட்டு ஓட்டம் பிடித்த கருணாநிதி

சமீபகாலமாக சென்னை நகரம் தி.மு.க.வுக்கு வாய்ப்பான இடம் என்ற நிலையிலிருந்து மாறிவருகிறது. கடைசியாக கடந்த 2009 லோக சபைத் தேர்தலில் சென்னையின் மூன்று தொகுதிகளையும் தி.மு.க வெல்லும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், தென் சென்னைத் தொகுதி கைநழுவிப் போனது. தென் சென்னைக்கு உட்பட்ட சைதாப்பேட்டை, தியாகராஜநகர் சட்டசபை தொகுதிகளை அதற்கு முன் நடந்த 2006 சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க கைப்பற்றியிருந்தது. இம்முறை தியாகராஜா நகர் தொகுதியைக் காங்கிரசுக்கு விட்டுவிட்டு மீண்டும் சைதாப்பேட்டையில் தி.மு.க. போட்டியிடுகிறது. சென்னைக்குள் தி.மு.க.வினர் பதவி அதிகாரம் கொண்டு கப்பம், கட்டைப் பஞ்சாயத்து, ஆள்கடத்தல் என உச்சக்கட்ட சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் நகர மக்கள் இம்முறை தி.மு.க.வுக்குப் பாடம் புகட்டக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளனர். இந்த விடயம் தி.மு.க தலைமைக்கு எட்டி விட்டது. எனவேதான் துறைமுகம், சேப்பாக்கம் என மாறிமாறி சென்னைக்குள்ளேயே நெடுங்காலமாக தேர்தல் களமிறங்கிய கலைஞர், தனது சொந்த இடமான திருவாரூருக்கு இடம்மாறி விட்டார். பேராசிரியர் அன்பழகனும் வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

ஸ்டாலின்கூட ஆயிரம் விளக்குத் தொகுதியைக் கைவிட்டு கொளத்தூரில் களமிறங்க நேர்ந்துள்ளது. முதலமைச்சரின் தொகுதியாக முன்பிருந்த துறைமுகம் தொகுதியை, தி.மு.க கைவிட்டு விட்டது. ராசாவின் ஸ்பெக்ரம் ஊழல் விவகாரம் சென்னை நகருக்குள் உள்ள படித்த வாக்காளரிடம் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என தி.மு.கவின் தலைமைக்குத் தகவல் எட்டியுள்ளது. இதன் எதிரொலியாகவே தி.மு.க பெருந்தலைகள் சென்னையை விட்டு ஓட்டம் பிடித்துள்ளனர் என அ.தி.மு.கவினர் கேலி செய்கின்றனர். கடந்த 2006 தேர்தலில் சென்னைக்குள் காங்கிரசுக்கு எந்தத் தொகுதியையும் ஒதுக்கித் தராத தி.மு.க, இம்முறை ஐந்து தொகுதிகளை காங்கிரசுக்கு விட்டுக்கொடுத்துள்ளது. இதில் தியாகராஜ நகர், மைலாப்பூர், ராயபுரம் தொகுதிகள் காங்கிரஸ் வெற்றிபெற மிகவும் சிரமப்படவேண்டிய தொகுதிகளாகும். மைலாப்பூரில் பிராமணர்கள் அதிகம் இருப்பதால்தான் தி.மு.க அங்கு கடந்த முறையும் தோல்வி கண்டதாகக் கருதப்படுகிறது. ராயபுரம், அ.தி.மு.க.வின் பிரபலஸ்தர் ஜெயக்குமார் வழக்கமாக வெற்றி பெறும் தொகுதியாகும். எனவே அங்கு காங்கிரஸ் வெல்வதும் சிரமமே.

> சென்னை நகருக்குள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தி.மு.க.வினர் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் நகர மக்கள் இம்முறை தி.மு.க.வுக்குத் தகுந்த பாடம் புகட்டக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளனர்.

இவ்வகையில் பார்த்தால் சென்னையில் அ.தி.மு.க வின் அசுர வளர்ச்சி தி.மு.க.வை ஆட்டம் காண வைத்துவிட்டது என்பது உண்மையே. திருவாரூருக்கு மாறியதன் மூலம் கலைஞர் இரண்டாவது சுற்றிலும் ஜெயலலிதாவிடம் தோற்றுவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

### ஆணவம் அடங்காத ஜெயலலிதா வைகோவை இழந்தார்

இதேவேளை அ.தி.மு.க அணியில் வேண்டாத குழப்பங்களை ஜெயலலிதா உண்டாக்கி பெரும் சலசலப்பை ஏற்படுத்தியபின் தற்போது சமரசமாகியுள்ளார். யாருக்கு எத்தனை தொகுதி என்பது மட்டும் முடிவான நிலையில் எந்தத் தொகுதிகள் என்பது இன்னும் முடிவு செய்யப்படாத நிலையில் திடுதிப்பென்று ஜெயலலிதா 160 தொகுதிகளுக்கு அ.தி.மு.க வேட்பாளர்களை அறிவித்தமை கூட்டணிக் கட்சிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஏற்கனவே தன்னைக் கேட்காது காங்கிரசுடன் கூட்டணி என ஜெயலலிதா அறிவித்ததால் கோபமடைந்திருந்த கம்யூனிஸ்ட்கள், விஜயகாந்த் தலைமையில் மூன்றாவது அணி அமைக்கப் பேச்சுவார்த்தை தொடங்கினர். தனித்து ம.தி.மு.க, அல்லது கம்யூனிஸ்ட்டுகள் அதிருப்தியுற்றால் அதைத் தனித்துக் கையாளலாம் எனக் கனவுகண்ட ஜெயலலிதாவுக்கு விஜயகாந்த், இடதுசாரிகள் சந்திப்பு கிலியை ஏற்படுத்தியது. இதை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர் வெளியிட்ட பட்டியலில் தே.மு.தி.க கேட்ட தொகுதிகளுமே நிறைய இருந்தன. அதுபற்றி எதுவும் பேசாமலேயே தாம் கேட்ட அத் தொகுதிகளுக்கு அ.தி.மு.க வேட்பாளர்களை அறிவித்ததால் விஜயகாந்தும் ஆத்திரம் அடைந்திருந்தார்.

வைகோ வின் ம.தி.மு.க, கடந்த 2006 தேர்தலில் அ.தி.மு.க அணியில் போட்டியிட்ட 35 தொகுதிகளுக்குப் பதிலாக இம்முறை 9 தொகுதிகளே தரமுடியுமென ஜெயலலிதா கூறியதால் வைகோ ஏற்கனவே அதிருப்தியில் இருந்தார். அவரையும் விஜயகாந்த் தலைமையில் மூன்றாவது அணியில் இணையுமாறு இடதுசாரிகள் அழைப்பு விட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது. தனித்தனியாக இடதுசாரிகளோ தே.மு.தி.க வோ, ம.தி.மு.க வோ, அ.தி.மு.க.வுடன் முறுகி இருந்தால் ஜெயலலிதா அதனைச் சமாளித்து இருந்திருப்பார். சகலரும் இணைந்து அ.தி.மு.க வுக்கு மாற்றாக மூன்றாவது அணி அமைக்க முயன்றமை, ஜெயலலிதாவுக்குப் பாதகமாக அமையும் என்பதை ஜெயலலிதாவை விட அவரது ஆஸ்தான குரு 'துக்ளக்' சோ நன்குணர்ந்திருந்தார். எனவே அவரது ஆலோசனைக்கு அமைய ஜெயலலிதா இறங்கி வந்தார். முடிவில் சமரசம் ஏற்பட்டாலும் இடதுசாரிகள் வசமிருந்த இரண்டு தொகுதிகளை ஜெயலலிதா கபளிகரம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவை கடந்த 2006 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. அணியில் போட்டியிட்டு இடதுசாரிகள் பெற்ற தொகுதிகளாகும். அங்கு அ.தி.மு.க பெரும் வாக்கு வித்தியாசத்தில் இடதுசாரிகளிடம் தோற்றது. எனவே இத்தொகுதிகளில் அ.தி.மு.க போட்டியிட்டால் வெற்றி உறுதி என்பதை ஜெயலலிதா அறிவார். அவரது இந்த முடிவு அவரது கூட்டணிக் கட்சிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இப்போதே இப்படி என்றால் முதலமைச்சரானால் என்ன நடக்கும் என்பது இதன் மூலம் புலனாகிறது. 'முதலமைச்சராகி விட்டோம் என்று ஜெயலலிதா தவறாகக் கனவில் நினைத்திருப்பார்', அதுதான் இப்படிக் கூத்து ஆடுகிறார் என தி.மு.க சார்புப் பத்திரிகைகள் நையாண்டி செய்துள்ளன.

மூன்றாவது அணிவந்தால் தி.மு.கவுக்கு மிகப்பெரிய வெற்றி வருமென்பதில் சந்தேகமே இல்லை. தி.மு.க கூட்டணியிலும் காங்கிரசுடன் கலைஞர் கண்ணாமூச்சி ஆடிக் கையைச் சுட்டுக்கொண்டது போலவே, ஜெயலலிதாவும் தனது பங்கைச் செய்துள்ளார். இருபெரும் தலைகளான கலைஞரும் ஜெயலலிதாவும் தேர்தல் காரணமாக பெரும் குழப்பத்தில் உள்ளனர், என்பதை இது சுட்டிக் காட்டுகிறது எனலாம். சிறு கட்சிகளின் எண்ணிக்கை அதகரித்துள்ளதும், காங்கிரஸ், ராகுல் காந்தி மூலம் புதிய அவதாரம் எடுத்திருப்பதும், விஜயகாந்த் முக்கிய சக்தியாக எழுச்சி பெற்றிருப்பதும் கலைஞர், ஜெயலலிதா ஆகிய இருவருக்குமே முடிவெடிப்பதில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளன. ஜெயலலிதாவாவது ஓரளவு உறுதியாக 160 இடங்களைப் பிடித்துக் கொண்டார். பாவம், கலைஞர், தனித்து தி.மு.க ஆளமுடியாது என்பதை இப்போதே ஒப்புக் கொள்வது போல வெறும் 120 தொகுதிகளில் போட்டியிடுகிறார்.

### வைகோவுடனான முரண்பாடு ஜெயலலிதாவுக்கே நஷ்டம்

ஆனால் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு வைகோ அவருடன் அதிருப்தியுற்று தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்ததாகும். தமிழகத்தின் மேற்கிலும் தெற்கிலும் இன்னமும் ஒரு வலுவான சக்தியாகவே வைகோ உள்ளார். சமீபகாலமாக கோவை, ஈரோடு, உள்ளிட்ட மேற்கு மாவட்டங்களில் அ.தி.மு.க அணி பெற்ற தொடர் வெற்றிகளுக்கு வைகோவின் பங்களிப்பு காத்திரமானது. தெற்கில் தேய்ந்து கொண்டே போகும் அ.தி.மு.க, வைகோ கட்சியின் வெளியேற்றத்தால் கிட்டத்தட்ட பூஜ்யமாகவே மாறிவிடக்கூடும். ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் அ.தி.மு.க பூஜ்யமாகவே உள்ளது. ம.தி.மு.க இல்லாவிடில் விருதுநகர், நெல்லை, தென்காசி முதலிய பகுதிகளில் அ.தி.மு.கவுக்கு பெரும் பின்னடைவு ஏற்படக் கூடும். அத்துடன் தி.மு.கவுக்கு எதிராக ஓங்கி ஒலிக்கக் கூடிய விஜயகாந்த், தா.பாண்டியன் முதலிய குரல்களின் வசீகரத்துக்கு வைகோவின் குரல் சற்றும் சளைத்ததல்ல. சமீபகாலமாக அவர் தமிழக மக்களின் பிரச்சனைகளை முன்னிறுத்திப் போராட்டம் நடத்துவது படித்த தமிழகத்தினரின் வரவேற்பைப் பெற்றுள்ளது. முல்லை பெரியாறு பிரச்சினையில் கேரளாவை வைகோ எதிர்த்த விதத்தைப் பாராட்டாத தமிழகத்தவரே இல்லை. வைகோ, 'பிரபாகரனின் ஊதுகுழல்' என்ற நிலையிலிருந்து தமிழக மக்களின் பிரச்சனையை முன்னிறுத்தும் தமிழகத் தலைவராக அண்மைக்காலமாக பரிணமித்து வந்தார். புத்திஜீவித்தனம், நேர்மை, எளிமை, சுயநலமின்மை (மகன் மாருக்காக கட்சி வளர்க்கும் கருணாநிதி, ராமதாஸ் போலன்றி) என்பன ஒருங்கு சேர்ந்த அரசியல்வாதியாக வைகோவைப் பார்க்கத் தமிழக மக்கள் சமீபத்தில் தான் தொடங்கி இருந்தனர். வைகோ தேர்தலைப் புறக்கணிப்பதென எடுத்த முடிவு மூலம் நஷ்டமடையப் போவது ஜெயலலிதாவே. ✱



# ஏப்ரலில் வருகிறது எத்தன்

விமல், சனுஷா ஜோடியாக நடிக்க, களவாணி படத்தை தயாரித்த நசீரின் உருவாக்கத்தில் சுரேஷ் இயக்கியுள்ள 'எத்தன்' படம் ஏப்ரல் மாதம் திரைக்கு வரவிருக்கிறது. களவாணி படத்தை தயாரித்த நசீர் தனது ஷேராலி பிலிம்ஸ் சார்பில் தயாரித்துள்ள படம் எத்தன். களவாணி விமல் - சனுஷா இப்படத்தில் மீண்டும் இணைந்துள்ளனர்.

இது ஒரு குடும்பப் படமாகும் என்கிறார் இயக்குநர் சுரேஷ். பாலு மகேந்திராவிடம் உதவியாளராக இருந்த சுரேஷ், தற்போது இயக்குநராக அறிமுகமாகிறார்.

சொந்தமாக வியாபாரம் செய்ய விரும்பும் இளைஞராக இப்படத்தில் நடித்துள்ளார் விமல். அவருக்கு ஜோடியாக நடித்துள்ள சனுஷாவுக்கு நடிக்க நல்ல வாய்ப்பு கொடுத்திருக்கிறாராம் சுரேஷ்.

படத்திற்கு இசையமைத்துள்ளார் தாஜ் நூர். இவர் வம்சம் படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. படத்தை குடும்பத்தோடு பார்க்கும் வகையில் தரமாகத் தயாரித்திருப்பதாக கூறும் நசீர், இப்படமும் களவாணி போல மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெறும் என்கிறார்.



# பல மொழிகளிலும் கலக்கும் ஜெனிலியா

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் ஜெனிலியா ஓய்வில்லாமல் நடித்து வருகிறார். தமிழில் ஆரம்பித்த இவரது திரையுலக வாழ்க்கை இன்று தமிழையும் தாண்டி, பல மொழிகளில் நடித்துக்கொண்டிருக்கிறார்.


கை நிறையப் படங்களுடன், பல மொழிகளில் ஓய்வில்லாமல் நடித்து வருபவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். சந்தோஷ் சுப்பிரமணியத்திற்குப் பின்னர் ஜெனிலியாவுக்கு தமிழில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட அவர், நல்ல கதையம்சத்துடன் கூடிய, ரசிகர்கள் விரும்பக் கூடிய படங்களைத் தேர்வுசெய்து நடித்து வருகிறார்.

ஜெனிலியா தற்போது இளைய தளபதி விஜய்யுடன் இணைந்து வேலாயுதம் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அதேபோல வினய்யுடன் இணைந்து இன்னொரு தமிழ்ப் படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறார். இதுபோல மலையாளத்தில் உருவாகியுள்ள உருமி படத்திலும் நடித்துள்ளார். இதைவிட தெலுங்கிலும், ஹிந்தியிலும் தலா ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறாராம்.



# அனுஷ்காவின் யோகா யோகம்

யோகா சொல்லிக்கொடுக்கத்தான் வந்தேன். ஆனால் என்னிடம் யோகா கற்றுக்கொள்வதற்காக வந்த ஒரு இயக்குநர் என்னை நடிகையாக்கி விட்டார், என்றார் நடிகை அனுஷ்கா. 'இரண்டு' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் அனுஷ்கா. விஜய்யுடன் வேட்டைக்காரன் படத்தில் நடித்தார். இப்போது ரஜினிக்கு ஜோடி, கமலுக்கு ஜோடி என்றெல்லாம் பேசும் அளவுக்கு முன்னணி நடிகையாகிவிட்டார். நடிகையான அனுபவம் குறித்து அவர் கூறுகையில், நான் ஒரு யோகா ஆசிரியை. யோகாவின் மகிமை தெரியாதவர்களுக்கு யோகா கற்று கொடுக்க வேண்டும் என்பதற்காக யோகா வகுப்புக்களை நடத்தினேன். அப்போது எனது யோகா வகுப்புக்கு தெலுங்கு இயக்குநர் ஒருவர் யோகா கற்றுக்கொள்வதற்காக வந்தார். அவர்தான் என்னை நடிகையாக்கி விட்டார். யோகா மூலம் கிடைத்த யோகம் தான் இந்த சினிமா வாழ்க்கை. நடிகை பூமிகாவின் கணவராகிவிட்ட பரத் தாகூர் தான் எனக்கு யோகா கற்றுக்கொடுத்த குரு - என்றார்.



# தமன்னாவின் நாய்க்குட்டி ஆசை

தமன்னாவின் மனதில் ஒரு பெரும் ஏக்கம் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளதாம். அது செல்லமாக ஒரு நாய்க்குட்டியை வளர்க்க வேண்டும் என்பது. நாய் வளர்ப்பது என்பது திரையுலகில் சகஜமாக நடந்து வரும் ஒன்று. குறிப்பாக நடிகைகளுக்கு உற்ற துணைவனாக நாய்தான் இருந்து வருகிறது. ஒரே வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட நாய்களை வளர்க்கும் நடிகைகளும் இருக்கிறார்கள்.

அந்த வகையில் தமன்னாவுக்கும் ஒரு செல்லமான நாயை வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறதாம். ஆனால் அதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டதாம்.

கை நிறையப் படங்கள் இருப்பதால், தமிழிலும், தெலுங்கிலும் தொடர்ச்சியாக நடித்துக் கொண்டிருப்பதால் சென்னைக்கும், ஹைதராபாத்துக்கும் பிற இடங்களுக்குமாகப் பறந்துகொண்டிருக்கிறார் தமன்னா. இதனால் வீட்டில் ஓய்வாக இருக்க நேரமே கிடைக்கவில்லையாம்.

போகும் இடமெல்லாம் நாயைக் கூட்டிக்கொண்டு போக முடியாது என்பதால் நாயை வளர்க்கும் பாக்கியம் இதுவரை அவருக்குக் கிட்டவில்லையாம். இதுதான் அவருக்குப் பெரும் ஏக்கமாகவுள்ளதாம்.




# முத்துக்கு முத்தாக

திரை விமர்சனம்

பெற்றோரைப் பொக்கிஷமாக நினைத்து நல்லபடியாகப் பார்த்துகொள்ள வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் படம் முத்துக்கு முத்தாக. இந்தப் படம் முழுவதும் ஒரே நட்சத்திரப் பட்டாளம், சோகத்தையும், பாசத்தையும் பிழியும் கதாபாத்திரங்கள் என இயக்குநர் ராசுமதுரவனின் வழமையான குடும்பப் படம் என்றாலும், சொல்ல வந்ததைப் பளிச்சென்று சொல்லி, சொல்ல வந்த கருத்தை ரசிகர்களின் மனதில் ஆழமாகப் பதியவைத்ததற்காக முத்துக்கு முத்தாக நல்லமுறையில் எடுக்கப்பட்டிருக்கிறது.

ஐந்து ஆண் பிள்ளைகளைப் பெற்று, அவர்களை வளர்த்து அவர்களின் திருமணத்திற்குப் பின்னர், மருமகள் என்ற புது உறவால் உதாசினப்படுத்தப்பட்டு தனிமையில் வாடும் பெற்றொரின் சோகமான கதைதான் படத்தின் மையக்கரு.

திருமணமான புதுப்பெண்களுக்கு கணவனை எப்படி முந்தானையில் முடியவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கும் அம்மாக்கள் ஒரு பக்கம், தன் மாமியாருக்கு இருக்கும் காசநோய் தன் பிள்ளைக்கு ஒட்டிக்கொள்ளும் என்று நினைத்து குழந்தையைப் பாட்டியிடம் இருந்து பிரிக்கும் மருமகள், கடைசிக் காலத்தில் பிள்ளையின் வீட்டில் சில நாட்கள் தங்கலாம் என்று நினைக்கும் பெற்றோரைத் துரத்தும் மருமகள் எனச் சமூகத்தில் நடக்கும் சம்பவங்களையே காட்சிகளாக்கிக் கண் கலங்க வைத்திருக்கிறார் இயக்குநர்.

இப்படத்தில் நாயகன், நாயகி என்றால் அது சரண்யா பொன்னவன்னன், இளவரசு ஆகியோர்தான். சரண்யாவை இதுபோன்ற அம்மா வேடத்தில் பல படங்களில் பார்த்திருந்தாலும், அவ்வப்போது ஒரு புதிய அம்மாவை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறார் இயக்குநர் ராசுமதுரவன்.

ஐந்து பிள்ளைகளுக்கு அப்பாவாக நடித்திருக்கும் இளவரசுவின் நடிப்புக்கு சபாஷ் சொல்லியாக வேண்டும். அதுவும் இறுதிகாட்சியில் விஷம் கலந்த உணவை உண்ணும் இளவரசுவின் நடிப்புக்கு நூறுக்கு நூறு புள்ளிகளைக் கொடுக்கலாம்.

நட்ராஜ், விக்ராந்த், ஹரீஸ், ஓவியா, மோனிகா உள்ளிட்ட படத்தில் நடித்திருக்கும் அத்தனை நடிகர்களும் யதார்த்தமாக நடித்திருக்கிறார்கள். சிங்கம் புலியின் நகைச்சுவை அவ்வப்போது ரசிகர்களை இளைப்பாறச் செய்கிறது. படத்திற்கு ஏற்ற ஒளிப்பதிவைக் கொடுத்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் யு.கே.செந்தில்குமார். கவி பெரியதம்பியின் இசையில் பாடல்கள் புரியும் விதத்தில் அமைந்திருக்கிறது. மூன்று சண்டைக்காட்சி, ஐந்து பாடல்கள் என்ற பொதுவான படங்களுக்கிடையே, இதுபோன்ற வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படங்கள் வெற்றி பெற்றால் தமிழ் சினிமா வெற்றிபெறும். படத்தின் தலைப்பைப் போலவே முத்துக்கு முத்தான படத்தை கொடுத்திருக்கும் இயக்குநர் ராசுமதுரவன் முத்தான வெற்றியை பெற வேண்டும் என்று வாழ்த்துவோம்.

# அதுக்கு 'நோ' சொன்னார் தீபிகா

பொலிவூட்டில் நடிகர், நடிகைகள் புகைபிடிக்கும் காட்சிகளில் நடிப்பது புதிதல்ல. இதுபோன்ற காட்சிகளுக்கு எதிர்ப்புகள் கிளம்பியும் படத்தில் கொடுக்கப்படும் வேடத்திற்கு அது கட்டாயமாக இருக்கிறது என்பதே இயக்குநர்களின் கருத்து. அண்மையில் 'பேஷன்' என்ற படத்தில் கணக்கே இல்லாமல் சிகரெட்டுகளை ஊதித் தள்ளிய ப்ரியங்கா சோப்ரா அப்படத்துக்காகச் சிறந்த நடிகைக்கான தேசிய விருதைப் பெற்றார்.

தற்போது நடிகை தீபிகா படுகோ்னே 'தும் மர தும்' என்ற படத்தில் நடிக்கிறார்.

இப்படத்தில் ஒரு பாடல் காட்சியில் புகை பிடித்தப்படி நடிக்க வேண்டும் என வற்புறுத்தினர் இயக்குநர். ஆனால் அவர் மறுத்துவிட்டார். இது பற்றி அவர் கூறும்போது புகைபிடிப்பது போல் நடிக்க விருப்பம் இல்லை. அது மாதிரியான காட்சிகளில் நடிக்க மாட்டேன் - என்றார்.



# மூன்றாவது தடவையாக பெயர் மாறிய விக்கரமின் படம்

விக்ரம் நடிப்பில், இயக்குநர் விஜய்யின் கைவண்ணத்தில் உருவாகி வரும் படத்துக்கு மூன்றாவது முறையாக பெயர் மாற்றப்பட்டுள்ளது. அனுஷ்கா, அமலா பால் நாயகிகளாக நடிக்கும் இந்தப் படத்துக்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் பிதா. இந்தப் பெயர் வேண்டாம் என்று பின்னர் முடிவுசெய்து, தெய்வமகன் என்று தலைப்பிட்டனர். ஆனால் இந்தப் பெயரில் படமெடுக்க சிவாஜி பிலிம்ஸ் முடிவுசெய்திருப்பதாக பின்னர் தெரியவந்துள்ளது. அந்தத் தலைப்பின் உரிமையும் சிவாஜி பிலிம்ஸ் வசமே இருப்பதால், வேறு பெயர் சூட்ட யோசித்து வந்தனர். இப்போது, தெய்வத் திருமகன் என்ற பெயரைத் தேர்வுசெய்து, முடிவாக அறிவித்துள்ளனர். ராஜகாளியம்மன் மீடியாஸ் சார்பில் மோகன் நடராஜன் தயாரிக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவுக்கட்டத்தை எட்டியுள்ளது. விக்ரம் நடித்த படங்களில் முதல்முறையாக நான்கே மாதங்களில் இந்தப் படத்தின் படப்பிடிப்பை நிறைவுசெய்து, விக்ரமுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளார் இயக்குநர் விஜய்.



# ஒரு கல் ஒரு கண்ணாடி படப்பிடிப்பின் முதல் காட்சியிலேயே அசத்தினார் உதயநிதி


ஒரு கல் ஒரு கண்ணாடி (அதாவது ஓகே ஓகே) படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. பாஸ் என்கிற பாஸ்கரன் படம் மூலம் முன்னணி இயக்குநர் என்ற அந்தஸ்தை எட்டிப்பிடித்துவிட்ட ராஜேஷ் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தில் நாயகனாக அறிமுகமாகிறார் உதயநிதி ஸ்டாலின். அவருக்கு இணையான வேடத்தில் சந்தானம் நடிக்கிறார்.

இதுவரை இந்தப் படத்துக்காகத் தன்னைப் பிரமாதமாகத் தயார்ப்படுத்தி வந்த உதயநிதி, படப்பிடிப்பின் ஆரம்பத்திலேயே ஹீரோயின் ஹன்சிகா மோத்வானியுடன் காதல் காட்சிகளில் கலக்கியுள்ளார்.

இந்தப் படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது. மாதவப் பெருமாள் கோயிலில் நடந்த முதல் காட்சியில் நடித்தது உதயநிதியும் சந்தானமும். அடுத்தது, ஹன்ஸிகாவுடனான காதல் காட்சிகள்.

எடுத்த எடுப்பிலேயே இயக்குநர் ராஜேஷ் மற்றும் ஹீரோயின் ஹன்ஸிகாவை அசத்திவிட்டாராம் உதயநிதி, தனது இயல்பான நடிப்பால். "அவர் நடித்ததைப் பார்த்தால் யாரும் முதலாவது படக் ஹீரோ என்று நிச்சயம் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நகைச்சுவையில் சந்தானத்தையே மிரள வைக்கிறார்" - என்று புகழ்ந்து தள்ளுகிறார்கள் உதயநிதியை.




அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனசையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். சுக்ரன் லாப வீட்டில் நிற்பதால் பணவரவு அதிகரிக்கும். கௌரவப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பூர்வீக சொத்தை மாற்றியமைப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உறவினர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்பார். செலவு, முன்கோபம் வந்து செல்லும். சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறும் வாரமிது.




கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் வாதாடும் நீங்கள், நியாயத்திற்கு கட்டுப்படுவீர்கள். சூரியன் வலுவாக இருப்பதால் நீண்ட கால ஆசைகள் நிறைவேறும். மேல்மட்ட அரசியல்வாதிகள் உதவுவார்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். மகனுக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். உறவினர்கள், நண்பர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். இரத்த சொந்தங்கள் வலிய வந்து பேசுவார்கள். தாய்மாமன் வகையில் மதிப்பு, மரியாதைக் கூடும். சனியால் அசதி, சோர்வு வந்து நீங்கும். ராகுவும், கேதுவும் சரியில்லாததால் சிறுசிறு நெருப்பு காயங்கள், விபத்துகள், பேச்சால் பிரச்னைகள் வரக்கூடும்.




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

யார் மனதும் நோகாதபடி நடந்துக் கொள்ளும் நீங்கள் எதிர்த்துப் பேசுபவர்களை கூட ஒதுக்கித் தள்ள மாட்டீர்கள். ராசிநாதன் புதனும், சூரியனும் சாதகமாக இருப்பதால் பிரச்னைகளை சமாளிக்கும் சக்தி அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வரும். புது பதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். மனைவிவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும்.




புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

மல்லிகைப்பூ மனசும், மண்வாசனை மாறாத பேச்சும் கொண்ட நீங்கள் எதார்த்தவாதிகள். குரு வலுவாக இருப்பதால் எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். குடும்பத்தில் நல்லது நடக்கும். ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். பணப்பற்றாக் குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வெளியூர் பயணங்கள் சிறப்பாக அமையும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக்கொள்வார்கள். வெளிநாட்டில் இருப்பவர்களால் அனுகூலம் உண்டு. சகோதர வகையில் இருந்த மனக்கசப்பு நீங்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்பட்டாலும் சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள்.




மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

சொல் ஒன்று செயல் வேறு என்றில்லாமல் சொன்னதை முடித்துக் காட்டும் சத்திய சீலர்கள் நீங்கள் தான். சுக்ரன் சாதகமாக இருப்பதால் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வீடு, வாகன வசதிப் பெருகும்-. நட்பு வட்டம் விரியும். பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

மனிதநேயம் அதிகமுடைய நீங்கள் மன்னிக்கும் குணமுள்ளவர்கள். பூர்வீக சொத்து கைக்கு வரும். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்துப் உறவாடுவார்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். மனைவியின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். தாயாரின் உடல் நலம் சீராகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வரும். அரசு காரியங்கள் தடைப்பட்டு முடியும். குடும்பத்தில் சந்தோஷம் நிம்மதி வந்துபோகும்.




சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

தாராளமாக தர்மம் செய்யும் நீங்கள், பழைய கலைப்பொருட்களை பாதுகாப்பவர்கள். ராகு வலுவாக இருப்பதால் தைரியம் பிறக்கும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். வேற்றுமொழியனரால் உதவிகள் உண்டு. பணப்பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். சகோதர வகையில் இருந்த பிரச்னைகள் நீங்கும். தள்ளிப் போன வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். ஏழரைச் சனி தொடர்வதால் யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம்.





விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

உள்மனது சொல்வதை மட்டும் செய்யும் நீங்கள், தகுதியற்றவர்களை புகழமாட்டீர்கள். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். உங்கள் ரசனைக் கேற்ப சொத்து வாங்குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. உடன்பிறந்தவர்கள் உங்களின் பெருந்தன்மையை புரிந்துக் கொள்வார்கள். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். அரசால் அனுகூலமுண்டு. மனோபலத்தால் நினைத்ததை முடிக்கும் வாரமிது.




மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

சரிநிகர் சமத்துவத்திற்காக போராடும் நீங்கள், ஆண்டவன் படைப்பில் அடிமை யாருமில்லை என்று நினைப்பீர்கள். புதன் சாதகமாக இருப்பதால் சவாலான விஷயங்களை சாமர்த்தியமாகப் பேசி முடிப்பீர்கள். எதிர்பார்த்த வகையில் பணவரவு உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங் குவீர்கள். உறவினர்கள் தங்கள் தவறை உணர்வார்கள். எதிர்பார்த்த அயல்நாட்டுப் பயணம் தேடி வரும். உத்தியோகத்தில் பதவி உயரும். சம்பளம் கூடும். பிள்ளைகளின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரமிது.




உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

நகைச்சுவையாகவும், நாசுக்காகவும் பேசும் நீங்கள், நல்லது செய்தே நலிந்தவர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகளின் பெருமைகளை சொல்லி சொந்தம் பந்தங்கள் மத்தியில் திருப்தியடைவீர்கள். மகளுக்கு நல்ல வேலை கிடைக்கும். உறவினர்கள் உங்கள் நிலையறிந்து உதவி செய்வார்கள். சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும். வீட்டில் சந்தோஷம், நிம்மதி நிலவும். நினைத்த காரியம் நடக்கும். தோல்வியிலிருந்து விடுபடும் வாரமிது.




அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்


குடும்ப நலனுக்காக ஓடி ஓடி உழைக்கும் நீங்கள், தன்னலம் இல்லாத தியாகியைப் போல் வாழ்பவர்கள். புதனும், குருவும் சாதகமாக இருப்பதால் எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். எதிர்பார்த்த பணம் வரும். தடைப்பட்ட கல்யாணப் பேச்சுவார்த்தை வெற்றியடையும். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். சின்ன இடமாவது வாங்க வேண்டுமென நினைப்பீர்கள். எதிரும், புதிருமாக பேசிக் கொண்டிருந்த உறவினர்கள் தங்கள் தவறை உணர்வார்கள்.




பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

திடமாகவும், தீர்க்கமாகவும் யோசிக்கும் நீங்கள், முன் வைத்த காலை பின் வைக்க மாட்டீர்கள். சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல் கள் வந்து நீங்கும். வீடு, மனை வாங்குவது, விற்பதில் அவசரம் வேண்டாம். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகரிக்கும்.

# உணவுப் பழக்கம் ராசியைப் பொறுத்தே அமையும்



நாகரீகமான, படித்த மனிதர்கள் மத்தியிலும் உணவுக் கட்டுப்பாடு தொடர்பான விடயத்தில் தயக்கம் இருக்கிறது. எவ்வளவு சாப்பிடுவது என்பது முதல் எதைச் சாப்பிடுவது என்பது வரை இளைஞர்கள் மத்தியில் கூட குழப்பம் காணப்படுகிறது.

பண்டிகை தினங்களில் வீட்டில் தயாரிக்கப்படும் இனிப்பு வகைகளை அதிகளவில் சாப்பிடுவதற்கும் சிலர் தயக்கம் [சர்க்கரை நோய் இல்லாதவர்கள் கூட] காட்டுகின்றனர். இதற்கும் அவர்களின் ஜாதக அமைப்பிற்கும் தொடர்பு உள்ளதா என்று பார்ப்போம்.

ஜோதிடத்தில் கூறப்பட்டுள்ள 12 ராசிகளில், மேஷம், ரிஷப ராசிக்காரர்கள் அசை போடுவதில் அதிக ஆர்வம் காட்டுவார்கள். இந்த ராசிக்காரர்களுக்கு இயல்பாகவே இரைப்பை வலுவானதாக இருக்கும். செரிமானத்துக்கு உதவும் நீர் சுரப்பிகளும் அதிகமாகச் சுரப்பதால் இவர்கள் நொறுக்குத் தீனி சாப்பிடுவதில் விருப்பமாக இருப்பார்கள்.

இதேபோல் மகரம், கும்பம் ஆகிய ராசிக்காரர்கள் உணவுப் பிரியர்களாக இருப்பார்கள். ருசியாக சாப்பிடுவதை இவர்கள் விரும்புவர். மேஷம், ரிஷப ராசிக்காரர்கள் ஆவியில் வேக வைக்கும் உணவு வகைகளில் கவனம் செலுத்துவார்கள். ஆனால் மகரம், கும்ப ராசிக்காரர்கள் எண்ணெயில் பொரித்த உணவுகளை விரும்புவர்.

கடகம், மீனம் ஆகிய ராசிகளைச் சேர்ந்தவர்கள் தயிர், மோர் மற்றும் அவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகளை விரும்பிச் சாப்பிடுவர்.

மிதுனம், கன்னி ராசிக்காரர்கள் அதிகம் சாப்பிடுவதை விரும்ப மாட்டார்கள். பசி நேரத்தில்கூட வயிற்றுக்கும், உடல் நலத்திற்கும் ஏற்ற உணவு வகைகளை மட்டுமே சாப்பிடுவர். எனினும், மிதுனத்தில் திருவாதிரை நட்சத்திரக்காரர்கள் மட்டும் உணவுப் பிரியர்களாக இருப்பர்.


புதனின் ராசிகளாக மிதுனமும், கன்னியும் வருவதால் அவர்கள் பார்த்துப் பார்த்துத்தான் சாப்பிடுபவர்களாக இருப்பர். குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின்னரே அடுத்த வேளை சாப்பாட்டை எடுத்துக் கொள்வர்.

எனவே, ஜோதிட ரீதியாகப் பார்க்கும்போது ஒருவரின் உணவுப் பழக்கமும், சுவை விருப்பமும் அவரது ராசியைப் பொறுத்தே அமையும். மேலும், உடல்வாகு, குடல் வாகு ஆகியவை லக்னாதிபதி, ராசிநாதன் ஆகியோரைப் பொறுத்து மாறுபடும்.

மேஷம், ரிஷபம், மகரம், கும்பம் ஆகிய ராசிகளைச் சேர்ந்தவர்கள் காரம் நிறைந்த உணவுகளை விரும்புவர். துலாம் ராசிக்காரர்கள் சூடாகச் சாப்பிடுவார்கள். கடக ராசியில் பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அதிக சூட்டுடன் சாப்பிடுவர். மிதுனராசியில் பிறந்தவர்கள் மிதமான சூட்டில் உணவு உட்கொள்வர். மீனம், தனுசு ராசிக்காரர்கள் முற்றிலும் சூடு இல்லாத ஜில்லென்ற நிலையில் உள்ள உணவுகளை விரும்புவர்.



## சொற்சிலம்பம் - போட்டி இல: 462



அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### மேலிருந்து கீழ்

01.இடம்/ தலைவன்
02.இலக்குமி
03.மடல்
04.ஆசிரியர் பணி கற்பித்தல், மாணவர் கடமை இது.
05.இது கொண்டு புலி விரட்டினாளாமே புறநானூற்றுப் பெண்
06.குத்து விழுவது இப்படி.
08.நான்கு பத்து.
10.உள்ளூராட்சி அமைப்பு ஒன்று.
12.நெருப்பில்லாமல் இதுவராது. அதிலும் இது கன்னங்கரேல் என இருக்கும்.
14.இராமன் மறைந்திருந்து அம்பெய்து கொன்றது இவனை.
15.பிறந்த சந்ததி.
16.(பிரதம) விருந்தினன்.
17.தரு
19.புதிய.

### இடமிருந்து வலம்

01. பத்துப்பாடல் கொண்ட திரட்டு.
04.பாக்குத் தரும் தரு.
07.களவு செய்யும் மங்கை.
08.மணம்
09.சமயப் பிரசாரகர் பலர் முயல்வது இதற்கு.
10.விரலின் நுனியில் உள்ளது.
11.இது போனால் சொல்லுப் போகும்.
13.போதை தரும் பானம்.
14.விவாதம்
15.சிஷ்யனுக்கு வழிகாட்டி.
16.ஆணுமல்ல, பெண்ணுமல்ல.
17.உணவின் கழிவு.
18.வீதிகள் சந்திக்கும் இடம்.
19.உணர்வுகளைக் கடத்துவது
20.சடப்பொருளின் வடிவங்களுள் ஒன்று.

## சொற்சிலம்பம் போட்டி இல. 462

*சொற்சிலம்பம் 462 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன ஏப்ரல் 17 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*
**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சொற்சிலம்பம் போட்டி இல.459 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.சேவல் 02.துரை 03.சதகம் 04.முல்லை 05.திராணி 06.ரசி 10.வாரம் 11.அகம்பாவம் 12.ஓணான் 13.சய 14.அவமதி 15.அம்மா 16.புகை 18.மசகு 20.திதி 21.நட

### இடமிருந்து வலம்

01.சேது சமுத்திரம் 07.வரைதல் 08.ராசி 09.கலைவாணி 12.ஓம் 13.சக 14.அணா 15.அம்புயம் 17.வன்மம் 19.சமாதி 21.நவ 22.திக்கு 23.திட்டம்

## போட்டி இல. 459 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **ச.வாமதேவன்,** 49/38F கோவில் வீதி, 1 ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியா.

**2 ஆம் பரிசு** — **அ.அரசரெத்தினம்,** சேனையூர், மூதூர்.

**3 ஆம் பரிசு** — **வி.தமயந்தி,** விக்னேஸ்வர வாசா, கன்பொல்லை வீதி, கரவெட்டி.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) ர. மதுசனா,**
அம்பன், குடத்தனை.
**(2) ராஜினி. புண்ணியமூர்த்தி,**
இல:36, புகையிரத வீதி, மட்டக்களப்பு.
**(3) ஞா.செந்தமிழ் செல்வன்,**
குப்பிளான் தெற்கு, ஏழாலை.
**(4) சி.தாரணி,**
இல.27, 5/3, உருத்திரா மாவத்தை, கொழும்பு- 06.
**(5) திருமதி.செபாமணி அல்பிறெட்,**
நவாலி தெற்கு, மானிப்பாய்.
**(6) திருமதி.தி.சிதம்பரநாதன்,**
டச்வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
**(7) இராசமூர்த்தி ஹேமகிரி,**
இல:44, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
**(8) சிவகுமார். விநோகா,**
புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை.
**(9) சி.எழில்வேள்,**
'வசந்த பவனம்' மருதடி மேற்கு, சாவகச்சேரி.
**(10) திருமதி. ரஞ்சினி சிவஞானம்,**
43/1 புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.




**எஸ்.யேசுதாசன்,**
**வட்டக்கச்சி.**

கேள்வி: பித்தரே, காதல் கடலில் மூழ்கிய அனுபவம் தங்களுக்கு உண்டா? உண்டானால், அதில் முத்து எடுத்தீர்களா? கரை தெரிந்ததா?

பதில்: கடல் என்று நம்பிக் குதித்தேன். பிறகு தான் தெரிந்தது அது சாக்கடை என்று, சகதியில் முத்துத் தேடியதால் பித்தனாகி நிற்கிறேன்.

**வே.இளங்கோ,**
**மட்டக்களப்பு.**

கேள்வி: நமது நாட்டுப் பெண்களுக்கும், வெளிநாட்டுப் பெண்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன பித்தரே?

பதில்: 'இடை'யில் வேறுபாடு இருப்பதாக என்னால் சொல்ல முடியவில்லை.

**எஸ்.அருந்தவநாதன்,**
**கொழும்பு.**

கேள்வி: இரண்டு முதலாளிமாருக்குக் கீழ் வேலை செய்வது சிரமமல்லவா பித்தரே?

பதில்: எனது நண்பரொருவர் இரண்டு பெண்டாட்டிக்காரர், இன்றைக்கும் சமாளித்துச் சந்தோஷமாகத்தான் வாழ்கிறார். எதற்கும் சமாளிக்கத் தெரிந்து கொண்டால் எதுவுமே சிரமமில்லை.

**வே.வேதநாயகம்,**
**மன்னார்.**

கேள்வி: பித்தரே? சில அரச அலுவலகங்களில் பெரிய அதிகாரிகளை விட அவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் அதிக அதிகாரம் பண்ணுகிறார்களே?

பதில்: வாசலில் கட்டுண்டு நிற்பவர் வருபவர்கள் மீது பாய்வது இயல்பு தானே?

**வ.விரசிங்கம்,**
**பருத்தித்துறை.**

கேள்வி: சனத்தொகைப் பெருக்கத்துக்கு மூல காரணம் ஆண்களா? பெண்களா?

பதில்: என்ன ஒன்றுமே புரியாதவர் மாதிரிக் கயிறு விடுகிறீர். ஒரு பெண்ணால் ஒரு வருடத்தில் ஒன்று; மிஞ்சிப் போனால் இரண்டு குழந்தைகளைத் தானே பெற்றெடுக்கமுடியும்.

**ப.பிரவீனா,**
**தொல்புரம், சுழிபுரம்.**

கேள்வி: உங்கள் மனைவியை எப்போதாவது நீங்கள் ஏசித்திட்டித் தீர்த்தது உண்டா?

பதில்: உண்டு; பல தடவைகள்; மனதுக்குள் மட்டுமே.

**க.பூரணி,**
**சண்டிலிப்பாய்.**

கேள்வி: எனது கணவர் அடிக்கடி கைத்தொலைபேசியில் 'மிஸ்கோல்' விடுகிறாரே?

பதில்: யாரோ 'மிஸ்' ஒருத்தியோடு மினைக்கெடுகிறார் என்றொரு கதை என் காதில் எத்துப்பட்டது. மிகக் கவனம்.

**ச.துளசி, இணுவில்.**

கேள்வி: பித்தரே, தவறைச் சுட்டிக் காட்டுவது பிழையா?

பதில்: சுட்டிக் காட்டுவது பிழையல்ல. குட்டிக் காட்டக் கூடாது.

**கு.வ.பாரதிதாசன்,**
**அட்டாளைச்சேனை.**

கேள்வி: பித்தரே, உம்மிடம் பென்னாம் பெரிய அணுகுண்டொன்று இருப்பதாகக் கேள்விப்பட்டேன். உண்மையா?

பதில்: இந்த நக்கல் தானே வேண்டாம் என்கின்றேன். என் மனைவியின் காதில் போட்டுவிட்டால் நீர் தொலைந்தீர்.

**க.அருளானந்தம், அரியாலை.**

கேள்வி: காதலித்துக் கைப்பிடிப்பது பற்றி என்ன சொல்கிறீர்?

பதில்: கொள்ளும் வரை கொண்டாட்டம்; கொண்டபின் திண்டாட்டம்.

**எஸ்.அருளானந்தம்,**
**முல்லைத்தீவு.**

கேள்வி: உங்களது தோற்றம் இவ்வளவு அவலட்சணமாக இருந்தும், உங்களை விரும்பி ஏற்றுக் கொண்ட அந்தப் பேதைப்பெண்ணுக்காக அனுதாபப் படுகிறேன் பித்தரே!

பதில்: வெளித் தோற்றத்தில் தான் எல்லாம் அடங்கியிருக்கிறது என நீர் நினைக்கலாம். இன்னும் எத்தனையோ விஷயங்கள் 'டீப்'பாக உண்டு. அது போக, எனது மனைவியைப் பேதைப்பெண் என்று கணிக்கும் அளவுக்கு நீர் போதையில் இருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது.



## இந்த வார ஜோக்.

குடிசன மதிப்பு எடுக்க ஒரு வீட்டுக்குச் சென்ற அதிகாரி, அவ்வீட்டுப் பெண்மணியிடம் கேட்டார்,

உங்கள் கணவர் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டதாகக் கூறுனீர்கள், ஆனால் உங்கள் மகனுக்கு மூன்று வயதுதான் ஆகிறது என்கிறீர்களே? எனக்கு ஒன்றுமாக விளங்கவில்லை?

அப் பெண்மணி சாவதானமாகப் பதில் சொன்னாள்.

"அதுதான் நான் உயிருடன் இருக்கிறேனல்லவா?



# சிறுவர் சுடர்

தொகுப்பு - எஸ்.ஜெயா






## மணிக்கூடு

வட்டமான முகத்தில் நேரம்
காட்டும் மணியண்ணா
கிட்டவந்து தொட்டுப் பார்த்தால்
என்ன சொல்லுவீர்
சுவரில் ஏறித்தொங்கிக் கொண்டு
மணியைக் காட்டுகிறீர்
சுழலும் கைகள் மூன்றினையே
உமக்குத் தந்ததார்
டிக்டிக் டிக்டிக் டிக்டிக் டிக்டிக்
சப்தம் செய்கிறீர்
மணியடித்து நேரம் தன்னை
எமக்குச் சொல்கிறீர்

கோப்பாய் சிவம்.





## பேராசை

ஒரு விவசாயி மரண நேரத்தில் தன் நண்பனை அழைத்து, தன்னிடமிருந்த பத்தாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தான். அதனைத் 'எனது மகன் பெரியவனானதும் உனக்கு விருப்பமானதை அவனிடம் கொடு' என்று சொல்லி இறந்துபோனான்.

விவசாயியின் மகன் பெரியவனானதும், தந்தையின் நண்பனிடம் கொடுத்த பணத்தை தரும்படி கேட்டான். அதற்கு அவன் எனக்கு விருப்பமானதை கொடுக்கும்படி உனது அப்பா கூறி இறந்துபோனார். ஆகையால் எனக்கு விருப்பமானது, ஆயிரம் ரூபா மாத்திரமே என்று கூறி அத்தொகையை விவசாயியின் மகனிடம் கொடுத்தான். அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

விவசாயியின் மகன் அக்கிராமத்துப் பெரியவர் ஒருவரிடம் சென்று முறையிட்டான். பெரியவர் இருவரையும் விசாரித்து நன்கு சிந்தித்த பின், உனக்கு விருப்பமானது ஒன்பதாயிரம் ரூபா. நீ கொடுக்க விரும்புவது ஆயிரம் ரூபா. ஆகையால் நீ எடுத்துக்கொள்ள விரும்புவதே உனக்கு விருப்பமானது. எனவே உனக்கு விரும்பமான ஒன்பதாயிரம் ரூபாவையும் விவசாயியின் மகனிடம் கொடு என்று தீர்ப்பு வழங்கினான். விவசாயியின் நண்பன் ஏமாற்றமடைந்தான்.

ஜே.பத்மினி

## குருவிக் குஞ்சு




## குறும்புக்காரன் குட்டீஸ்



# மரணத்தின் விளிம்பு வரை சென்று மீண்டேன்

**மனிதநேயப் பணிபுரியும் சர்வதேச நிறுவனமொன்றில் பணியாற்றிய மேரி குயின் என்ற பெண் அதிகாரியும் அவருடன் சென்ற சுற்றுலாப் பயணிகளும் யேமன் நாட்டில் வைத்துத் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளால் பிடிக்கப்படுகின்றனர்.**

**ஒன்று மட்டும் தெளிவாகப் புலனாகியது. மீட்புப் படையினருக்கும் கடத்தல்காரர் களுக்குமான ஆயுதச் சமரின் இடையில் நாங்கள் பலியாடுகள் போன்ற நிலைக்கு உள்ளாகி விட்டோம் என்பது புரிந்தது.**



2

உண்மைச் சம்பவம்

சற்று வேளையில், கடத்தல்காரர்கள் திரும்பிவந்து எங்களுடைய பைகளை யும் நகைகளையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி கட்டளையிட்டார்கள். சுமார் ஐந்து நிமிடங்களின் பின்னர் அபுகசன் திரும்பி வந்தான். ''இங்கு மேரி என்பது யார்?'' எனச் சந்தேகத் தொனியில் கேட்டான். எனது அமெரிக்க கடவுச் சீட்டு அவனது கையில் தவழ்வதை நான் கண்டு கொண்டு அவன் முன்பாக எழுந்து நின்றேன். நான் நியுசிலாந்தில் பிறந்தேன், எனது குடும்பத்தவர் சகலரும் நியுசீலந்திலேயே வசிக்கின்றனர். ஆனால், நான் அமெரிக்க நிறுவனத்தில் பணி புரிகின்றேன். எனவே நான் பணிபுரிவதற்காக என்னிடம் அமெரிக்க கடவுச் சீட்டு உள்ளது என மனம் தளராமல் கூறினேன். எனது அப்பதிலை மஞ்சள் காற்சட்டை அபூகசனுக்கு மொழிபெயர்த்துக் கூறியது. அவ்விருவரும் சிறிது நேரம் அரபி மொழியில் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். பின்பு அபூகசன் எனது அமெரிக்கக் கடவுச்சீட்டை எனது பையில் திணித்து விட்டுச் சென்றுவிட்டான். நல்ல காலம், நான் மாத்திரமே அங்கிருந்தவர்களுள் உண்மையான அமெரிக்கப் பிரஜை.

கடத்தல்காரர்களினால் அழைத்துச் செல்லப்பட்ட ஆண்கள் யாவரும் எவ்வித தீங்குமின்றித் திரும்பிவந்தார்கள். நாங்களிருந்த குகையை மாலை இருள் கௌவத் தொடங்கியது. எம்மிட மிருந்த இரண்டு படுக்கை விரிப்புக்களுக்குள் எங்களைத் திணித்துக் கொண்டோம். இரவு பனிக்காற்று வீசத் தொடங்கியது. எனது படுக்கை விரிப்பின் ஓர் விளிம்பிலேயே எனக்குத் தூங்க இடம் கிடைத்தது. தூங்குவதற்கு முயற்சி செய்தாலும், அங்கு காணப்பட்ட சிலந்திகள் மற்றும் தேள் வகைகளின் சர்வசாதாரணமான நடமாட்டங்களின் பீதியால் அறவே தூக்கம் வரவில்லை. எழுந்து இருந்தவாறு வானத்தைப் பார்த்து யோசித்தவண்ணம் இருந்தேன். திடீரென கடத்தல்காரர்களின் டோர்ச்லைட்டுகளின் ஒளிக்கற்றைகள் குகையை நிரப்பின. எங்களை எழும்பும்படி கூறினார்கள். எனது கைக்கடிகாரம் இரவு 9 மணி என்பதைக்காட்டியது. எமது காலடிகள் இருட்டில் தடுமாறின. கடத்தல்காரர்கள் சற்று மனம் இளகியவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் ''கவலைப்படாதீர்கள், நீங்கள் நாளைக்கு பிரித்தானியா'' என அவனுக்கே தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் தட்டுத் தடுமாறிக் கூறினான்.

இரவு படுக்கைக்குச் செல்லும் முன் இயற்கைக் கடன் கழிப்பதற்காக அவ் வெளியில் உள்ள ஓர் தனியான இடத்தைத் தேடிச் சென்றேன். அதற்குச் சற்று அப்பால் குளிருக்காக மூட்டப்பட்ட தீயைச் சுற்றிவரத் தரையில் அமர்ந்திருந்த கடத்தல்காரர்கள் என்னைக் கவனிக்கவில்லை. கவனித்திருந்தாலும் என்னைத் தடுப்பதற்கான சைகை எதனையும் காட்டவேயில்லை. இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இங்கிருந்து தப்பிச் சென்றால் என்ன என்று அந்நேரம் என்மனதில் ஓர் எண்ணம் இழையோடியது. ஆனாலும் மனதில் அதற்கான துணிவு பிறக்கவில்லை. ஓர் விடயம் உறுத்தியது. 1994இல் தென் யேமனில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக, அப்போதிருந்து கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. எனவே நிலமை நன்கு சீரடையும் வரையில் காத்திருப்பது எனத் தீர்மானித்தேன்.

நடுஇரவில் மீண்டும், எங்களை இரவு உணவுக்காக எழுப்பினார்கள். ஒரு பிளாஸ்ரிக் பை நிறைய உணவு வந்தது. அதற்குள் பேரீச்சம்பழத்துடன் இறைச்சி எதுவோ காணப்பட்டது. அதில் சிறிது வலியதாகக் காணப்பட்ட இரண்டு இறைச்சித் துண்டுகளை மென்று விட்டு கைநிறையப் பேரீச்சம்பழங்களை அள்ளிச் சாப்பிட்டு ஒருவாறு எனது அன்றைய வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொண்ட பின் படுக்கையில் சாய்ந்தேன். மறு நாட்காலை குகையினுள் எங்கள் எல்லோரது நிலமையும் முதல் நாளை விடச் சற்று மன இறுக்கம் குறைந்து காணப்பட்டது. ஆயினும் நாங்கள் எங்களுக்குள் அவ்வளவாக அளவளாவிக் கொள்ளவில்லை. ஒருவருக்கொருவர் நம்பிக்கையற்ற பார்வைகளைப் பரிமாறிக்கொண்டோம்.

எனது உடுப்புப் பையைத் திறந்து பார்த்தேன். எனது சிறிய அல்பம் இருந்தது, அதிலுள்ள எனது ஐந்து சகோதர, சகோதரிகளின் புகைப்படங்களை ஆவலுடன் நீண்ட நேரமாகப் பார்த்தவண்ணம் இருந்தேன். நான் இவ்விதம் இருப்பதை அவர்கள் அறிந்திருப்பார்களா? அல்லது தொலைக்காட்சி மூலம் தெரிய வந்திருக்குமா? இவ்வாறாக மனம் பல வழிகளிலும் அங்கலாய்த்துக் கொண்டது. உடைகளை மாற்றிக் கொண்டு வெய்யிலின் அகோரத்தைக் குறைக்க வைக்கோலில் செய்யப்பட்ட தொப்பியைத் தலையில் அணிந்து கொண்டேன்.

ஜெகன்

மறுநாட்காலை கடத்தல்காரர்கள் எம்மைப் பிறிதொரு இடத்திற்கு அழைத்துச் சென்றனர். அவ்விடத்தில் நான் ஓர் ஒதுக்குப் புறமாகத் தரையிலமர்ந்து ஓர் நாவலைப் படிக்க ஆரம்பித்தேன். காலை நேரம் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. எவரோ சிலர் பிஸ்கட் வகைகளையும், குடிப்பதற்குப் பழரசமும் கொண்டு வந்தனர். பிஸ்கட்டுக்களைச் சாப்பிட்டு, பழரசத்தையும் குடித்தோம். வேறென்ன செய்வது, எமது உடற் சோர்வினை நீக்க வேண்டுமே!

குகைக்குள்ளேயே அடைந்து கிடப்பதை விடச் சற்று வெளிப்புறத்தே என்ன நடக்கின்றதென்பதை அவதானிக்கலாம் எனஎண்ணி, குகையை அண்டிய படி இருந்த குன்றின் மேல் ஏறி அங்கிருந்தபடி என் பார்வையைப் பரந்த வெளி மீது பாயவிட்டேன். நாங்கள் முதல்நாள் தங்க வைக்கப்பட்டிருந்த இடம், கண்ணுக்கெட்டிய தொலைவில் காட்சியளித்தது. அங்கே பல வாகனங்கள் வந்துபோய்க் கொண்டிருந்தன. 10 நிமிடங்களின் பின்னர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. நான் எனது கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் முற்பகல் 11மணி. நாங்கள் பதுங்கித் தாக்குதல் நடவடிக்கைக்குள் அகப்பட்டதில் இருந்து சரியாக 24 மணித்தியாலங்கள் கடந்திருந்தது. என் மனம் ஏதோ இனம் தெரியாத பீதியால் துவளத் தொடங்கியது.


யாரோ எங்களைக் காப்பாற்ற முயற்சிக்கின்றார்கள் போலத் தெரிகிறது என நான் கருதுகிறேன் என்று மற்றவர்களுக்குக் கூறினேன். எனினும் இவ்வாறான ஆட்கடத்தலின்போது பணயக்கைதிகளை ஆயுத மோதலின் மூலம் மீட்டெடுக்கும் முயற்சிகளின் போது அநேகமாகப் பணயக் கைதிகள் கொல்லப்படுவதையே நான் நன்கு அறிந்தவளாதலால் அரங்கேறப் போகும் எதிர் விளைவுகளை நினைக்கவே நெஞ்சம் துடிதுடித்தது.

வெடிச் சத்தங்களைக் கேட்ட கடத்தல்காரர்களுக்கு வியப்பாகவும், திகைப்பாகவும் இருந்தது. அவர்கள் எங்கள் எல்லோரையும் பதிவான மண் சுவர்களுக்குப் பின்னால் அமரச் செய்தார்கள். ஓர் எறிகணை எங்கள் தலைகளுக்கு மேலால் சென்று விழுந்து வெடித்தது. நாங்கள் நிலத்தில் விழுந்து படுத்தோம்.

ஒன்றுமட்டும் தெளிவாகப் புலனாகியது. மீட்புப் படையினருக்கும் கடத்தல்காரர்களுக்குமான ஆயுதச் சமரின் இடையில் நாங்கள் பலியாடுகள் போன்ற நிலைக்கு உள்ளாகிவிட்டோம் என்பது புரிந்தது.

அதனை நிஜமாக்குவது போல் எங்கள் அனைவரையும் கைகளை உயர்த்திய வண்ணம் அம் மண் சுவர்களின் மேல் ஏறி வரிசையாக நிற்கும்படி கடத்தல்காரர்கள் பணித்தார்கள். உண்மையில் அவர்கள் எங்களை மனிதக் கேடயங்களாகப் பாவித்தார்கள். துவக்குச் சூடுகள் சரமாரியாகக் கேட்டன. சீறிப்பாயும் சன்னங்கள், எறிகணைகள் எம்மைக்கடந்து சென்றன. எந்த நிமிடத்திலும் நாங்கள் அனைவரும் பிணமாகலாம் என எண்ணுவதைத் தவிர வேறெதனையும் எண்ணத் தோன்றவேயில்லை. (தொடரும்)

## தூண்டில் போடுபவர்களை அஞ்சலி செலுத்த வைத்த மீன்!



பென்சனின் இறப்பு இங்கிலாந்து உள்ள தூண்டில் மீன்பிடிப்பாளர்களை துயரத்தில் ஆழ்த்திவிட்டது. பென்சன் ஒரு அரிய வகை மீன்.பென்சனின் பெயர் இங்கிலாந்து மக்களுக்கு மிகவும் பரிச்சையமான ஒன்று. டன்சார் பகுதியில், எட்டு ஏக்கர் பரப்பளவில் பரந்துவிரிந்து கடல் போல காட்சியளிக்கும் கிங்பிஷர் ஏரியில் வாழ்ந்து வந்த பென்சன் கடந்த இருதினங்களுக்கு முன் இறந்து மிதந்தது. அதற்கு வயது 25. எடை 29 கிலோ. அதன் மதிப்பு 16 லட்சம்,


டோனி பிரிட்ஜ்பூட் என்ற தனிநபருக்குச் சொந்தமான இந்த ஏரியில் வேறு வகையான மீன்களோடு தான் பென்சனும் வாழ்ந்து வந்தது. வேடிக்கைப் பார்க்க வந்த யாரோ வேதிப்பொருள்கள் அதிகம் கலந்த உணவை ஏரியில் எறிந்திருக்கிறார்கள். அதை உண்ட பென்சன், சமிபாட்டுக்கோளாறு காரணமாக இறந்துவிட்டது. பென்சனைக் கொன்ற கொலையாளி தீவிரமாகத் தேடப்பட்டு வருகிறார்.




# பிச்சைக்காரருக்கு அடித்தது யோகம்


டெட் வில்லியம்ஸ் ஒரு போதைப் பிரியர். அமெரிக்காவில் உள்ள கொலம்பஸ் நகரம் இவரது வசிப்பிடம். ஒரு நாள் போதை இல்லாவிட்டாலும் இவரது உடம்பு கிடுகிடுத்து விடும். வீடு வாசல் கிடையாது. வானமே கூரை. சாலையே வீடு என இவரின் வாழ்க்கை கழிந்தது. வாழ்க்கைக்கு வழி தேடாவிட்டாலும் போதைக்கு பொருள் வேண்டும் அல்லவா? அதனால் தெருவில் பிச்சை எடுத்து போதைப் பசியை தீர்த்து வந்தார்.


சாலையில் வருவோர் போவோரிடம் எல்லாம் அம்மா... தாயே... என்று கெஞ்சிப் பிச்சை எடுப்பது இவரது வழக்கம். இவர் தோற்றம் பரதேசி மாதிரி இருந்தாலும் குரல் என்னவோ அரச கம்பீரம். அதனால் ஈர்க்கப்பட்ட பலர் இவருக்குப் பிச்சை போட்டு வந்தனர். இந்த நிலையில் ஒரு நாள்... 'கொலம்பஸ் டெஸ்பாட்ச்' என்ற பத்திரிகையின் காதுகளை இவரின் குரல் எட்டியது. அவ்வளவுதான்... மறுநாள் இவரின் படமும் இவரின் குரலும் வீடியோ மூலமாக பதிவுசெய்யப்பட்டு யுரியூப் வழியாக ரசிகர்களைச் சென்றடைந்தது.



காந்தம் போல் இழுக்கக்கூடிய கணீரென்ற இவரின் குரலுக்கு லட்சக்கணக்கான ரசிகர்கள் அடிமையாகிவிட்டனர். இந்தத் தெருவோரப் பிச்சைக்காரர் எல்லாராலும் ஈர்க்கப்படுகின்ற இச்சைக்காரராக மாறிவிட்டார்.

பின்னர் கொலம்பஸ் பத்திரிகையின் எப்.எம். ரேடியோ நிலையத்தில் டெட் வில்லியம்ஸ் அறிவிப்பாளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இப்போது திரும்பிய பக்கம் எல்லாம் இவருக்கு வேலை தேடி வந்து கொண்டிருக்கிறது. கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று சொல்வார்கள். இவருக்கு குரலைப் பிய்த்துக் கொண்டு கொடுத்திருக்கிறது.





# உலகக் கிண்ண பரிசுப் போட்டி

**சுடர் ஒளி நாளிதழை வாங்கிப் படித்து ரூபா 2 லட்சத்துக்கு மேல் ரொக்கப் பரிசை வெல்லுங்கள்**

சுடர் ஒளி

'சுடர் ஒளி'யின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் பரிசுப் போட்டி

## வெல்லப்போகும் அணி எது?

WHICH TEAM WILL WIN?

★ உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி சம்பந்தமான ஒவ்வொரு சுற்றிலும் கேட்கப்படும் வினாவுக்கான சரியான விடையை இப்பக்கத்தில் தரப்பட்டுள்ள கூப்பனில் தெளிவாக எழுதி எமது முகவர்களிடம் உள்ள சேகரிப்புப் பெட்டிகளில் இட்டு அல்லது எமக்கு தபால் அட்டையில் (போஸ்ட் காட்) அனுப்பி

| | | | |
|---|---|---|---|
| சுற்று 1 | காலிறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு – 15,000<br>2ஆம் பரிசு–10,000<br>3ஆம் பரிசு–5,000 | சுற்று 2 | அரையிறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு – 20,000<br>2ஆம் பரிசு–15,000<br>3ஆம் பரிசு–10,000 |
| சுற்று 3 | இறுதிப் போட்டி<br>1ஆம் பரிசு – 25,000<br>2ஆம் பரிசு–20,000<br>3ஆம் பரிசு–15,000 | சுற்று 4 | இறுதிப் போட்டி முடிவு<br>1ஆம் பரிசு – 30,000<br>2ஆம் பரிசு–25,000<br>3ஆம் பரிசு–20,000 |

இறுதிப் போட்டியின் நாயகன் மற்றும் தொடரின் நாயகன் பரிசு - 10,000

★ மேலும் 20 அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு 10 பேருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே பிரதிகளும், ஏனைய 10 பேருக்கும் புலமைச் சுடர் பிரதிகளும் இலவசமாக வழங்கப்படும்.

2,00,000 ரூபாவுக்கு மேல் வெகுமதியை வெல்லுங்கள்

சரியான எதிர்வு கூறலுக்கு மகத்தான ரொக்கப் பரிசுகள்

## அனுசரணையாளர்கள்

SONY BRAVIA
LCD TV
SINGER

Colombo International Nautical & Engineering College

THAMPA HOTEL & INN
Thampa Star Hotel
TP- 0247388010 5670262

சிலஸ்சன்

சம்மாந்துறை
ஹசனலி
UNP பிரதம அமைப்பாளர்
– சம்மாந்துறைத் தொகுதி –

கம்ப்யூட்டர் ருடே

தரம்-4, 5 மாணவர்களின் ஒரே தெரிவு
புலமைச் சுடர்

THAIMAHAN SECRETARIAL SERVICES

# CH-TIEFSTPREIS



DIABOLO
Komplette
Eckpolstergruppe
1490.-

Möbel Ferrari

Wässeristrasse 28
8340 Hinwil
Tel. 044 931 20 40
Fax. 044 931 20 49
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag bis Freitag
09.00 bis 20.00
Samstag
09.00 bis 18.00

0.0% Direkt Finanzierung

இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, மார்ச் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட